110

110

# BALA VACHAKAM

BOOK VIII

STANDARD VIII—FORM III

[TAMIL]

25 OCT 1944
MADRAS

T. S. UMAPATHY, B.A., L.T.

1944

THE MADRAS PREMIER CO.,
[...]TIONAL PUBLISHERS.
MADRAS.

TB
031 (8)
N44
146000

ANNAS 12½

# பால வாசகம்

## எட்டாம் புத்தகம்

25 OCT 1944

T. S. உமாபதி, B.A., L.T.
தலைமை ஆசிரியர்
நவாப் சி. அப்துல் ஹக்கீம் மத்தியதரப் பாடசாலை
சென்னை

மதராஸ் பிரீமியர் கம்பெனி
பதிப்பாளர்
7, சங்குராம செட்டி தெரு, சென்னை.

பதிப்புரிமை] 1944 [விலை அணா 10

| | | |
|---|---|---|
| First Impression | | 1939 |
| Second Impression (Revised) | | 1940 |
| Third Impression | | 1941 |
| Fourth Impression | | 1944 |


146010

*[Copyright reserved by the Publishers]*

25 OCT 1944

# முகவுரை

"பால வாசகம்" என்னும் மகுடம் புனைந்து வெளிப்போதரும் தமிழ்ப் பாடப் புத்தக வரிசையில் இஃது எட்டாம் புத்தகம். 1939ல் கல்வியதிகாரிகள் வெளியிட்டுள்ள பாட திட்டத்திற்கேற்ப இது எழுதப்பெற்றுள்ளது.

மாணவ மாணவிகளுக்குத் தமிழ் மொழியில் மிகுந்த பற்றுண்டாகும் வகையில், தமிழ் நாட்டின் பண்டைப் பிரிவுகள், வேந்தர்கள், புலவர்கள், காவியங்கள் முதலியவைகளைப் பற்றிய பாடங்கள் இதன்கண் முதலிடம் பெற்றுள்ளன. இவையன்றிச் சிறுவர் சிறுமியர்கட்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய கட்டுக் கதைகள், இயற்கை வினோதங்கள், துணுக்குறு நிகழ்ச்சிகள் முதலியவைகளும் இதிற் சேர்க்கப்பெற்றுள்ளன.

மேலும், பாட திட்டத்தில் ஒவ்வொரு வகுப்புக்கும் வேண்டிய இலக்கண பாடங்களை வகுத்துக் கூறாமல் தொகுத்துக் கூறியுள்ளமையின், வகுப்புக்கியைந்தவையும், இன்றியமையாதவையுமான இலக்கண பாடங்கள் மட்டுமே இதில் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் மொழிப் பயிற்சியும் இலக்கணப் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளன. பாடங்களுக்கு இன்றியமையாத பல படங்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

இச்சிறு நூலில் தரப்பெற்றுள்ள பயிற்சிகளோடும் இலக்கண பாடங்களோடும் அமையாமல், தகுதியுடைய பல பயிற்சிகளை

மேலும் அளித்துச் சிறுவர் சிறுமியர்க்குத் தமிழ் மொழியில் செவ்விய பயிற்சி யளித்தல் வேண்டும் என்பதே, ஆசிரியர்களுக்கு எனது வேண்டுகோளாகும்.

இப்புத்தகத்திற்குச் சில பாடங்களை மனமுவந்து உதவிய அன்பர்களாகிய வித்துவான் அ. கணபதி பிள்ளை அவர்களுக்கும், பேராசிரியர் K. சுவாமிநாதன் M.A., B.L., அவர்களுக்கும் ராவ் சாஹிப் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை B.A., B.L., அவர்களுக்கும். டாக்டர் ஸி. மீனாட்சி M.A., Ph.D., அவர்களுக்கும், திரு. M. சண்முகசுந்தர முதலியார் M.A., L.T., அவர்களுக்கும், வித்துவான் ம. மாசிலாமணி அவர்கட்கும், வித்துவான் தாணு-வம்மாள் அவர்களுக்கும் என் நன்றி உறியதாகும். அன்றியும் தமிழ் நாட்டிற்குத் தமிழ்த் தொண்டு புரிந்து வரும் 'கலைமகள்', 'தமிழ்ப் பொழில்' ஆகிய திங்கள் வெளியீடுகளினின்-றும் சில கட்டுரைகளைப் பயன்படுத்திக்கொள்ள அநுமதி யளித்த அவற்றின் உரிமையாளர்களுக்கும் என் நன்றியை உரிமைப்படுத்துகிறேன். இப்புத்தகத்துக்குச் சில படங்கள் உதவிய கேசரி அச்சுச் சாலையின் உரிமையாளர் திரு. சுந்தரம் ஐயர் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக. இப்புத்தகத்-தைப் பரிசோதித்து உதவிய நண்பர் வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களுக்கும் மிகவும் கடமைப்பட்டவனவேன்.

11—9—'44
சென்னை.

த. சே. உமாபதி.

# பொருளடக்கம்

## உரைநடைப்பகுதி


| பாடம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் மொழி | 1 |
| 2. | சோர நாடு | 2 |
| 3. | எங்கள் தமிழ்ப் பண்டிதர் | 6 |
| 4. | கழுகு மலை நகர் வளம் | 13 |
| 5. | அச்சு வித்தையின் வரலாறு | 14 |
| 6. | கங்கை நதி | 22 |
| 7. | வித்துவான் தியாகராச செட்டியார் | 30 |
| 8. | நாஞ்சி நாட்டுச் சிறப்பு | 43 |
| 9. | அகல்யா பாய் | 45 |
| 10. | மனோன்மணீயம் | 56 |
| 11. | இமய மலை | 63 |
| 12. | சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை | 69 |
| 13. | பொரிமாத் தோண்டி | 72 |
| 14. | மங்கையர்க்கரசியார் | 74 |
| 15. | கிருஷ்ணனும் அருச்சுனனும் | 88 |
| 16. | உலக அதிசயங்கள் ஏழு-I | 90 |
| 17. | உலக அதிசயங்கள் ஏழு-II | 96 |
| 18. | புகழேந்திப்புலவரும் ஒட்டக்கூத்தரும் | 101 |
| 19. | ஆகாய விமானத்தின் வரலாறு | 120 |
| 20. | இராவணனும் அனுமானும் | 127 |
| 21. | டேவிட் லிவிங்ஸ்டன் | 130 |
| 22. | சீவகன் | 135 |
| 23. | எவரெஷ்டு சிகரம் அடைய முயற்சி | 142 |
| 24. | முருகன் சிறு விளையாடல் | 146 |
| 25. | ஆஸ்திரேலியாவின் அதிசயங்கள் | 153 |

மேலும் அளித்துச் சிறுவர் சிறுமியர்க்குத் தமிழ் மொழியில் செவ்விய பயிற்சி யளித்தல் வேண்டும் என்பதே, ஆசிரியர்களுக்கு எனது வேண்டுகோளாகும்.

இப்புத்தகத்திற்குச் சில பாடங்களை மனமுவந்து உதவிய அன்பர்களாகிய வித்துவான் அ. கணபதி பிள்ளை அவர்களுக்கும், பேராசிரியர் K. சுவாமிநாதன் M.A., B.L., அவர்களுக்கும் ராவ் சாஹிப் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை B.A., B.L., அவர்களுக்கும். டாக்டர் வி. மீனுட்சி M.A., Ph.D., அவர்களுக்கும், திரு. M. சண்முகசுந்தர முதலியார் M.A., L.T., அவர்களுக்கும், வித்துவான் ம. மாசிலாமணி அவர்கட்கும், வித்துவான் தாணு-வம்மாள் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும். அன்றியும் தமிழ் நாட்டிற்குத் தமிழ்த் தொண்டு புரிந்து வரும் 'கலை மகள்', 'தமிழ்ப் பொழில்' ஆகிய திங்கள் வெளியீடுகளினின்றும் சில கட்டுரைகளைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி யளித்த அவற்றின் உரிமையாளர்களுக்கும் என் நன்றியை உரிமைப்படுத்துகிறேன். இப்புத்தகத்துக்குச் சில படங்கள் உதவிய கேசரி அச்சுச் சாலையின் உரிமையாளர் திரு. சுந்தரம் ஐயர் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக. இப்புத்தகத்-தைப் பரிசோதித்து உதவிய நண்பர் வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களுக்கும் மிகவும் கடமைப்பட்டவனுவேன்.

11—9—'44
சென்னை.

த. சே. உமாபதி.

# பொருளடக்கம்

## உரைநடைப்பகுதி


| பாடம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் மொழி | 1 |
| 2. | சோர நாடு | 2 |
| 3. | எங்கள் தமிழ்ப் பண்டிதர் | 6 |
| 4. | கழுகு மலை நகர் வளம் | 13 |
| 5. | அச்சு வித்தையின் வரலாறு | 14 |
| 6. | கங்கை நதி | 22 |
| 7. | வித்துவான் தியாகராச செட்டியார் | 30 |
| 8. | நாஞ்சி நாட்டுச் சிறப்பு | 43 |
| 9. | அகல்யா பாய் | 45 |
| 10. | மனோன்மணீயம் | 56 |
| 11. | இமயமலை | 63 |
| 12. | சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை | 69 |
| 13. | பொரிமாத் தோண்டி | 72 |
| 14. | மங்கையர்க்கரசியார் | 74 |
| 15. | கிருஷ்ணனும் அருச்சுனனும் | 88 |
| 16. | உலக அதிசயங்கள் ஏழு—I | 90 |
| 17. | உலக அதிசயங்கள் ஏழு—II | 96 |
| 18. | புகழேந்திப்புலவரும் ஒட்டக்கூத்தரும் | 101 |
| 19. | ஆகாய விமானத்தின் வரலாறு | 120 |
| 20. | இராவணனும் அனுமானும் | 127 |
| 21. | டேவிட் லிவிங்ஸ்டன் | 130 |
| 22. | சீவகன் | 135 |
| 23. | எவரெஷ்டு சிகரம் அடைய முயற்சி | 142 |
| 24. | முருகன் சிறு விளையாடல் | 146 |
| 25. | ஆஸ்திரேலியாவின் அதிசயங்கள் | 153 |

# செய்யுட்பகுதி


| | | |
|---|---|---|
| I. | கடவுள் வணக்கம் ... ... | 161 |
| II. | தமிழ் மொழி வாழ்த்து ... ... | 163 |
| III. | சங்கச் செய்யுட்கள் ... ... | 164 |
| IV. | தனிப்பாடல்கள் ... ... | 166 |
| V. | சதகத் திரட்டு ... ... | 168 |
| VI. | பிள்ளைத்தமிழ்த் திரட்டு ... ... | 172 |
| VII. | சிட்டுக்கவி ... ... | 174 |
| VIII. | பள்ளு ... ... | 176 |
| IX. | குறவஞ்சி ... ... | 177 |
| X. | நீதி நூல்கள் ... ... | 178 |

# பால வாசகம்

## எட்டாம் புத்தகம்

## 1. தமிழ் மொழி

1. மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் பெற்றே.
அறைகடல் வரைப்பிற் பாடை அனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை உள்நினைந் தேத்தல் செய்வாம்

—சீகாளத்திப் புராணம்

2. கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ!

—திருவிளையாடற் புராணம்

3. இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீஇயினா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ!

4. வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி, அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகெலாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்எனில்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே கணித்தறிவார்!

5. தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
உண்ட பாலனை அழைத்ததும், என்புபெண் ணுருவாக்
கண்டதும், மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ? மறுபுலச் சொற்களோ? சாற்றீர்.

—காஞ்சிப் புராணம்

# 2. சேர நாடு

[ வித்துவான். அ. கணபதி பிள்ளை அவர்கள் ]

1. பண்டு தமிழ் நாட்டிலிருந்த முப்பெரு நாடுகளுள் சேர நாடே மிகப் பழைமை வாய்ந்தது ஆகும். இது மேலைக் கடற்கரையோரத்திலிருந்த மலை நாடாகும். இந்நாட்டில் காடுகளும், மலைகளும், குன்றுகளுமே மிக்கிருந்தன. எனவே, இங்கு மலைபடு பொருள்களாகிய அகில், சந்தனம் முதலிய வாசனைப் பொருள்களும், தினை, சாமை, தேன் முதலிய உணவுப் பொருள்களும் கிடைத்தன. 'மலைநாடு வேழமுடைத்து' என்று இந்நாட்டைச் சிறப்பித்துக் கூறுகின்றனர். இதனால் இங்கு யானைகள் மிகுதியாய் இருந்தன என்பது தெரிகிறது. இன்றும் மலையாள நாட்டில் யானைகள் அதிகமாய் இருப்பதை நாம் காண்கின்றோம்.

2. இம்மலையாள நாடு, திருவாங்கூர், கொச்சி, கன்னடம், சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்கள் ஆகிய இவைகள் சேர்ந்ததே அக்காலத்தில் சேர நாடு என வழங்கப்பட்டு வந்த நாடாகும். இந்நாட்டைப் பெரியாறு, பொருநை என்ற இரண்டு ஆறுகள் வளம்படுத்தி வந்தன. ஏன்? தமிழ் நாட்டில் பாயும் பெரும்பாலான நதிகளும் இந்நாட்டு மலைகளிலேயே தோன்றுவன.

3. சேர நாடு மேலைக் கடற்கரை ஓரத்திலுள்ளது என்று முன்பே சொன்னோமல்லவா? அங்குள்ள தொண்டி, முசிரி என்னும் இரண்டு நகரங்களும் இரண்டு பெரிய துறைமுகங்களாயிருந்தன. வெளிநாடுகளுடன் இந்நாட்டார் வாணிகம் செய்து வந்தனர். பதின்மூன்றும் நூற்றாண்டில் அரேபியாவுடன் கடல் வழியாக இந்நாட்டார் வியாபாரம் செய்து வந்தனர் என்பதைச் சரித்திர வாயிலாக அறிகின்றோம்.

4. அக்காலத்தில் இந்நாட்டை வந்து பார்த்துப்போன ஐரோப்பிய ஆசிரியர்களான பிளினி, தாலமி முதலியோர் இந்நாட்டைப்பற்றியும் இதன் இயற்கை வளம், மக்கள் நாகரிகம் ஆகியவைகளைப்பற்றியும் மிகச் சிறப்பாக வரைந்துள்ளனர். பேரிப்புளுஸ் என்னும் ஆராய்ச்சி நூலை எழுதிய மேல்நாட்டு ஆசிரியரொருவர், அந்நூலில் சேர நாட்டின் சிறப்பைப்பற்றி மிக விளக்கமாகத் தெரிவித்திருக்கின்றார்.

5. சேர நாட்டில் செங்கோல் செலுத்திய சேர அரசர்களில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன், பெருஞ்சேரலாதன், சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் ஆகியோர் முக்கியமானவராவர்.

6. இவர்களில் சேரன் செங்குட்டுவன் வடநாட்டில் இமயம் வரை படையெடுத்துச் சென்று, தமிழரசர்களை இகழ்ந்த கனக விசயர் என்ற இரு வடவாரிய அரசரை வென்றார்; இமயத்திலிருந்து கல் எடுத்து வந்து கண்ணகிக்குச் சிலை செய்து, கோயில் எடுப்பித்து, விழாச் செய்தார். இவர் சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகளின் தமையனார். இவருடைய தந்தையாரே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனென்பார். இவர் சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்துச் சேர நாட்டை ஆண்ட அரசராவர்.

7. பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் சேரநாட்டை ஆண்டுகொண்டிருந்த காலத்துத்தான் வடக்கே கௌரவர்கட்கும் பாண்டவர்கட்கும் நாட்டுரிமை காரணமாகப் போர் எழுந்தது. அக்காலத்தில் இவர் பாண்டவர்களுக்குத் துணையாகத் தமது பெரும்படையுடன் சென்று போரில் பங்கெடுத்துக்கொண்டார்; கௌரவர்களை எதிர்த்து வீரமுடன் பொருதார். அப்போர் பதினெட்டு நாட்கள்வரை நடைபெற்றது. அப்பதினெட்டு நாட்களிலும் பாண்டவர் படை முழுமைக்கும் இவரே சோறு

அளித்துக் காப்பாற்றினர்; இதனல் பெருஞ்சோற்று உதியன் என்ற சிறப்புப் பெயரையும் பெற்ருர். இவருடைய இயற்பெயர் உதியன் சேரலாதன் என்பதே.

8. இத்தகைய சீரும் சிறப்புமுற்ற நாடு ஒழுங்கான ஆட்சியின்மையாலும், பிற்காலச் சேர அரசர்களின் வலியற்ற தன்மையாலும் பிற்காலத்தில் அழிந்தது. இந்நாட்டின் பெரும்பகுதி மலையாள நாடாயிற்று; மற்றப் பகுதி கன்னட தேசமாயிற்று. தமிழ் அரசு புரிந்த ஒரு நாட்டில் இன்று தமிழருக்கே இடமில்லாது போயிற்று. தமிழ் நாடு ஒரு பெரிய நாட்டை இழந்தது; வரவர அளவில் சுருங்கி வருகின்றது. தமிழர்களின் நீண்ட துயிலே இதற்குக் காரணமாகும்; தமிழர் துயில் நீத்து எழுந்து, தம் நிலையை நோக்க வேண்டும்; தமிழையும் தமிழ் நாட்டையும் முன்னேற்ற வேண்டும். இன்றேல், தமிழ்நாட்டைச் சித்திரத்தில்கூடக் காண்பது அரிதாகிவிடும்.

பயிற்சி:

I. விடையெழுதுக :—

1. சேர நாடு எப்பொருள்களுக்குப் பேர்பெற்றது?

2. இந்நாட்டின் சிறப்புகளைக் கூறும் மேனுட்டு ஆசிரியர் யாவர்? நூல்கள் யாவை?

3. சேர நாட்டை ஆண்ட மூன்று மன்னர்களின் பெயர்களை எழுதுக

4. சேரன் செங்குட்டுவனைப்பற்றியும், பெருஞ்சோற்று உதியன் சேரலாதனைப்பற்றியும் தனித்தனி மும்மூன்று வாக்கியங்கள் எழுதுக.

II. 1. 'மலை நாடு வேழமுடைத்து'—விவரிக்க.

2. இப்பாடத்தில் உள்ள 6-ஆம், 7-ஆம் பத்திகளில் உள்ள விஷயத்தைச் சுருக்கி எழுதுக.

3. முதற்பத்தியில் உள்ள முதல் இரண்டு வாக்கியங்களைப் பிரித்து எழுதுக.

4. மூன்றும் பத்தியில் உள்ள கடைசி வாக்கியத்தைச் சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

## இலக்கணம்—எழுத்து

### பழைய பாடத்தின் தொகுப்புரை

ஒலியின் வரி வடிவே எழுத்து. அது முதலெழுத்து சார்பெழுத்து என இரு வகைப்படும். உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் முதலெழுத்து. உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் உயிர்மெய், ஆய்தம் முதலியன சார்பெழுத்து எனப்படும்.

உயிரெழுத்துக் குறில், நெடில் என இருவகைத்து. அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறில்; ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நெடில்.

மெய்யெழுத்து வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைத்து. க், ச், ட், த், ப், ற், என்பவை வல்லினம். ங், ஞ், ண், ந், ம், ன், என்பவை மெல்லினம். ய், ர், ல், வ், ழ், ள், என்பவை இடையினம்.

அ, இ, உ, என்னும் குறில் மூன்றும் மொழியின் முதலில் நின்று ஒரு பொருளைச் சுட்டிக் காட்டினால், சுட்டெழுத்துக்கள் எனப்படும்.

எ, யா என்பவை மொழியின் முதலிலும், ஆ, ஓ என்பவை மொழியின் ஈற்றிலும், ஏ மொழியின் முதல், ஈறு ஆகிய இரண்டு இடங்களிலும் நின்று வினாப் பொருள் தரின், வினாவெழுத்தாம்.

பிறப்பு, ஒலி, உருவங்களில் ஒன்றுக்கொன்று சம்பந்தம் உடையவை இனவெழுத்து. ஐ, ஔ என்னும் இரண்டிற்கும் முறையே இ, உ இனம்; மற்ற உயிரெழுத்துக்களில் ஒவ்வொரு குறிலுக்கும் அதை அடுத்துள்ள நெடில் இனம்.

மெய்யெழுத்துப் பதினெட்டில் வல்லினம் ஆறுக்கும் மெல்லினம் ஆறும் இனம். இடையினம் ஆறும் ஓர் இனம்.

# 3. எங்கள் தமிழ்ப் பண்டிதர்

[திரு. கே. சுவாமிநாதன் அவர்கள், எம். ஏ., பி. எல்.,]

1. நான் பிரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்தபோது ஐயரவர்கள் (Dr. உ. வே. சாமிநாத ஐயர்) தான் தமிழ்ப் பண்டிதர். இவருடைய ஆழ்ந்த படிப்பும் தமிழிலக்கியத்துக்கு இவர் செய்த 'ராக்ஷஸ' காரியங்களும், முதல் வகுப்பு மாணவருக்கு எப்படித் தெரியும்!



2. கழுத்தை மறைக்கும் சட்டையும், சுவரைப் பாரென்றால், கதவைப் பார்க்கும் (சற்றுத் துவண்ட) தலைப்பாகையும் படபடவென்று இங்கிலீஷ் பேசாமையும் ஒருவரிடம் ஒன்று சேர்ந்தால் அவரை மதிப்பதெப்படி?

3. இவையெல்லாம் போகட்டும்; தமிழ் கூட இந்த ஆசாமிக்கு நன்றாய்த் தெரியாதோ!' என்ற சந்தேகமும் உண்டாயிற்று. அதுவரை எங்களுக்குத் தெரிந்த தமிழ்ப் பண்டிதர்கள் ஒருவிதக் கம்பீரமான, பொருளற்ற தமிழைப் பேசி, ஒட்டக்கூத்தர், காளமேகம் முதலிய பெரியாரின் பல்-

லொடிக்கும் செய்யுள், உதடு ஒட்டாத செய்யுள், சிலேடைமிகுந்த செய்யுள் இவற்றைக் கக்கி, எங்களைப் பிரமிக்கச் செய்ததுண்டு; தமிழ் வகுப்பில் இந்த இடி முழக்கத்தைக் கேட்டுச் சிலராவது பய பக்தியுடன் நடந்ததுண்டு. (இவையெல்லாம் பழைய சரித்திரம். இப்பொழுது தமிழ்ப் பண்டிதர்களுங்கூட வெள்ளைத் தமிழ் பேசுவதாகக் கேள்வி.)

4. ஆனால், இத்தக் கிழவரோ (அப்பொழுதே இவர் கிழவர்தான்), மெதுவாக, மிக எளிய இனிய நடையில், எல்லோருக்கும் பொருள் விளங்கிவிடும் வகையில் பேசினார்; கரடு முரடான பழைய செய்யுட்களை எங்கள்மேல் வீசியெறிந்து எங்களை ஹிம்ஸித்துப் பயமுறுத்தச் சக்தி அற்றவர்போன்றிருந்தார். உண்மையில் செந்தமிழ் தெரிந்தவராயின், இப்படி 'அப்பாவி'யாய் இருப்பாரா? இவ்விதச் 'சாதாரணப் பேச்சு' இருப்பானேன்? இன்று 'கல்கி'யின் கை வலிமையினால் தமிழுலகம் முழுவதும் பரவியிருக்கும் சாதாரண நடையின் இரகசியத்தை ஐயரவர்கள் மாணவர்களுக்கு அப்போதே வெளியிட்டார். ஆனால், அதன் அருமையை அறிந்து, அதைப் போற்றி அனுபவிப்பதற்குக் காலம் வரவில்லை; எங்களுக்கும் சரி, உலகத்துக்கும் சரி, தக்க காலம் வரவில்லை.

5. அந்த வருஷம் ஜூலை மாதம் இரண்டாம் வாரம் புதன் கிழமை காலை 10-30 மணிக்கு, செங்கோடையனும் நானும் ஒரு முடிவு செய்தோம்; அதாவது, 'இவர் முற்றிலும் பிரயோஜனமில்லை,' என்பதே. (S. S. L. C. இங்கிலீஷில் எங்கள் இருவருக்கும் நல்ல மார்க்கு வந்துவிட்டதால், எங்களுக்குள் சுய மதிப்பும் பரஸ்பர கௌரவமும் அதிகம்.)

6. ஆனால், வெகு சீக்கிரத்தில் இந்த முடிவு மாறுதல் அடைந்தது. முதலாவது, ஹண்டர் துரை இவருக்குக் காட்டும் மரியாதையைப் பார்த்ததில், 'இந்தப் பண்டிதரிடம் ஏதோ

சரக்கு இருக்கும்! என்ற நம்பிக்கை பிறந்தது. மேலும், தமிழ்ப் பண்டிதர்களிடம் நாங்கள் எதிர்பார்த்த குணங்கள் இவரிடம் காணவில்லையென்றாலும், இங்கிலீஷ் அல்லது சரித்திர உபாத்தி-பாயர்களுக்குக்கூட இல்லாத சாதுரியமும், கேலிப் பேச்சும், இலௌகிக அறிவும் இவரிடம் புலப்பட்டன. மாணவர் ஒவ்வொரு-வரின் பேர், குடும்பம்முதலிய வரலாறுகளைக் கேட்டு, ஒவ்வொரு-வருடைய தகப்பனார், சிற்றப்பா, பெரியப்பா, தாத்தா முதலிய-வரைப்பற்றியும், அவர்கள் ஊரோ, கிராமமோ சரித்திரத்திலும் பாட்டிலும் பெற்ற பேரைப் பற்றியும், இன்னும் என்ன என்ன-வோ ஸ்வாரஸ்யமான விஷயங்களைப்பற்றியும் அவிழ்த்துவிட்டார். திவான் சேஷைய சாஸ்திரி முதல், மாங்குடிக்கு நாலு மைல் தூரத்திலுள்ள சுரைக்காயூர்க் கிராம முன்ஸிப்பு முத்துசாமி பிள்ளை வரை, நாங்கள் பேர் சொன்ன நபர்கள் எல்லாரும் தமக்கு நெருங்கிய சிநேகிதர்கள் என்றும், தமிழ் நாடு முழுவதிலும் தமக்குத் தெரியாத கிராமமாவது, மிராசுதாராவது, உத்தி-யோகஸ்தராவது இல்லை, இருந்திருக்கவும் முடியாது என்றும் சந்தேகந் தீர நிரூபித்துவிட்டார். புத்தியுள்ள மாணவர்கள் இதை உணர்ந்து, அன்று முதல் இவர் வகுப்பில் வெகு மரி-யாதையாய் நடந்துகொண்டார்கள். கர்ப்பூர வாசனை தெரி-யாத வேறு சிலர், சில சமயம் 'வாலையாட்ட' முயன்றால், அவர்களை அடக்குவதில் நம் ஐயரவர்கள் பல நுட்ப முறை-களைக் கையாளுவார். கடிந்து பேசாமல், பழுத்த வாழைப் பழத்தில் கூர்மையான ஊசியை ஏற்றுவது போல, அழகான இரண்டொரு வார்த்தைகளில் ஆளை அழச் செய்துவிடுவார். "உன் தமையன் வகுப்பில் வெகு வினயமாயிருப்பான்; ஆனால், அவன் படித்தவன்," என்று எனது நண்பனொருவ-னைப் பார்த்து இவர் சொன்னது இன்னும் ஞாபகத்திலிருக்-கிறது. முக்கியமாய்—(அவையெல்லாம் உண்மையோ, கட்-டுக் கதையோ, எனக்குத் தெரியாது)—ப, சம்பந்த முதலியாரை நாயகராகவுடைய கதைகளைப் பிரயோகித்தே எங்களில் பல-

ரைக் கைவசப்படுத்திவிட்டார். பழைய மாணவர் எல்லாரிடத்திலும் இவருக்கு மிக்க அன்பு உண்டு; என்றாலும், எனக்குத் தெரிந்தமட்டில் இ. வை. அனந்தராமையரிடத்திலும், ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியாரிடத்திலும் ஒரு விசேஷ அபிமானம் வைத்திருப்பதாகவே சொல்லலாம்.

7. ஐயரவர்கள் வெளியிட்டிருக்கும் தமிழ் நூல்களின் தொகையையும், அவற்றின் இலக்கியச் சிறப்பையும், அவற்றினுள் பொழிந்து கிடக்கும் சரித்திரச் சாக்ஷியங்களையும் கருதுங்கால், தமிழுருக்கு இவர் ஒருவர் செய்திருக்கும் தொண்டு, எவரும் எந்தப் பாஷைக்கும் எக்காலத்திலும் செய்ததில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். கான்ஸ்டாண்டிநோப்பில் (Constantinople) நகரிலிருந்து தப்பியோடும் கிரேக்க சாஸ்திரிகள் இத்தாலியா தேசத்திற்குக் கொணர்ந்த ஏடுகளே ஐரோப்பா புனர் ஜன்மம் (Renaissance) பெற்றதற்கு ஒரு முக்கிய காரணமென்பர். பாரதியாருக்குக் கவிதையிலும், தமிழரனைவருக்குமே வாழ்க்கையிலும் உயிரும், உத்ஸாகமும் ஊட்டித் தமிழ் நாட்டுக்குப் புனர் ஜன்மம் அளித்தவர் இவரே. எத்தனையோ புலவர்களும், கல்விக் கழகங்களும், அரச குடும்பங்களும் ஒன்று சேர்ந்து, நூறு வருஷ காலத்தில் நடத்தி வைத்த ஒரு பெரிய காரியத்தை, இந்தத் தமிழர் ஒருவரே செய்து முடித்திருக்கிறார்.

8. இவர் செய்த தொண்டின் பரிமாணத்தைக் கணிக்க ஓர் உபமானம் சொல்லலாம்: 1870-ஆம் வருஷத்தில் பியோஉல்ப் (Beowulf) என்ற காவியமும், சாஸர், ஸ்பென்ஸர், ஷேக்ஸ்பியர் (Chaucer, Spencer, Shakespeare) என்ற கவிகளின் நூல்களும் பதிக்கப்படவில்லை என்றும், ஏடுகளிலே அங்குமிங்கும் சிதறிக் கிடந்தன என்றும் வைத்துக்கொள்ளுவோம். மில்டன் (Milton) ஜான்ஸன் (Johnson) முதலிய பிற்காலத்திய நூலாசிரியர் பிரஸ்தாபிப்பதாலும், சில வாக்கியங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுவதாலுமாத்திரமே, அந்த ஆதி

கவிகளின் பேர்களும் நூல்களும் சிலர் காதில் விழுவதாக வைத்துக்கொள்ளுவோம். சென்ற அறுபது வருஷத்தில் ஆங்கிலேய வித்துவான் ஒருவர் தோன்றி, தன்னந்தனிமையாய் அப்பழைய கால நூல்கள் அத்தனையும் சாஸ்திரோக்தமாய், முற்றும் பிழையறப் பதிப்பித்து ஆங்கிலேயருக்குத் தந்ததாக வைத்துக்கொள்ளுவோம்.—மேல் நாட்டு ஜனங்களிடம் பல நூற்றாண்டுகளாக இவ்வளவு உபேக்ஷையும் குடி கொண்டிராது; வேறொரு வித்துவானிடம் இவ்வளவு பாண்டித்தியமும், ஊக்கமும், உத்ஸாகமும், விடா முயற்சியும், புத்திக் கூர்மையும், இலௌகிக ஞானமும் ஒன்று கூடி இரா. (ஆனால், இஃது உவமானந்தானே?)—இப்படி ஒரு வித்துவான் செய்திருந்தால், மேல் நாட்டார் அவருக்கு என்னதான் கைம்மாறு செய்ய மாட்டார்?

9. என்ன செயவார்கள் என்று ஊகிப்பானேன்? ஆயிரம் வருஷங்களுக்கு முன் ஐரோப்பா முழுவதும் சர்வகலாசாலைகள் கிளம்பினவே! ஏன்? யாரை முன்னிட்டுக் கிளம்பின? ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், பாரிஸ் (Oxford, Cambridge, Paris-என்ற சர்வகலாச்சாலைகளெல்லாம் இவரைப் போன்ற 'மகாமகோபாத்தியாயர்'களை அண்டியன்றோ பிழைத்தன? —கலை மகள்

பயிற்சி:

I. விடையெழுதுக:—

1. இக்கட்டுரையின் ஆசிரியர் யார்?

2. பழங்காலத்துத் தமிழ்ப் பண்டிதர்களைப்பற்றி இவர் கூறுவது யாது?

3. இவரும் செங்கோடையனும் சாமிநாத ஐயரைப் பற்றிச் செய்துகொண்ட முடிவை மாற்றக் காரணம் என்ன?

4. சாமிநாத ஐயரிடம் இருந்த விசேஷ குணங்கள் யாவை?

5. ஐயரவர்கள் தமிழுக்குச் செய்துள்ள தொண்டு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது ?

II. 1. மூன்றாவது பத்தியில் உள்ள இரண்டாம் வாக்கியத்தைப் பிரித்துச் சிறு வாக்கியங்களாக எழுதுக.

2. ஆறாவது பத்தியில் உள்ள வாக்கியத்தை 'இந்த முடிவு' என்னுந் தொடரிலிருந்து ஆரம்பித்து எழுதுக.

## இலக்கணம்—குற்றியலுகரம்

ஒரு குறிலினாலும், இரண்டு குறிலினாலும் ஆக்கப்படாத மொழியின் கடைசியில் உள்ள வல்லின மெய்யின்மேல் ஏறிய உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

குறிப்பு :—1. தனக்கு இயல்பான ஓசை அளவில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

2. மொழியின் கடைசியில் வல்லெழுத்தை ஊர்ந்து வரும் உகரம் மட்டுமே ஒலியில் குறுகும். மற்ற உகரங்கள் எவ்விடத்தும் குறுகுவதில்லை.

### குற்றியலுகரத்தின் வகை :

#### 1. நெடிற்றொடர்க் குற்றியலுகரம்

தனி நெட்டெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

உதாரணம் :—பாகு—கு
ஆடு—டு

குறிப்பு:—நெடிற்றொடர்க் குற்றியலுகரம் இரண்டெழுத்து மொழியாகவே இருக்கும்.

#### 2. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உதாரணம் :—எஃகு—கு
அஃது—து

## 3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

உயிர் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உதாரணம்:—எருது—து
கயிறு—று

குறிப்பு:—இவற்றில் ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தைப் பிரித்தால், (ர் + உ), (ய் + இ) என்று நிற்றல் காண்க. அங்ஙனம் நிற்குங்கால் ஈற்றெழுத்துக்கு அயலில் நிற்கும் எழுத்து உயிரெழுத்தேயாதலை உணர்க.

## 4. வன்றொடர்க் குற்றியலுகரம்

வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வருவது வன்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உதாரணம் :—அச்சு—சு
தட்டு—டு

## 5. மென்றொடர்க் குற்றியலுகரம்

மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் மென்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உதாரணம் :—பஞ்சு—சு
வண்டு—டு

## 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம்

இடையின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உதாரணம் :—போழ்து—து
மார்பு—பு

குறிப்பு :—ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தை நோக்கியே குற்றியலுகரத்தின் தொடர் கூறுதல் வேண்டும்.

# 4. கழுகு மலை நகர் வளம்

[இராகம்—காப்பி ; தாளம்—ஆதி]

1. தெள்ளுதமி ழுக்குதவு சீலன் தமிழ்
செப்பண்ணு மலைக்குமனு கூலன் வளர்
செழியப்பு கழ்விளைத்த கழுகும லைவளத்தைத்
தேனே ! சொல்லு வேனே :

2. வெள்ளிமலை யொத்தபல மேடை முடி
மீதினிலே கட்டுகொடி யாடை அந்த
வெய்யவன் நடத்திவரும் துய்யவிர தப்பரியும்
விலகும் படி யிலகும் ;

* * *

3. கத்துகட லொத்தகடை வீதி முன்பு
கட்டுதர ளப்பந்தலின் சோதி எங்கும்
காட்டுவதால் ஈரிரண்டு கோட்டுமத யானையதன்
களிறும் நிறம் வெளிறும் ;

4. முத்தமிழ்சேர் வித்வஜனக் கூட்டம் கலை
முற்றிலும் உணர்ந்திடுங்கொண் டாட்டம் நெஞ்சில்
முன்னுகின்ற போதுதொறும் தென்மலையில் மேவுகுறு
முனிக்கும் அச்சம் சனிக்கும் ;

* * *

5. முள்ளியெழு வெள்ளிமலை மடங்கும் படி
முற்றிலும் விளைந்த அகழ்க் கிடங்கும் பல
சொர்ணமலை போல்மதிலும் மின்னுவதி னாலேபுகழ்
தோன்றும் லோகம் மூன்றும் ;

6. கள்ளவிழ் கடப்பமலர் வாசன் குறக்
கன்னியை விரும்பிடும்வில் வாசன் வளர்
கழுகும லைநகரின் வளமையென் நாவிலடங்
காதே மட மாதே !

காவடிச் சிந்து] [அண்ணாமலை ரெட்டியார்

பயிற்சி :

1. இக்காவடிச் சிந்தில் அமைந்துள்ள விஷயத்தை உங்கள் சொந்த மொழிகளால் வசன நடையில் எழுதுக.

2. இப்பாட்டின் இரண்டாம் அடியில் உள்ள விஷயத்தை ஒரே வாக்கியத்தில் எழுதுக.

---

## 5. அச்சு வித்தையின் வரலாறு

[திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள், B.A., B.L.,]

1. கல்வியைப் பரப்புவதற்குரிய சாதனங்களில் அச்சுப் புத்தகங்கள் மிகச் சிறந்தன. ஆண்டுதோறும் ஆயிரக் கணக்கான புத்தகங்கள் வெளி வருகின்றன. அவை விரித்துணர்த்தும் பொருள்களும் பல வேறு வகைப்பட்டன. அவை விரிந்து, பரந்து சென்று, தம் நோக்கத்தை நிறைவேற்ற முயல்வதும் நாடு, நகரம், கிராமம், குக்கிராமம் முதலிய எல்லாப் பிரதேசங்களிலுமாம். சிறந்த நூல்கள், தாம் தோன்றியவுடன் மொழி பெயர்க்கப்பெற்று, பல அந்நிய தேசங்களிலும் சென்றுலவுகின்றன. இக்காலத்தில் ஒரே நூலின் பிரதிகள் நூற்றுக்கணக்காவும் ஆயிரக் கணக்காகவும் வெளிவருதலினாலே. காலமென்னும் காலன் வாயினையும் தப்பி நின்று மக்களுக்கு நிலைத்த பயனுதவத் தக்க வலிமையினை அடைகின்றன.

2. இங்ஙனம் கால தேசாதி நியதியைக் கூடியவரை வெற்றி-கொண்டு பொதுக் கல்வியை நாடெங்கும் ஆட்சி புரியச் செய்வது-மாத்திரமேயன்றி, அறிவென்னும் தெய்வச் சுடரொளியை மேன்-மேலும் பிரகாசங் கொள்ளும்படி செய்து உலகனைத்தும் அதன் தேஜோ மயமாக ஆதற்கும் அச்சுப் புத்தகங்களே சிறந்த கருவி-யாய் உள்ளன. நமது மூதாதையர் கனவிலும் நினைத்திராத

பிரகிருதி சாஸ்திரப் பேருண்மைகளையெல்லாம் மிக எளிதிற் சாதாரண மக்களும் அப்போதைக்கப்போது அறிந்துகொள்ளுதற்குப் புத்தகங்கள் பயன்படுகின்றன. நூதன நூதனமாய் நிருமிக்கப்படும் அற்புத யந்திர விசேடங்களையெல்லாம் அனைவரும் உடனுடன் அறிந்து பயன்படுத்திக்கொள்ளும் சௌகரியங்கள் புத்தகங்களால் வாய்த்திருக்கின்றன. ஏகதேசத்தில் ஒருவரிருவருக்கு உரிமையாயிருக்கும் அறிவுச் செல்வத்தை அனைவரும் பகிர்ந்தனுபவிக்கும்படி புத்தகங்கள் செய்கின்றன.

3. இதன்மேலும், கல்வியறிவால் உண்டாம் நிலைத்த இன்பத்தை நாம் நுகரும்படி செய்வனவும் புத்தகங்களேயாம். எவ்வகை நிலையிலுள்ளார்க்கும் அறிவினால் விளையும் இன்பம் போற்றத் தகுவதாகவே உள்ளது. இந்திரிய நுகர்ச்சி எத்துணை இன்றியமையாததோ, அத்துணையாக அறிவு நுகர்ச்சியும் மக்கட்கு இன்றியமையாததே. கல்வி அறிவில்லாது கேவலம் மிருகப் பிராயமாயிருப்போரும் இனிய கதைகளை வாசித்துக் கேட்டளவில் அதன் சுவையிலே இலயித்து நின்று பரவசமெய்தி இன்புற்றிருப்பார். அவர்களுக்குச் சிறிதளவேனும் கல்வியறிவிருப்பின், அறிவு நுகர்சியை எத்துணையாகப் போற்றுவார்களென்பது கூறவும் வேண்டுமோ !

4. ஆகவே, அச்சுப் புத்தகங்கள் நமது வாழ்க்கை இன்பத்திற்குக் காரணமாய், உயிரோடு உயிராயும், அறிவோடு அறிவாயும், உணர்வோடு உணர்வாயும் ஒன்றிக் கலந்துவிட்டன. அவைகளின்றி நாம் எவ்வாறு உயிர் வாழ்வது ? இந்நிலையில் நினைக்கவும் இயலவில்லை.

5. இவ்வண்ணம் மக்கள் வாழுமுலகை விண்ணுலகு என்றெண்ணும்படியாக்கி அவர்களை அறிவின்பப் பெருவாரியிலே திளைக்கும்படி செய்கின்ற புத்தகங்கள் அச்சிலியன்று வெளி வருமுறையைக் கண்டு பிடித்த பேருப்காரி இன்னாரென நாம்

தெரிந்துகொள்ளுதல் அவசியம். வேத காலத்தேயே உருவங்கள் பொறித்துள்ள நாணயங்கள் இருந்தனவென்று அறிகின்றோம்.* எனவே, இங்கிலாந்து முதலிய மேலைத் தேசங்களில் நாகரிகம் என்ற மணங்கூட வீசியறியாத பண்டைக் காலத்திலேயே, கிறிஸ்துவப்தத்திற்கு மிகமிக முன்பு தொட்டே, நமது பாரத தேசத்தில் நாணய முதலியவற்றில் உருவங்கள் முதலியன பொறிப்பதற்கு ஏற்ற அச்சுக் கருவிகள் இருந்தன. அக்கருவிகளை மேன்மேலும் நயம்பெற அமைத்துப் புத்தகம் அச்சிடும் முறையே நம் முன்னோர்கள் தெரிந்துகொண்டார்களெனக் கூற முடியவில்லை. கிறிஸ்துவப்தம் ஆறுவது நூற்றுண்டில் சீன தேசத்தில் ஒரு வகையான அச்சுவேலை நடைபெற்று வந்தது. அத்தேசத்தில் மரப்பலகையிலே ஒவ்வொரு பக்கத்திற்கும் உரிய எழுத்துக்கள் முழுவதும் செதுக்கப்பெற்றிருந்தன. இதனால், ஒவ்வோர் அச்சுப் பலகையும் புத்தகத்தின் ஒரு பக்கத்திற்கு மட்டுமே உதவும்; பிறிதொன்றற்கு உதவமாட்டாது. ஆகவே, புத்தகங்களை இக்காலத்திற் செய்வது போலச் சீனர்களால் அச்சியற்ற முடியவில்லை. இப்போது ஒவ்வோரெழுத்தும் மிகப் பலவாகத் தனித்தனியே வார்க்கப்படுகிறது. ஒரு பக்கம் அல்லது 'பாரம்' முழுமையும் அச்சுக் கோத்து அதனை அச்சியற்றிய பின்னர், பழையபடியும் அவ்வெழுத்துக்களைப் பிரித்துக் கோத்துப் பயன் படுத்தலாம். இவ்வாறே மேன்மேலும் செய்து கொள்ளலாம். தனித்தனியாக எழுத்துக்கள் வார்க்கப்படுதலின் பயன் இதுவேயாகும். இதற்குத் தக்கபடி அமைந்த எழுத்துக்கள் 'சலன அச்சு' (Moveable type) என்று கூறப்படும்.

6. இவ்வகையான 'சலன அச்சு' ஜான் கூடன்பேர்கு என்னும் ஜெர்மானியரால் கண்டு பிடிக்கப்பட்டது. இவர்

---

* Dr. Bhandarkar's Lectures on Ancient Indian Numismatics—pp. 68-69.

கி. பி. 1400ல் ஜெர்மனி தேசத்திலே, ரயின் நதிக்கரையிலுள்ள மேயன்ஸ் நகரத்தில் பிறந்தவர். அந்நகரத்தில் ஏற்பட்டிருந்த உட்குழப்பத்தினால், இருவரும் இவர் கட்சியாரும் நகருக்கு வெளியே பல முறை துரத்தப்பட்டனர். முடிவில் இவர் குடும்பச் சொத்தை அரசாங்கத்தினர் அபகரித்துக்கொண்டனர். இதன் பின் இவர் தமது நகருக்குத் திரும்பும் கருத்தை அறவே ஒழித்துவிட்டு, ஸ்ட்ராஸ்போர்கு என்ற நகரில் வசித்து வந்தார். அந்நகரத்து மக்களின் அன்பும் நன்மதிப்பும் பெற்று அங்கே வாழ்ந்து வரும் நாளில், அவர்கள் உதவியால் இவருடைய ஆஸ்தி இவருக்குத் திரும்பக் கிடைத்தது. இவர் இப்பொருளைப் பலவிடங்களுக்குஞ் சென்று அழிவில்லாத கல்விப் பொருளை ஈட்டுதற்குப் பயன்படுத்தி வந்தனர்.

7. ஹாலண்டு தேசத்தில் ஹார்லெம் நகரில் இவர் இருக்கும் பொழுது, ஒரு நாள் இவர் நண்பராகிய லாரென்ஸ் கோஸ்தேர் என்பவர் ஒரு மரப் பலகையிற் செதுக்கப்பட்டிருந்த இலத்தீன் இலக்கணத்தை இருவருக்குக் காண்பித்தார். அன்று முதல் அச்சு வித்தையைக் கண்டுபிடிக்கும் பெருங்காதலொன்று இவர் மனத்தில் வேரூன்றிவிட்டது. ஆண் மக்களுக்கு இயற்கையாயுள்ள பிறிதொரு பெருங்காதலும் இவரது உள்ளத்தை இப்போது கொள்ளைகொண்டது. நகர்புறத்தேயுள்ள ஒரு சிங்கார வனத்திற்குச் சென்று அங்கே தம் காதலியாரை நினைத்துப் பாடுவதும் அவர் பெயரையும் தம் பெயரையும் மரப் பட்டைகளிற் பல முறை எழுதிப் பார்த்து மகிழ்வதும் இவரது வழக்கமாயிருந்தன. ஒரு முறை அப்பெயர்களை ஈரமான இளம்பட்டையிற் செதுக்கி, அப்பட்டையைத் தம்மிடத்திருந்த தோற்கடுதாசியிற் சுற்றிவைத்திருந்தார்; மறு நாள் தம் காதலியாரிடத்தில் அதனைச் சமர்ப்பிக்கவெண்ணிப் பிரித்துப் பார்த்த போது, பசும்பட்டையிலுள்ள எழுத்துக்கள், தோற்கடுதாசியில் தெளிவாய்ப் படிந்திருத்தலைக் கண்டார். இவருக்குண்டான மகிழ்ச்சி அளவிடச்

2

கூடாததாயிருந்தது. தமது இயற்கைக் காதல் செயற்கைக் காதற்குரிய அரும்பொருளை அடைதற்கு உதவியதென்று நினைக்கும்போதெல்லாம் தமது ஒருயிரிற் பன்னூறுயிர்கள் புகுந்து இயக்குவது போல ஊக்கங் கொண்டனர். பெரிய பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்கி, மர பட்டை ரசத்திற்குப் பதிலாகக் கறுப்பு மையை அப்பலகையின்மீது தடவி அச்சியற்ற முயன்றனர். இரவும் பகலும் இத்தொழிலிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, எத்தனையோ முறைகளைப் பரியாலோசனை செய்வதில் பல வருடங்கள் சென்றன. முடிவில் ஒவ்வோரெழுத்தையும் தனித்தனியே சிறு மரத்துண்டிற் செதுக்கி வேண்டியபடி கோத்து அச்சியற்றுங் கருத்து இவர் மனத்தே திடீரென்று உதித்தது. இக்கருத்துத் தோன்றிய காலமுதற்கொண்டு, தனித்தனியே எழுத்துக்களைத் திருந்திய வடிவிற் செதுக்குதற்கு வெகு காலம் முயன்று அதிலே தக்க பயிற்சி பெற்றனர்.

8. பின்னர் ஹார்லெம் நகரத்தை விட்டு ஸ்விட்ஸர்லாந்து சென்று, மரத்துண்டில் அச்சுகள் செய்து, வாக்கிய முறைப்படி அவற்றை நூல்களிற் கோத்து, வரி வரியாயமைத்து, அச்சுகள் விழுந்துவிடாதபடி ஓரங்களில் முடிப்பிட்டுக் கட்டி, ஒரு பக்கமுழுவதும் அச்சடித்துப் பார்த்தனர். தாம் எதிர் பார்த்ததற்கு மேலாகவே இது திருப்திகரமாயிருந்தது. இங்ஙனமே பலகாலும் முயன்று அப்பியசித்து வந்தனர். தாம் மேற்கொண்டுள்ள கருத்து முற்ற வேண்டுமாயின், தொழிற்சாலையொன்று அவசியம் ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணினர். தொழிற்சாலை இவரது அறிவாற்றலாலும் இடைவிடாத உழைப்பினாலும் மட்டும் ஸ்தாபிக்கக்கூடியதா? அதற்குப் பொருள் வேண்டுமன்றோ? பொருள் பெறும்பொருட்டுப் பல தனவந்தர்களிடஞ் சென்றனர். அவர்களிடத்தே இவர் பெற்றவை நகைப்பும் இகழ்ச்சியும் இரக்கமுமேயன்றி வேறில்லை. இவருடைய 'ஆகாயக்கோட்டை' எல்லாம்

பொருளின்மையால் தொலைந்துவிடும் போன்றிருந்தது. ஆனால், அச்சியற்றும் நுண்மதியும் பேருழைப்புமுடையவர் அத்தனை எளிதில் தோல்வியுறுவரா? சில தொழிலாளிகளோடு கூடி வைர முதலியன செதுக்கி ஆபரணம் செய்யுஞ் சாலையொன்று நிறுவிப் பகல் முழுவதும் அவ்வேலையையே செய்து, இரவில் தமது ஆத்து-மார்த்தமான வேலையைச் செய்து வந்தனர். அச்சியற்றுந் தொழில் முழுமையுந் தாமாகவே செய்து முடிப்பது அசாத்-தியமென்று தோன்றியபடியால், தமது தொழிலின் மர்மத்தைச் சிறிது சிறிதாகத் தம் கூட்டாளிகளுக்குக் கூற நேர்ந்தது. இவர் மேற்கொண்டுள்ள தொழிலின் அருமை பெருமைகளை அவர்கள் உடனே நன்குணர்ந்தார்கள். எனினும், அதனால் ஏற்படும் புகழும் பொருளும் இவரடையாதபடி தாமாகவே செய்துகொள்ள வேண்டுமென்ற கருத்து அவர்கள் மனத்திலெழுந்தது. அச்சுத் தொழிற்குரிய இரகசியங்கள் அனைத்தையும் தாங்கள் கிரகித்துப் பொருளிலாபத்தைத் தாமே அடைய வேண்டுமென்ற நோக்கத்-தோடு, இவருடைய கூட்டுத் தொழிலாளர்கள் இவர்க்குப் பொருள் முதலிய உதவி செய்ய முடியாதெனக் கூறினார்கள். இவர் தமது பெருநோக்கம் நிறைவேறுந் தறுவாயில் உதவியை இழந்துவிட மனமின்றி, அவர்களுடைய உட்கிடைக்கெல்லாம் ஒருவாறு இணங்கித் தம் வேலையில் முயன்று வந்தனர். அச்சு வேலையின் பொருள் வருவாய் மிகுதியாயுண்டாயிற்று. அவ்வூதிய முழுமையும் கூட்டாளர்கள் தாங்களே எடுத்துக்கொண்டது மாத்திரமன்றி, இவரைக் கேவலம் கூலியாளாகக் கருதி இழிவாய் நடத்தவும் தொடங்கினர்கள்; பின்னர் அச்சுவித்தை இவருக்குரியதன்றென்றும், அவ்வித்தையைக் கைக்கொண்டு அச்சுத் தொழிலியற்றும் உரிமை இவருக்குக் கிடையா-தென்றும் வழக்குத் தொடுத்தார்கள். இறைவன் அருளால் இவ்விடையூறுகளெல்லாம் ஒருவாறு நீங்கினதாம். முழு மனத்-தோடும் காதலித்து வந்த அச்சு வித்தை இவரது உரிமைப் பொருளாகவே முடிந்தது. இவர் தமது தாய் நகரான மேயென்-

ஸ்ராக்குத் திரும்பி வந்தனர். பிறிதொரு காதல் வெற்றியையும் கூடென்பேர்கு இப்பொழுது அடைந்தனர். துன்ப மயமாகிய இவரது வாழ்க்கையிலே சிறிது இன்பவொளியும் தோன்றலாயிற்று. நெடுங்காலமாகத் தாம் காதலித்து வந்த மாதரசியை இப்பொழுது மணந்து மகிழ்வுற்றனர். எனினும், தம்பதிகள் தங்களுக்குரிய செல்வமாக அனுப்வித்து வந்தது வறுமையேயன்றி வேறன்று. பொருட்செல்வம்போன்றே மக்கட்செல்வமும் இவர்கட்கு இல்லாதாயிற்று.

9. மேயென்ஸில் மீண்டும் குழப்பம் உண்டாயிற்று. மீண்டும் கூடன்பேர்கு வெளியேற நேர்ந்தது. இவர் ஸ்விட்ஸெர்லாந்துக்கு மறுமுறையுஞ் சென்று, அச்சியந்திர சாலை தாபித்து, விவிலிய நூல் முதலியவற்றைப் பிரசுரஞ் செய்தனர். மீண்டும் இவருடைய வேலையாட்கள் இவரை மோசஞ்செய்து அலட்சியமாக நடத்த, இவர் மீண்டும் தமது தாய் நகருக்குத் திரும்பி வந்தனர். இத்துன்பங்களிலெல்லாம் இவருக்குத் துணையாய் நின்று மனச் சலிப்பின்றி உழைத்து வரும்படி தூண்டிக்கொண்டிருந்தவர் இவரது உத்தம பத்தினியாராகிய ஆன்னெட்டு (Annettee) அம்மையாரே. இவர் தம் தாய் நகர் வந்ததும் பூஷ்டு (Fust), ஷோபேர் (Schoffer) என்பவர்களுடன் சேர்ந்து கிறிஸ்து மத நூல்கள் பலவற்றை அச்சிபற்றி வெளியிட்டனர். துரதிஷ்டம் இவர் காலடி வைக்குமிடமெல்லாந் தொடர்ந்துகொண்டேயிருந்தது. அளவற்ற கஷ்ட நஷ்டங்கள் இவர்க்கு ஏற்பட்டன. பிரான்சு மன்னவராகிய லூயி Louis xi) என்பவர் இவரைச் சிறிது காலம் ஆதரித்து வந்தனர். அப்போது புதிய கூட்டாளிகள் சிலரைத் துணையாகக் கொண்டு இவர் தம் தொழிலில் முயன்று வந்தனர். அக்கூட்டாளிகளும் இவரை வஞ்சிக்க நினைத்து, முடிவில் அந்நோக்கம் கைகூடாதொழிந்தார்கள். மீண்டும் தம் நகரக் குழப்பத்தினால் இவரும் இவருடைய மனைவியாரும், வெளியே துரத்தப்பட்டு, அகதிகளாய், யாதொரு

புகலிடமுமின்றி அந்நிய நாடுகளில் அலைந்து திரிந்துகொண்டிருந்தனர். இவர் இக்காலத்தில் நாஸ்ஸோ (Nasso) என்ற நாட்டின் அதிபதியால் ஆதரிக்கப் பெற்று வாழ்ந்து வந்து தமது அறுபத்தொன்பதாம் வயதில் மண்ணுலகிற் புகழ் நிறுவி விண்ணுலகடைந்தனர்.

10. இவர் இறந்த சில வருடங்கட்குள்ளே ஐரோப்பாக் கண்டத்திற் பல நகரங்களிலும் அச்சுக்கூடங்கள் ஏற்படுத்தப்பெற்று, அச்சு வித்தை பாவலாயிற்று. இங்கிலாந்தில் கி. பி. 1475ல் காக்ஸ்டன் (Caxton) என்பவர் வெஸ்ட்மினிஸ்டரில் முதன்முதலாக அச்சுக்கூடம் ஸ்தாபித்தனர்.*

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. அச்சுப் புத்தகங்களின்றி நாம் எவ்வாறு உயிர் வாழ்வது என்று நினைக்கவும் கூடவில்லை—இதற்கு ஆசிரியர் கூறுங் காரணங்கள் யாவை ?

2. கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் சீன தேசத்தில் நடைபெற்று வந்த அச்சு வேலை எவ்வகைத்து ?

3. சலன அச்சு என்பது யாது ? அதைக் கண்டு பிடித்தவர் யாவர் ?

4. கூடன்பெர்கின் முயற்சிக்கு ஏற்பட்ட இடுக்கண்கள் யாவை ?

II. 1. ஒன்பதாம் பத்தியில் உள்ள மூன்று வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.

* குறிப்பு:—இக் கட்டுரை கலை மகள் பத்திரிகையில் வெளி வந்தது.

2. எட்டாம் பத்தியில் உள்ள முதல் வாக்கியத்தைப் பிரித்துப் பல வாக்கியங்களாக எழுதுக.

III. குற்றியலுகரத்தின் ஒவ்வொரு தொடருக்கும் இப்பாடத்திலிருந்து இரண்டு உதாரணங்கள் எழுதுக.

---

## 6 கங்கை நதி

1. கங்கையென்று உலகெலாங் கைதொழத் தகும் மங்கை என்று மகாபாரதம் இயற்றியருளிய வில்லிபுத்தூராழ்வார் புகழ்ந்து போற்றும் கங்கையாறு, நமது பாரத நாட்டிற் பாய்ந்து, அதைப் பண்புறச் செய்யும் நதிகளில் ஒன்று. இடைபறாத நீர்ப்பெருக்குள்ள இதைச் சீவநதி என்று கூறுதல் பொருந்தும். இஃது இந்தியாவின் வடக்கு எல்லையாகவும் இயற்கை அரணாகவும் அமைந்துள்ள இமயமலைகளின் மேல் உற்பத்தியாகிறது. கடல் மட்டத்துக்குமேல் சுமார் பதினாயிரம் அடி உயரத்திலுள்ள கங்கோத்திரி என்னும் இடத்திற்குச் சிறிது தூரத்தில் உள்ள ஒரு கற்பாறையின் பிளவே இதன் பிறப்பிடம் என்று தரை நூல் வல்லார் குறிக்கின்றனர். அங்கு இந்நதி முப்பதடி அகலமும், ஒன்று அல்லது இரண்டடி ஆழமும் உடையதாய் இருக்கிறது. பாகீரதி என்பது அங்கு இதற்கு வழங்கும் பெயர்.

2. இந்நதி தன் தோற்றுவாயிலிருந்து மேற்கு முகமாய் ஓடி, கடல் மட்டத்திற்கு இரண்டாயிரம் அடி உயரத்தில் வரும்போது தேவப்பிரயாகை என்னும் இடத்தில் அலகநந்தா என்னும் மற்றொரு சிற்றாறு இத்துடன் கலக்கிறது. இவ்விடத்திலிருந்துதான் இந்நதிக்குக் கங்கை என்னும் பெயர் வழங்குகிறது. தேவப்பிரயாகையினின்று தென்மேற்கு முகமாகச் சுமார் ஐம்பது மைல் தூரம் ஓடிப் பாய்ந்த பின் கடல் மட்டத்திற்கு ஆயிரம் அடி உயரம் உள்ள ஹரித்துவாரம் என்னும் புண்ணிய ஸ்தலத்தை அடைகின்றது.

3. ஹரித்துவாரத்தினின்றும் கங்கை கிழக்கு முகமாகச் சுமார் 500 மைல் தூரம் ஓடி வந்த பின்னர், அலகாபாது என்னும் இடத்தை அடைகிறது. இங்குத்தான் இதன் ஒப்பற்ற



கங்கோத்திரி

உபநதியான யமுனை இதிற் கலக்கிறது. அலகாபாத்துக்கும் கங்கையின் உற்பத்தி ஸ்தானத்திற்கும் இடையில் 670 மைல் தூரம் உள்ளது.

4. அலகாபாதிலிருந்து பரந்த சமவெளியின் மூலம் சுமார் 500 மைல் தூரம் இதன் போக்கு அமைந்திருப்பதால், இப்பாகத்திலேதான் இதன் அகலமும் ஆழமும் அதிகரிக்கின்றன. இதன் இரு கரைகளிலும் பழைமை மிக்க பட்டணங்கள் பல உண்டு. அன்றியும், இந்நதி ஐக்கிய மாகாணம், பீஹார், வங்காளம் முதலிய மாகாணங்களினூடே செல்லுகையில் அனேக உபநதிகள் இதில் வந்து கூடுகின்றன. அவை இக்-

நதியின் பெருக்கை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. அன்றியும், இந்நதி பாயும் சமவெளி வடக்கிலும் தெற்கிலும் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து, இமயமலை விந்திய மலைகளின் அடிவாரங்களில் முடிவடைவதால், இவ்விரு பர்வதங்களின்மீதும் பெய்யும் மழை நீர் முற்றிலும் இந்நதியிலேயே வந்து வடிகிறது. இக்காரணத்தாலும் கங்கையாற்றின் நீர்ப்பெருக்கு அதிகரிக்கிறது.

5. கங்கையாறு பாரத நாட்டின் சீவநதிகளில் ஒன்றெனக் கூறினோமல்லவா? இந்நதிக்கு இதன் உபநதிகளாலும், மாரி காலத்தில் மழை நீராலும் பிரவாகம் வருமாயினும், கோடை காலத்தில், இமாலயத்தின்மீதுள்ள உறைபனி உருகுவதால், அக்காலத்தும் நீர்ப்பெருக்குக் குறைவுறுவதில்லை.

6. இமயமலையிலிருந்து ஏழு உபநதிகள் இதில் வந்து கலக்கின்றன. அவை முறையே இராம கங்கை, கோமதி, கோக்கிரா, கண்டகி, மகாநதி, கௌசிகை, அத்திரி என்பனவாம். இவை அனைத்தும் வடகரையில் வந்து கலக்கின்றன. தென் கரையில் வந்து கலக்கும் உபநதிகளும் உண்டு. அவற்றில் முதன்மையானது யமுனை. இதுவும் கங்கையைப் போலவே இமயமலைகளின் உன்னத சிகரங்களின்மீது கங்கையாற்றின் பிறப்பிடத்திற்குச் சற்று மேற்கேயுள்ளதோர் உறை பனி யாற்றைப் பிறப்பிடமாகக் கொண்டு, முதலில் மேற்கு முகமாகவும், புறகு தெற்கு முகமாகவும் ஓடி பிறகு சமவெளியை அடைந்து, அலகாபாது என்னுமிடத்தில் கங்கையோடு கூடுகிறது. இந்த யமுனை நதியில் விந்திய மலையினின்றும் புறப்படும் சம்பல் பெட்டுவா என்னும் ஆறுகள் வந்து கலக்கின்றன. பாடலீபுரத்தின் அண்மையில் சோனை என்னும் மற்றொரு நதியும் கங்கையிற் கலக்கிறது.

7. கங்கையாறு கடலோடு கலப்பதற்கு முன் பல கிளைகளாகப் பிரிகிறது. இக்கிளை நதிகளில் பதுமை, மேனை, ஹூக்ளி

என்பவை சிறப்புடையவை. இவற்றின் இடையில் உள்ள மும்முகப் பிரதேசம் மிகுந்த வளம் பொருந்தியது. ஆயினும், கடற்கரைக்குச் சமீபத்தில் நிலம் சதுப்பாகவும், அடர்ந்த காடுகள் நிறைந்துங் காணப்படும். இப்பிரதேசத்திற்குச் சுந்தர வனம் என்னும் பெயர் வழங்கி வருகிறது.

8. கங்கையாற்றுக்கு உள்ள பெருமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு: முதலாவதாக இந்துக்கள் இதையொரு தெய்வமாக நினைத்து வணங்குகின்றார்கள். முக்கண் முதல்வர் பகீரதனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி ஆகாயத்தினின்றும் இழிந்து வந்த கங்கா தேவியின் உத்வேகத்தை உலகம் தாங்காதென எண்ணித் தமது சடா மகுடத்தில் அவளை ஏந்திப் பிறகு பூமியிற் பெருகவிட்டதாகப் பாரதத்தில் வழங்கும் ஒரு கதையே இதற்குக் காரணமாகும். இக்கதை உண்மையென்று நாம் ஏற்றுக்கொள்ளாவிடினும், இக்கதை தோன்றியதற்கான காரணத்தை நாம் ஊகித்தறிய இடமுண்டு.

9. சூரியன், சந்திரன், பூமி, மலை, ஆறு முதலிய இயற்கைப் பொருள்களைப் பண்டை நாள் ஆரியர் தெய்வத் தன்மை பொருந்தியவை என மதித்தனர். ஆதலின், வானுற ஓங்கியுள்ள இமயமலைகளின் உன்னத சிகரங்களில் உறைந்து கிடக்கும் நீராவிப்படலங்கள் மெல்லென ஊர்ந்து, வெள்ளிய நுரையுடன் இறங்குவது ஆகாய கன்னிகை ஒருத்தி வெள்ளிய ஆடை சுற்றிப் பூமியை நோக்கி இழிந்து வருவதுபோல அவ்வாரியர்களுக்குத் தோன்றியது போலும்! இவ்வாறு போந்த நதியை இமயமலையும், இமயமலைச்சாரலின்பாற் காணப்படும் கருங்காடுகளும் தடைப்படுத்தியனுப்புவது ஈசனைப் போலவும், அவனது கரிய மயிர்க் கற்றை போலவும் விளங்கியதில் விந்தையொன்றும் இல்லை என்பதை எளிதில் ஊகிக்கலாம். இக்காரணத்தாலேதான் இந்நதி தெய்வத் தன்மையுடையதாகக் கருதப்பட்டு வருகிறது. 'காசியில் இறக்க முத்தி!' என்ற வழக்கு இந்நதியின் கடவுள்

தன்மை பற்றியே எழுந்ததாம். இந்நதியிற் படிவோர் பண்ணிய பாவங்கள் பரிதி முன் பனி போலப் பறந்துவிடும் என்பது கொள்கை. இந்தப் பெரும்புண்ணியத்தைப் பெற வேண்டி யாத்திரிகள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து இதில் ஸ்நானம் செய்கின்றனர். தசராப் பண்டிகைக் காலத்தில் மஞ்சள் புஷ்பம் பழம் முதலிய பொருள்களைக் கங்கைக்கு அர்ப்பணம் செய்கிறார்கள். கங்கையாற்றின் பெருமையைக் காசிக்கண்டத்தில் உள்ள கீழ் வரும் செய்யுளால் ஒருவாறு அறியலாம்:

"ஆதி யுகத்தில் யோகத்தால் முத்தி அடையும்: அதன்பின்னர்
ஓதும் உகத்தில் அருந்தவத்தால் முத்தி உளதாம்: ஓங்கரிய
சோதி ஞானத் தால்முத்தி மூன்றும் உகத்தில் துன்னும்: உயிர்,
காத லோடும் கலியுகத்தில் கங்கை படியின் வீட்டையும்."

10. கெங்கையாற்றைத் தெய்வத்தன்மை பொருந்தியதாக இந்துக்கள் எண்ணுவதற்கு ஒரு காரணத்தை அறிந்தோம். மற்றொரு காரணத்தையும் ஆராய்வோம்: இந்நதி இமயமலையின் உயர்ந்த பாகத்தில் உற்பத்தியாகிக் கீழ் நோக்கி வரும்போது இது மலையின்மீதுள்ள மண், மணல், கிளை, தழை முதலியவைகளை அடித்துக்கொண்டு வந்து சம நிலத்தில் சேர்க்கிறது. இதனுடன் வந்து கலக்கும் உபநதிகளும் இத்தொழிலையே புரிகின்றன. இதனால் இந்நதியின் இரு கரைகளிலும் வண்டல் மண் ஒதுக்கப்பட்டு இந்துஸ்தானத்துச் சமவெளியை நிலவளம் மிகுந்ததாக்குகிறது. நிலவளத்தின் பயனை மக்கள் பெறுமாறு இது நீர் வளத்தையும் நல்குகிறது. இந்நதியின் நீர், கால்வாய்களின் மூலமாக இச்சமவெளியின் பல பாகங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு, வேளாண்மைத் தொழிலுக்கு உபயோகப்படுகிறது.

11. கங்கை நதியின் இரு கரைகளின்மீதும் பண்டு தொட்டுப் பல பெரிய பட்டணங்கள் இருந்து வருகின்றன.



கும்ப மேளா

அலகாபாது, காசி, பாடலிபுரம், காளி கட்டம் முதலியவை அவற்றுள் தலை சிறந்தவை. அலகாபாத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் வந்து கூடி விழாக் கொண்டாடுவதுண்டு. இவ்விழாவிற்குக் கும்ப மேளா என்பது பெயர். இஃது ஒரு மாதகாலம் நீடித்திருக்கும். அக்காலத்தில் இந்துக்கள் கங்கை யமுனைச் சங்கமத்தில் தவறாமல் நாள்தோறும் இரு முறை முழுகி, பகலில் உபவாசமிருந்து, இரவில் ஆகாரம் உண்டு, இறைவனைத் தியானம் செய்வார்கள். அப்போது அங்கு மிகப் பெரிய சந்தை ஒன்று கூடும்; அதில் திரளாக யாத்திரிகர் கூடுவர்.

12. கங்கைக்குப் பல பெயர்கள் உண்டு. பாகீரதி, மந்தாகினி, திரிபதகை, சுரநதி, சானவி, வரநதி முதலியவை அவற்றுள் மிகவும் முக்கியமானவை. இந்நதிக்கு வழங்கும் கங்கை என்னும் வடமொழிச் சொல்லுக்கு 'எக்காலத்தும் போக்கறுத நதி' என்பது பொருள். இவ்வாறே இதன் ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு பொருள் உண்டு.

பயிற்சி:

I. விடை எழுதுக:—

1. கங்கை நதியின் உற்பத்தி ஸ்தானம் எது? அதற்கு அங்கு வழங்கும் பெயர் யாது?

2. கங்கையைத் தெய்வத் தன்மை பொருந்தியதாக இந்துக்கள் கருதக் காரணங்கள் எவை?

3. கங்கையின் பிரயோசனங்கள் யாவை?

4. கங்கையின் உபநதிகளும் கிளை நதிகளும் எவை?

5. கங்கைக்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை?

II. 1. முதற்பத்தியின் முதல் வாக்கியத்தை மாற்றி, 'நமது பாரத நாட்டிற் பாய்ந்து' என்று ஆரம்பித்து எழுதுக.

2. இரண்டாம் பத்தியில் உள்ள முதல் வாக்கியத்தைச் சிறு வாக்கியங்களாக எழுதுக.

III. நீங்கள் கங்கை நதியை நேரிற் பார்த்தது போல வருணித்து உங்கள் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

## இலக்கணம்

### மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்:

1. உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.

2. மெய்யெழுத்துக்களுள் க, ச, த, ப என்னும் நான்கு வன்கணமும், ஞ, ந, ம என்னும் மூன்றுமென்கணமும், ய, வ என்னும் இரண்டு இடையெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

3. அவற்றில் க், ச், த், ந், ப், ம் என்னும் ஆறு மெய்களும் தனித்தனி 12 உயிர்களோடும் கூடி மொழிக்கு முதலில் வரும்.

4. வகரம் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயிர்களோடும் கூடி மொழிக்கு முதலில் வரும்.

5. யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிர்களோடும் கூடி மொழிக்கு முதலில் வரும்.

6. ஞகரம் அ, ஆ, இ, எ, ஏ, ஓ என்னும் ஆறு உயிர்களோடும் கூடி மொழிக்கு முதலில் வரும்.

### மொழிக்கு இறுதியில் நிற்கும் எழுத்துக்கள் :

ஏகரம் ஒழிந்த மற்ற உயிர்களும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய பதினொரு மெய்களும், குற்றியலுகரமும் மொழிக்கு இறுதியல் நிற்கும் எழுத்துக்களாம்.

பயிச்சி :

மொழிக்கு ஈற்றில் நிற்கும் எழுத்துக்களுள் ஒவ்வொன்றையும் சொற்களில் அமைத்தெழுதுக.

# 7. வித்துவான் தியாகராச செட்டியார்

[மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்]

1. கல்வியிற் சிறந்த பெரியோர்களிற் பலர் தம் கடமைகளை உண்மையோடும் ஊக்கத்தோடும் அன்போடும் செய்துகொண்டு, பிறருடைய செல்வத்துக்கேனும் அதிகாரத்துக்கேனும் அஞ்சிப் பிறழ்க்தொழுகாமல், இன்புற்று வாழ்ந்து வந்ததுண்டு. அத்தகையோர் நம் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்திலும், பிற்காலத்திலும் இருந்தனரென்பதை நூல்கள் வாயிலாகவும், கண்கூடாகவும், வேறு விதமாகவும் அறிந்து வருகிறோம். பிற்காலத்தில் வாழ்ந்தவர்களுள், கும்பகோணம் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராயிருந்து பெரும்புகழ் பெற்ற ஸ்ரீ கி. தியாகராச செட்டியார் ஒருவராவர்.

2. செட்டியார், தைரியம் மிக்கவர்; தம்முடைய கடமைகளை ஒழுங்காகச் செய்து வருபவர்; பிறருடைய நூல்களிலும் உரைகளிலும் உள்ள நயமான பகுதிகளைக் கண்டு மகிழ்ந்து பாராட்டுபவர்; பிழைகள் கண்டவிடத்து அஞ்சாமற் கண்டிக்கும் துணிவுடையவர். கல்வியறிவில்லாருடைய மேற்போக்கான நடிப்புகள் அவரிடம் பயன்படா.

3. அவர் திரிசிராப்பள்ளிக்கு வடக்கேயுள்ள பூவாளூர் என்னும் ஊரில், 'பூவாளூர்ச் செட்டியார்' என்னும் சைவர் மரபிற் பிறந்தவர். அவர் பிறந்த வருடம் 1825. அவருடைய தந்தையார் பெயர் சிதம்பரஞ் செட்டியார் என்பது. அவர் பதினெட்டாம் பிராயம் வரையில் தம்முடைய குடும்பத்திற்குரிய விவசாயத்தையும் வர்த்தகத்தையும் கவனித்து வந்தனர்; தமிழ் நூல்களையும் தக்கவர்களிடத்திற் கற்று வந்தார். அக்காலத்தில் அவருக்குப் பயிர்த் தொழில் முதலியவற்றில் ஊக்கம் உண்டாகவில்லை, பழம்பிறப்பின் வாசனையால் தமிழ்க் கல்வியை நன்றாகப்

பயின்று தேர்ச்சி பெற வேண்டுமென்னும் அவா அவர்பால் உண்டாகி முதிர்ந்தது. ஆதலின், தந்தையாரிடம் விடைபெற்றுக்கொண்டு, திருசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் சென்று படிக்கத் தொடங்கினர். பிள்ளையவர்கள், அவருடைய அன்பையும் அறிவையும் ஊக்கத்தையும் அறிந்து, அவர்பாற் பெரிதும் அன்பு வைத்துப் பாடஞ்சொல்லி வந்தனர். நாளடைவில், செட்டியார் தமிழ்ப் புலமை மிக்கவரானர்; பிள்ளையவர்களுக்கு அவரிடம் அளவற்ற அன்பு உண்டாயிற்று; அவர்களுடைய மாணக்கர்களுட் சிறந்தவராக அவர் கருதப்பட்டார்.

4. அதன் பயனாக அவர் திரிசிரபுரத்திற் பட்டாளத்தார்க்குரிய பள்ளிக்கூடமொன்றில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார்; அங்கிருந்து பாடஞ்சொல்லி நன்மதிப்பை அடைந்தார்; அதன் பிறகு திருவரங்கத்திலிருந்த ஒரு பள்ளிக்கூடத்திற் (Taluk High School) பண்டிதராயிருந்து பாடஞ்சொல்லி வந்தார். அக்காலத்தில் அவர் பாடஞ்சொல்லும் இயல்பு மாணக்கர்கள் மனத்தையும் அவர்கள் வழியாக ஏனையோர் மனத்தையும் கவர்ந்து கொண்டது.

5. அப்போது, கும்பகோணம் மாகாணக் கலாசாலையில் (Provincial School) ஆசிரியராயிருந்த தண்டலம் கோபாலராவ் அவர்கள் செட்டியாருடைய கல்வியாற்றலைப்பற்றி அறிந்து, 1865-ஆம் ஆண்டில் அவரைக் கும்பகோணத்திற்கு வருவித்துக்கொண்டார். அது முதல் செட்டியார் அங்கேயே பண்டிதராயிருந்து வந்தார்; அந்தப் பள்ளிக்கூடம் கல்லூரியான பின்பும் அதில் இருந்து புகழ் பெற்றார். அவருடைய கல்வியாற்றலின் சிறப்பு எங்கும் பாராட்டப் பெற்றது. யாவரும் அவரை மேலாக மதித்து மிக்க மரியாதையோடு உபசாரம் செய்து வந்தனர்.

6. செட்டியார் 1880-ஆம் ஆண்டு வரையில் அங்கே வேலை பார்த்தனர்; பின்பு, உபகாரச் சம்பளம் பெற்று, முதலில் திருவானைக்காவிலும் பின்பு உறையூரிலும் இனிது வாழ்ந்து வந்தார்; தாம் ஈட்டிய பொருளின் பெரும்பகுதியைப் பூவாளூர் நடராசப் பெருமான் கட்டளை முதலியவற்றிற்குச் சேர்ப்பித்துச் சர்வசித்து ஆண்டு, தைத் திங்கள் ஏழாம் நாள் (19-1-1888) சிவபிரான் திருவடி நிழலை அடைந்தார்.

7. தியாகராச செட்டியாருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் அவருடைய தைரியத்தையும், கல்விப் பெருமையையும், பிற இயல்புகளையும் நன்கு விளக்கும். எல்லாவற்றையும் அமைத்து அவருடைய சரித்திரத்தை விரிவாக எழுதி வெளியிட யான் எண்ணியிருக்கிறேன்; இங்கு மூன்று* நிகழ்ச்சிகளை மட்டும் தெரிவிக்கிறேன்:

8. தியாகராச செட்டியார் கும்பகோணத்தில் இருந்த காலத்தில் உயர்தர நீதிமன்ற வழக்கறிஞரான (High Court Vakil) ஒரு பெரிய கனவான், நன்னூற்சூத்திரங்களில் 200-க்கு மேல் நீக்கிவிட்டு, மற்றவற்றைத் தொகுத்து உரையெழுதி வெளியிட்டார். அக்கனவான் சிறிதளவு தமிழறிவுடையவர்; தம்முடைய பிள்ளைகளும் தம் நண்பர்களுடைய பிள்ளைகளும் பள்ளிக்கூடங்களில் நன்னூற்பாடத்தைப் பயில இயலாமல் இருத்தலை அறிந்து வருந்திய அவர், இப்படி ஒன்றை வெளியிட்டுத் தம்முடைய நண்பர்களாகிய அதிகாரிகளின் உதவியாற் பள்ளிக்கூடங்களில் இதையே பாட புத்தகமாக வைத்தால் பயன்படுமே என்று எண்ணினார்; நண்பர் சிலர் அங்ஙனம் செய்தல் மிகவும் நல்லதென்று தூண்டினர். அதனால், அக்கனவான், சட்டைப் பையில் வைத்துக்கொள்ளும் அளவில் அதனைப் பதிப்பித்து, ஊர்தோறும் உள்ள பள்ளிக்கூடங்களில் வைக்கச் செய்தார். அதனை யாவரும் வாங்கியதோடன்றி, அவ்வழக்கறிஞரை மிகப்

* மூன்று நிகழ்ச்சிகளில் இரண்டே இப்பாடத்தில் தரப்பட்டுள்ளன.

பாராட்டவும் தலைப்பட்டனர். தமிழ்ப்பண்டிதர்களில் இலக்கணம் கற்பித்தலில் வன்மையற்ற சிலர், அப்பதிப்பை விரும்பிப் பெற்றுப் புகழ்ந்தனர்.

9. புத்தகத்தை வெளியிட்ட கனவான், கலாசாலைகள் உள்ள இடங்களுக்கெல்லாம் அதனை அனுப்பி, அங்கங்கே பாடமாக வைக்கும்படி ஏற்பாடுகளைச் செய்து வந்தார்; கும்பகோணத்தில் உள்ள 'நகர உயர்தரக் கலாசாலை'க்கும் (Town High School) ஒரு பிரதியை அனுப்பினர். அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியர், தமிழ்ப்பாட புத்தகங்களைத் தியாகராச செட்டியார் தகுதியுடையனவென்று சொன்னால்தான் பாடமாக வைப்பார்; ஆதலின், அந்தப் புத்தகத்தைச் செட்டியாரிடம் கொடுத்து அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டார். அதனைப் படித்துப்பார்த்த செட்டியார், "இது பாடமாக வைக்கத் தகுதியற்றது," என்று சொல்லிவிட்டார். அதனால், அந்தப் பள்ளிக்கூடத்தில் அது பாடம் வைக்கப்பெறாமற் போயிற்று. பிறகு அப்புத்தகம் கும்பகோணம் கல்லூரிக்கும் அனுப்பப்பட்டது. அங்கும் அது வைக்கப்படவில்லை. செட்டியார் அந்த நூலை மதிக்கவில்லை என்ற செய்தி அருகிலுள்ள ஊர்களிலும் பரவியது. அதனால், அங்கங்கே உள்ள பள்ளிக்கூட ஆசிரியர்கள் அதனைப் பாட புத்தகமாக வைக்க விரும்பவில்லை. அதனை வெளியிட்டோர் தக்க அதிகாரிகள் மூலம் செய்து வந்த முயற்சிகளால் அவ்வாசிரியர்கள் தருமசங்கடத்துக்குள்ளானார்கள்.

10. இந்த நிலையில், அந்தக் கனவான் கும்பகோணம் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்; அப்படியே கல்லூரிக்கும் வந்தனர்; செட்டியார் தம் புத்தகம் பாடமாக வைக்கத் தகுதியற்றதென்று கூறியதையும், அதனால் பல பள்ளிக்கூடங்களில் அது பாடமாக வைக்கப்படாமல் மறுக்கப்பெறுவதையும் உணர்ந்திருந்தார். தம்முடைய மதிப்பைச் செட்டியாருக்கு அங்குள்ளவர்களாற்

புலப்படுத்திக் கண்டித்துவிட்டுச் செல்லவேண்டும் என்பது அவர் எண்ணம். கல்லூரிக்கு வந்த அவர், தம்மோடு படித்த ஒரு சாலை மாணுக்கரும் அங்கே ஆங்கில ஆசிரியராய் இருந்தவருமான சுந்தர ராவ் என்பவருடன் பல வகுப்புகளையும் ஆசிரியர்களையும் பார்த்துவிட்டுத் தமிழ் வகுப்புக்கும் வந்து நின்ருர்; தியாகராச செட்டியார் பாடஞ் சொல்லும் ஆற்றலைக் கவனித்தார். அவரிடம் நேரிலே தம் புத்தகத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்த அக்கனவான், 'இவரிடம் நாம் எப்படி கேட்பது! இவர் மிகச் சிறந்த கல்வியாற்றல் உடையவராய்த் தோன்றுகிருரே!' என்று எண்ணி, அஞ்சிச் சும்மா இருந்துவிட்டுச் சென்ருர். சுந்தர ராவ், நாள்தோறும் பாடம் முடிந்தவுடன் தம்முடைய வண்டியில் தியாகராச செட்டியாரையும் ஏற்றிக்கொண்டு செல்வது வழக்கம். அன்று அவர் செட்டியாரையும் தம் நண்பராகிய அக்கனவானையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்.

11. வண்டி செல்லுகையில், சுந்தர ராவ் தம்முடைய நண்பரை இன்னரென்று செட்டியாருக்கு அறிமுகம் செய்து வைத்துவிட்டு, "இவர்கள் புதிய முறையில் நன்னூல் ஒன்று அச்சிட்டிருக்கிருர்கள். அதைத் தாங்கள் பார்த்ததுண்டோ?" என்று கேட்டனர். செட்டியார், "ஆம்; பார்த்திருக்கிறேன்," என்று கூறிவிட்டுப் பேசாமல் இருந்தார்.

12. உடனே சுந்தர ராவ் அந்தக் கனவானைப் பார்த்து, "இவர்களே தியாகராச செட்டியாரவர்கள்; சிறந்த வித்துவான். இந்நாட்டில் இவர்களைப் போன்ற வித்துவான்களே இல்லை," என்று சொல்லிச் செட்டியாரை அறிமுகம் செய்து வைத்தார்.

13. அதனைக் கேட்ட கனவான், தம்முடைய நண்பராகிய சுந்தர ராவ் இருக்கிருரென்ற தைரியத்தினல், செட்டியாரை நோக்கி, "என்ன, ஐயா! நான் ஆராய்ந்து அச்சிட்ட நன்னூலைப்

பாடம் வைக்கக் கூடாதென்று கண்டித்தீர்களாமே! என்ன நியாயத்தைக்கொண்டு அப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்டார். அவருடைய கேள்வி அதிகாரத் தொனியோடு இருந்தது.

14. செட்டியார் உடனே, "அந்த நன்னூலைப் பதிப்பித்தவர் தாங்களோ! எனக்குத் தெரியாது. இருக்கட்டும்; நன்னூலில் 200 சூத்திரங்களுக்குமேல் விலக்கியிருக்கிறீர்களே! என்ன நியாயத்தைக்கொண்டு விலக்கினீர்கள்?" என்று கேட்டார்.

15. கனவான் :—எல்லாச் சூத்திரங்களும் பயன்படுகின்றனவா? பிள்ளைகளுக்கு அவசியமானவற்றை மட்டும் வைத்து மற்றவற்றை நீக்கிவிட்டால், அவர்கள் எளிதிலே படிப்பார்களல்லவா?

16. செட்டியார் :—எல்லாச் சூத்திரங்களும் பயன்படவில்லையென்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் எந்தப் பள்ளிக்கூடத்திலாவது பாடஞ் சொல்லியிருக்கிறீர்களா? பிள்ளைகளுக்கு எளிதாயிருக்க வேண்டுமென்றால், எல்லாச் சூத்திரங்களையும் எடுத்திருக்கலாமே? நீங்கள் விலக்கியுள்ள சூத்திரங்களெல்லாம் அவசியமாக இருக்க வேண்டுமென்று நான் காரணங் காட்டி நிரூபிக்கிறேன்; நீங்கள் அல்லவென்று மெய்ப்பிப்பீர்களா? நன்னூல் உங்கள் விருப்பப்படி குறைப்பதற்கும் கூட்டுவதற்கும் என்ன கிள்ளுக்கீரையா? அது கிடக்கட்டும். நீங்கள் நன்னூலைப் பதிப்பிக்க வந்தீர்களே, அதிலுள்ள உதாரணங்களை ஏன் கத்தரித்திருக்கிறீர்கள்? அந்த உதாரணங்கள் எதற்காக இருக்கின்றன என்பதை நீங்கள் அறிந்ததுண்டா? அன்மொழித் தொகைக்கு உதாரணம் வாக்கியத்தில் அமைத்துக் காட்டாமல் தொடர் மொழியை மட்டும் காட்டியிருக்கிறீர்களே! பூங்குழல் வந்தாளென்பதை பூங்குழலென்று குறைத்துவிட்டால், அன்மொழித் தொகையாகுமா? பூங்குழல் வந்தாள்' என்று

வாக்கியத்தில் வரும்போதுதானே அது 'பூங்குழலையுடையாள்' என்று பொருள்படும்? இவைகளை அறிந்துகொள்ளாமற் பதிப்பித்திருக்கிறீர்களே! 'தண்டையி னினக்கிளி கடிவோள், பண்டைய ளல்லள் மானோக்கினளே' என்ற உதாரணத்தைப் பிள்ளைகளுக்கு எளிதாக இருக்க வேண்டுமென்று வெட்டி, 'தண்டையி னினக்கிளி கடிவோள்' என்பதை மட்டும் காட்டியிருக்கிறீர்களே! 'பண்டையளல்லள்' என்பதும் இருந்தால்தானே எதுகையின் பொருட்டுத் தட்டை யென்பது தண்டையென்று வந்ததென்பது தெரியும்?

17. கனவான் :—அவையெல்லாம் உபாத்தியாயர் சொல்லி விளக்கமாட்டாரா?

18. செட்டியார் :—உபாத்தியாயர் புத்தகத்தில் இருப்பதைத்தானே விளக்குவார்? இல்லாத போதும், இருப்பதே தப்பாக இருந்தாலும், எப்படி விளக்குவார்? உபாத்தியாயர் நன்னூல் முழுவதையுமே மனப்பாடம் பண்ணிச் சொல்லிவிடுகிறார்; உங்களுடைய புத்தகம் எதற்கு?

19. இங்ஙனம் சொல்லி மேலும் மேலும் அப்பதிப்பிலுள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லியதோடு சில கேள்விகளையும் செட்டியார் கேட்கத் தொடங்கினார். அவற்றிற்கு விடை சொல்ல இயலாமலிருந்த கனவான், மனம் குழம்பி, ஆத்திரம் மிக்கவராகி, உரத்த குரலில், "நான் என்ன பண்டிதனா?" என்றார். அவர் கேட்ட மாதிரியில் பண்டிதனென்று கூறப்படுதல் இழிவென்று அவர் நினைத்தமை தோற்றியது.

20. செட்டியாருக்குக் கோபம் வந்துவிட்டது. "உம்மை எவனையா பண்டிதரென்று சொன்னான்? பண்டிதரல்லவென்று நினைத்துத்தானே சொல்லுகிறேன்! இதை உங்களுடைய ஏவலின்மேற் பதிப்பித்தவன் யாரோ அவன் அறியாதவன்; குல்லாய்க்கு ஏற்றபடி தலையை நறுக்கிக்கொண்ட புத்திசாலியைச்

சேர்ந்தவன்; நீங்கள் பண்டிதரென்பது இழிவான பட்டமென்று நினைப்பதாகத் தெரிகிறது; இப்படிப்பட்ட காரியத்தைப் பண்டிதர்களே செய்ய வேண்டும். நீங்கள் சட்ட புத்தகங்களைப் படித்து ஆராய்ந்து வாதம் பண்ணுவதோடு நில்லாமல், தமிழ் வழிக்கு ஏன் வருகிறீர்கள்? உங்களுக்குத் தெரியாத துறையில் இவ்வளவு துணிவாக நீங்கள் இறங்கியதோடு தமிழ்ப் பண்டிதர்களையும் வற்புறுத்திப் பாடம் வைக்கும்படி தூண்டலாமா? உங்களுக்குத் தமிழபிமானம் இருந்தால், நல்ல புத்தகங்களை வாசித்து இன்புறும் அளவோடல்லவா நிற்க வேண்டும்?" என்றார்.

21. அந்தக் கனவானுக்கும் கோபம் சிறிது சிறிதாய் வளர்ந்தது; மீசை துடித்தது. 'என்னை இன்னுனென்று தெரியாமற் பேசுகிறீரே!' என்று கோபத்துடன் அவர் கூறினர்.

22. உடனே செட்டியார், "உங்களை நன்றாக தெரிந்துகொண்டுதான் பேசுகிறேன்; உங்கள் கடிகாரச் சங்கிலிக்கும், சட்டைக்கும், மீசைக்கும் பயந்தவனல்லன் நான். வண்டியை விட்டு இறங்குங்கள்; ஓரிடத்தில் இருந்து பேசுவோம். உங்களுடைய அறியாமையை வெளிப்படுத்துகிறேன்," என்று சொல்லிச் சுந்தர ராவைப் பார்த்து, 'வண்டியை நிறுத்தச் சொல்லுங்கள்,' என்றார்.

23. இந்த விபரீதத்தைக் கேட்ட சுந்தர ராவ், இடைமறித்து, அந்தக் கனவானைப்பார்த்து, "நாமெல்லாம் படித்தவர்களோடு வாதம் செய்யலாமா? இவர்களிடம் நாங்கள் பெரிய மதிப்பு வைத்து மரியாதையாக நடந்துகொள்கிறோம். இவர்கள் இருப்பது எங்கள் கல்லூரிக்கே கௌரவம். நீங்கள் இவர்களைத் தெரிந்துகொள்ளாமற் பேசுகிறீர்களே! தமிழ் விஷயத்தில் இவர்கள் இட்ட சட்டத்தை மீறுபவர் இங்கே யார் இருக்கிறார்? உங்களுடைய தமிழ்ப் படிப்பு எனக்குத் தெரியாதா? நாமிரு-

வரும் சேர்ந்து படித்தவர்களல்லவா? இப்போது நான் ஒரு புத்தகம் போட்டுவிடலாமா? நன்னூலைப் பதிப்பிக்க நம்மைப்போன்றவர்களுக்குத் தகுதி ஏது?" என்று சொல்லிவிட்டுச் செட்டியாரையும் சமாதானப்படுத்தினர்.

24. இந்தப் பேச்சுகள் வண்டியிலேயே நிகழ்ந்தாலும், பக்கத்தில் நடந்து வந்த மாணக்கர்கள் காதிலும் மற்றவர்கள் காதிலும் பட்டன. மாணக்கர்களுக்குத் தெரிந்தால், அப்புறம் வேறு விளம்பரங்கள் எதற்கு? இந்த நிகழ்ச்சி எங்கும் பரவியது; தியாகராச செட்டியாருடைய புகழ் பின்னும் மிகுதியாயிற்று.

25. பிறருடைய குறையைக் கண்டவிடத்துக் கண்டிக்கும் இயல்புடைய செட்டியார், தம்முடைய அறிவெல்லையையும் நன்ருக உணர்ந்திருந்தார்; தம்முடைய அளவுக்கு மிஞ்சிய காரியத்தைப் பிறர் வற்புறுத்தினும் செய்யார்; இது மிகச் சிறுபான்மையோரிடத்தில் மாத்திரம் காணப்படும் அருமையான குணம்.

26. திரிசிராப்பள்ளியிலும் வேறு இடங்களிலும் சிரஸ்தேதாராயும் டிப்டி கலெக்டராயும் இருந்து விளங்கிய திரு. பட்டாபிராம பிள்ளை என்பவர், தமிழபிமானம் மிக்கவர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் பாதுகாக்கும் இயல்பினர்; ஸ்ரீ தியாகராச செட்டியாரிடத்தில் மிக்க அன்பு பூண்டவர்; அறிவாளிகள் நிலையான காரியங்கள் செய்யவேண்டுமென்பது அவருடைய விருப்பம்; திவ்வியப் பிரபந்தங்களுக்கு வடமொழி தென்மொழியிற் சிறந்த பெரியோர்களாற் செய்யப்பெற்ற வியாக்கியானங்கள் இருப்பது போலத் தேவார திருவாசகங்களுக்கும் இல்லையேயென்ற வருத்தம் அவருக்கு உண்டு. அதனல் சைவ மடாதிபதிகளையும் சைவ வித்துவான்களையும் சந்திக்கும் பொழுதெல்லாம் திருமுறைகளுக்கு ஓர் உரை எழுதும்படி வற்புறுத்திக்

கூறுவார். கேட்பவரிற் பெரும்பாலோர், 'இயன்ற வரையில் உழைத்துப் பார்ப்போம்,' என்றே விடை பகர்ந்து வந்தனர்.

27. தியாகராச செட்டியார் உபகாரச் சம்பளம் பெற்றுத் திருவானைக்காவில் சில ஆண்டுகள் இருந்தபோது பட்டாபிராம பிள்ளை அவர் வீட்டிற்கு அடிக்கடி சென்று பார்த்து வருவார்; அப்பொழுது அவரைத் திருவாசகத்திற்கு உரை எழுதவேண்டுமென்று வற்புறுத்திக் கூறுவார்; அன்றியும், அங்கங்கே நிகழும் கல்யாணங்களை விசாரிக்கப் போன காலங்களிலும் மற்ற இடங்களுக்குச் சென்றிருந்த காலங்களிலும் அவரைச் சந்தித்த போதெல்லாம் மேலும் மேலும் கூறுவார்; "எழுத ஆரம்பித்தீர்களா? எவ்வளவு ஆயிற்று?" என்று கேட்பார்; அருகிலுள்ள கனவான்களிடம், "இவரிடம் எவ்வளவு நாளாகச் சொல்லி வருகிறேன்! கேட்கமாட்டேன் என்கிறாரே!" என்று சொல்லுவார்.

28. ஒரு நாள் செட்டியார் திரிசிராப்பள்ளியில் உள்ள உறவினரொருவர் வீட்டில் நிகழ்ந்த ஒரு துக்கத்தைச் சென்று விசாரித்துவிட்டுக் காவிரியில் நீராடி, ஈரத்துணியோடு மீண்டு காவிரிப் பாலத்தின்மேல் நடந்து வந்துகொண்டிருந்தார். அப்பொழுது நடுப்பகல் பன்னிரண்டு மணி நேரம். செட்டியார் வெயிலாலும் பசியாலும் மிகக் களைப்படைந்திருந்தார்.

29. அப்பொழுது பட்டாபிராம பிள்ளை ஸ்ரீரங்கம் சென்று பெருமாளைத் தரிசனம் செய்துவிட்டு, மார்பிற் சந்தனம் விளங்க, உற்சாகத்துடன் எதிரே ஒரு வண்டியில் வந்தார். அவர், செட்டியாரைக் கண்டவுடன் வண்டியை நிறுத்திக் கீழே இறங்கினார்; செட்டியாரை அணுகி க்ஷேம சமாசாரம் விசாரித்துப் பின்பு வழக்கம்போல, 'திருவாசகவுரை எவ்வளவாயிற்று?' என்று கேட்டார்.

30. நீண்ட நாளாக இவ்விஷயத்தைப் பற்றி எவ்விடத்திலுங் கேட்டு வந்ததனாலும், அப்பொழுது இருந்த தளர்ச்சி-

யினும் செட்டியாருக்குக் கோபம் உண்டாயிற்று; "நீங்கள் கொஞ்சமாவது திருவாசகத்தின் பெருமையை அறிந்து-கொள்ளவே இல்லை என்று நிச்சயமாய்ச் சொல்கிறேன். அதற்கு என்னால் உரை எழுத முடியுமா? திருவாசகம் எவ்வளவு! என்னுடைய படிப்பு எவ்வளவு! அதற்கு உரை எழுதவேண்டு-மென்றால், வேதம், உபநிஷதம், ஆகமங்கள், புராணங்கள், யோக சாஸ்திரங்கள் முதலியவை தெரிய வேண்டாவா? தமிழில் உள்ள இலக்கண இலக்கியங்களையும் சில சைவ சித்தாந்த சாஸ்திரங்-களையுமே படித்த நான் எப்படி எழுத முடியும்?." என்றார்.

31. பட்டாபிராம பிள்ளை:—திவ்வியப் பிரபந்தத்திற்கு அவர்கள் வியாக்கியானம் செய்யவில்லையா?

32. செட்டியார்:—என்ன ஐயா! உங்களுக்கு அவர்களு-டைய படிப்பின் அளவு சிறிதேனும் தெரியாதுபோல இருக்-கிறது. அவர்கள் வடமொழி தென்மொழிகளிற் சிறந்த புலமை உடையவர்கள்; அவர்கள் உரையினாலல்லவா நூலின் பெருமை அதிகமாகின்றது? நான் உரை எழுதினால் திருவாசகத்திற்கு எவ்வளவு குறைவு உண்டாகும் தெரியுமா? என்னுடைய உரையினால் அதற்குக் குறைவேற்பட வேண்டுமென்பது தங்கள் எண்ணமோ? எங்கே கண்டாலும் நச்சுநச்சென்று என் படிப்பின் அளவு தெரியாமல் திருவாசகத்துக்கு உரை எழுதும்-படி சொல்லிச்சொல்லி என்னை வருத்துகின்றீர்கள். இனிமேலும் இப்படித் தொந்தரவு செய்வதாயிருந்தால், இதோ இந்தக் காவிரியில் இப்படியே பொத்தென்று விழுந்து என் உயிரை விட்டுவிடுவேன். 'பட்டாபிராம பிள்ளையவர்கள் திருவாசகத்துக்கு உரை எழுதும்படி அடிக்கடி தொந்தரவு செய்ததனால், அந்தத் துன்பத்தைத் தாங்கமாட்டாமல் தியாகராச செட்டியார் ஆற்றில் விழுந்து விட்டார்,' என்ற அபக்கியாதி உங்களுக்கு ஏற்படும்.

33. பட்டாபிராம பிள்ளை உடனே செட்டியாருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு, "ஐயா! ஐயா! வேண்டாம் ஐயா! இனிமேல் நான் இதைப்பற்றிக் கேட்பதே இல்லை, ஐயா!" என்று சொல்லிச் சமாதானப்படுத்திவிட்டு, அவருடைய அயர்ச்சியான நிலைமை அறிந்து அவரைத் தம் வண்டியில் ஏற்றித் திருவானைக்-காவிலுள்ள அவர் இருப்பிடத்தில் அவரை விட்டுவிட்டு. மீண்டு திரிசிரபுரத்திலிருந்த தம்மிடம் சென்றார். —கரந்தைக் கட்டுரை.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. தியாகராச செட்டியாரின் சிறந்த குணங்கள் யாவை?

2. தியாகராச செட்டியார் பிறருடைய குற்றத்தை அஞ்சாது கண்டிக்கும் குணம் உடையவர் என்பதை விளக்குக.

II. தியாகராச செட்டியாரின் வாழ்க்கையைச் சுருக்கமாக ஒரு பத்தியில் (10 வரிக்குள்) எழுதுக.

## இலக்கணம்

### போலி

சொற்களில் பொருள் வேறுபடாமல் ஓர் எழுத்துக்கு ஈடாக வேறோர் எழுத்து வந்தால், அது 'போலி' எழுத்து எனப்படும். (போலி=போல நிற்பது) போலி, மொழி முதற் போலி, மொழி இடைப் போலி, மொழி கடைப் போலி என மூன்று வகைப்படும்.

உதாரணம் :—

| | | |
|---|---|---|
| ஐயம் — அய்யம் | } | மொழி முதற்போலி |
| ஔவை — அவ்வை | } | |
| அரசு — அரைசு | | மொழி இடைப் போலி |
| பந்தல் — பந்தர் | } | மொழி கடைப் போலி |
| மதில் — மதிள் | } | |

## சொல்

### பகுபதம்—பகாப்பதம்

பகுக்கப்படும் இயல்பை உடைய பதம் பகுபதம். அது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரு வகைப்படும்.

பகுபத உறுப்புக்கள்—பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறும் பகுபத உறுப்புக்களாம்.

பகுக்கப்படாத இயல்பை உடைய பதம் பகாப்பதம். இது பெயர்ப் பகாப்பதம், வினைப் பகாப்பதம், இடைப் பகாப்பதம், உரிப் பகாப்பதம் என நான்கு வகைப்படும்.

### சொல்லின் வகை

சொல்லின் வகை நான்கு. அவை பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பன.

பெயர்ச்சொல், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு வகையில் ஏதேனும் ஒன்றன் பெயரைக் குறிப்பதாம்.

போதுப் பெயர்: பல பொருள்களுக்குப் பொதுவாய் வழங்கும் பெயர், பொதுப் பெயர் எனப்படும்.

சிறப்புப் பெயர்: ஒரு பொருளுக்கே சிறப்பாய் வழங்கும் பெயர், சிறப்புப் பெயர் எனப்படும்.

இடுகுறிப் பெயர்: காரணம் இல்லாமல் ஒரு பொருளுக்கு இட்ட குறியாய் வழங்கும் பெயர், இடுகுறிப் பெயர் எனப்படும்.

காரணப் பெயர்: ஒரு காரணத்தினால் ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர், காரணப் பெயர் எனப்படும்.

சுட்டுப் பெயர்: சுட்டுப் பொருளில் வரும் பெயர், சுட்டுப் பெயர் எனப்படும்.

வினாப் பெயர்: வினாப்பொருளில் வரும் பெயர், வினாப் பெயர் எனப்படும்.

# 8. நாஞ்சி நாட்டுச் சிறப்பு*

வஞ்சிநா டதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்கும் தேயமொன் றுளது ; அதன்
அந்தமில் பெருவளம் அறியார் யாரே ?
மருதமும் நெய்தலும் மயங்கிஅங் கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற வளரும்
மழலைவண் டானம் புலர்மீன் கவர,
ஓம்புபு நுளைச்சியர் எறிகுழை, தேன்பொழி
புன்னைநுண் தாதாற் பொன்னிறம் பெற்ற
எருமையின் புறத்திருந்து இருஞ்சிறை புலர்த்தும்
அலைகடற் காக்கைக்கு அலக்கண் விளைக்கும் ;
கேதகை மலர்நிழல் இனமெனக் கருதித்
தாராத் தழுவிடச் சார்தரச் சிரித்த
ஆம்பல்வாய் கொட்டிடும் கோங்குஅலர்த் தாதே ;
வால்வளை சூல்உளைந்து ஈன்றவெண் முத்தம்
ஓதிமக் குடம்பையென்று உன்னுபு காலாற்
பருந்தினம் கவர்ந்துசென்று அளம்பிடைப் புதைக்கும் ;
கரும்பு அடு சாலையின் பெரும்புகை மண்டக்
கூம்பிய நெய்தற் பூந்தளிர் குளிர
மேய்ந்து அகல் காரா தீம்பால் துளிக்கும் ;
அலமுகம் தாக்குழி அலமரும் ஆமை
நுளைச்சியர் கணவரோடு இழைத்திடும் ஊடலில்
வழித்தெறி குங்குமச் சேற்றிடை யொளிக்கும் ;
பூஞ்சினை மருதிடை வாழ்ந்திடும் அன்றில்
நளிமீன் கோட்பறை விளிகேட்டு உறங்கா ;

---

*மனோன்மணீயம், அங்கம்-II, களம்-I, அடி. 75-102.

25. வேயென வளர்ந்த சாய்குலைச் சாலியில்
உப்பாற் பஃறி யொருநிரை பிணிப்பர்.
இப்பெருந் தேயத்து எங்கும் இராப்பகல்
தப்பினும் மாரி தன்கடன் தவறா.

மனோன்மணீயம்] [பெ. சுந்தரம் பிள்ளை

நன்செய் நாடு - நாஞ்சி நாடு, புரை அறு - குற்றமற்ற, வண்டானம் - வண்டானக் குருகு, ஓம்புபு - ஓட்ட, அலக் கண் - வருத்தம், கேதகை - கைதை என்ற தாழை மலர், தழுவிட - தழுவுவதற்கு, வால் - வெண்மையான, வளை - சங்கு, ஓதிமக் குடம்பை - அன்னத்தின் முட்டை, அடம்பு - நெய்தல் நிலத்துக்கொடி, 'கரும்பு அடு - கருப்பஞ்சாறு காய்ச்சும், காரா - எருமை, அலம் + முகம் - கலப்பையின் கொழு முனை, வேய் - மூங்கில், பஃறி - தோணி.

பயிற்சி :

1. நாஞ்சி நாட்டின் சிறப்பை உங்கள் சொந்த வார்த்தைகளால் வருணித்து எழுதுக.

2. அந்தமில் பெருவளம், புரையறு செல்வம், ஓதிமக் குடம்பை, அலமுகம்—பொருள் எழுதுக.

3. 'வஞ்சிநாடதனில் ——— ——— உளது.' — இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளை எடுத்தெழுதுக.

## இலக்கணம்

தொழிற்பெயரும் வினையால் அணையும் பெயரும்

தொழிலின் பெயரைக் குறிப்பது தொழிற்பெயர்.

உதாரணம் :—கல்வி கற்றல் நல்லது.

ஒரு வினை முற்றே அவ்வினையை உடைய பொருளின் பெயராகி வேற்றுமை ஏற்று வரின், அது வினையால் அணையும் பெயராகும்.

உதாரணம் :—கற்றோரை உலகம் போற்றும்.

தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு :

1. தொழிலுக்குப் பெயராய் வருவது தொழிற்பெயர்.
2. தொழிற்பெயர் பெரும்பாலும் காலத்தை உணர்த்தாது.
3. தொழிற்பெயர் படர்க்கையிலேயே வரும்.

1. தொழிலையுடைய பொருளுக்குப் பெயராய் வருவது வினையாலணையும் பெயர்.
2. வினையாலணையும் பெயர் காலத்தைக் காட்டும்.
3. வினையாலணையும் பெயர் மூவிடத்தும் வரும்.

---

# 9. அகல்யா பாய்

[டாக்டர் ஸி. மீனாக்ஷி, எம்.ஏ., பி.எச்.டி.,]

1. பாரத மாதா அணியும் இந்திய சரித்திரமென்கிற ஒரு சுவர்ண ஆபரணத்தில் பதித்த விலையற்ற மரகதக் கற்கள் போன்ற சில பெண்மணிகளின் ஜீவிதங்களில் ஒன்று அகல்யா பாயினுடையது.

2. பதினேழாவது நூற்றாண்டில் சிவாஜி என்னும் பெயர் பெற்ற வீர புருஷரால் மொகலாய அரசாட்சி தாக்கப்பட்டு, மிக்க தளர்ச்சி அடைந்ததென்பதைச் சரித்திர மூலமாய் அறி-கிறோம். அத்தகைய மஹாராஷ்டிர அரசராகிய சிவாஜி காலம் சென்றபின் அவருடைய புத்திர பௌத்திரர்களால் அவரைப் போலப் பராக்கிரமத்துடன் சத்துருக்களை எதிர்க்க முடியவில்லை. ஆகவே, சிவாஜியினுடைய பிராமண மந்திரிகள் முன் வந்து தலைமை வகித்துப் பேஷ்வா என்னும் நாமத்தை அடைந்து, அரசை ஆள ஆரம்பித்தார்கள். மற்ற ராஜ்யங்களைக் கைப்பற்றித் தங்கள் ஸ்வாதீனமாக்கிக்கொள்ளும் அவா, அவர்களுக்கு அதி-கரித்தது. சில காலத்திற்கெல்லாம் மஹாராஷ்டிர ராஜ்யம்

அதிக விரிவை அடைந்தது. அவர்கள் மால்வா என்கிற தேசத்தையும் கைப்பற்றிச் சொந்தமாக்கிக் கொண்டார்கள். ராஜ்யம் அதிகரித்ததனால் அரசாட்சியை நடத்துவது பேஷ்வா-வுக்குப் பிரயாசமாய் இருந்தது. ஆகையினால், கைப்பற்றிய ராஜதானியைச் சிறிய மாகாணங்களாகப் பகுத்து, ஒவ்வொன்-றிற்கும் ஒவ்வொரு தலைவரை நியமித்தார். இப்படி ஏற்படுத்தப்-பட்ட தலைவர் யாவரும் எளிய குலத்தோராயினும், தம் வீரத்-தன்மையினாலேயே அப்பதவிகளை அடைந்தனர் என்பதற்குச்



அகல்யா பாய்

சந்தேகமே இல்லை. பின் வந்த ஹோல்கர் வமிசத்தவர்கள் யாதவர்களென்று அறிகிறோம். இவ்விதம் அப்பொழுது ஏற்-

படுத்தப்பட்ட சிறிய மாகாணங்களில் முக்கியமான மூன்று, இப்பொழுதும் நிலைத்திருக்கின்றன. அவை இந்தூர், குவாலியர், பரோடா என்பனவாம்.

3. இந்தூர் மாகாணம், ஹோல்கர் வமிசத்தைச் சேர்ந்த மல்ஹார் ராவ் என்பவரிடத்தில் ஒப்பிக்கப்பட்டது. இந்த மல்ஹார் ராவ் என்பவர் முன்பே பேஷ்வாவினிடம் ஊழியம் புரிந்து, அவரால் மெச்சப்பட்டவர். மல்ஹார் ராவ் சில காலம் ஆண்டபின், கி. பி. 1765-ஆம் வருஷம் காலம் சென்றார்.

4. மல்ஹார் ராவினுடைய ஏகபுத்திரராகிய கந்தே ராவ் பானிப்பட்டு யுத்தத்திற்குச் சில வருஷங்களுக்கு முன்பு கம்பேர் என்னும் பட்டணத்தை முற்றுகையிட்ட பொழுது அடிபட்டு இறந்தார். பானிப்பட்டு யுத்தம் கி. பி. 1761-ஆம் வருஷம் நடைபெற்றது. ஆகவே, கந்தே ராவ் தம் தகப்பனருக்குப் பத்து வருஷங்களுக்கு முன்பே காலம் சென்றார்.

5. கந்தே ராவினுடைய தர்ம பத்தினி, சிந்திய வமி-சத்தைச் சேர்ந்த அகல்யா பாய் என்பவள். அவள் ஒரு புத்திர-னையும் ஒரு புத்திரியையும் பெற்று இளமையிலேயே கணவரை இழந்தாள். அவளுடைய புத்திரன் மாலி ராவ் என்பவனும், தன் தகப்பனருடைய அரசுரிமையைப் பெற்றும், துரதிர்ஷ்ட வசத்தினால் ஒன்பது மாதங்களுக்குள் இறந்துவிட்டான்.

6. மாலி ராவ் இளமையிலிருந்தே சிறிது புத்தி சரி-யில்லாதவனாய் இருந்தான். தகப்பனர் காலம் சென்ற பின்பு ஒன்பது மாத காலம் மாலி ராவ் ராஜ்யத்திற்குத் தலைமை வகித்த பொழுது செய்த ஒவ்வொரு காரியமும் அவனுடைய பேதை-மையை வெளிப்படுத்தியது.

7. அவன் தாயான அகல்யா பாய், தர்ம கைங்கரியத்தில் அதிக ஊக்கம் கொண்டவள்; பிராமணர்களிடத்தில் மிக்க அன்பு பாராட்டினாள். ஆனால், அவள் புத்திரன் மாலி ராவோ, அவ்-

வந்தணர்களைத் தன் கேலிக்கூத்துக்கு ஈடாக்கினன். பிராமணர்களுக்குத் தானம் கொடுக்கும் வேஷ்டிகளிலும், பாதரக்ஷைகளிலும் மாலி ராவ் தேள்களை ஒளித்து வைத்தும், கும்பங்களில் பணத்தை நிரப்பி விஷப்பாம்புகளைப் பிடித்துப் போட்டும், அந்தணர்களை அழைத்து அவர்களிடத்தில் அவைகளைக் கொடுக்கும் பொழுது அவர்கள் அவ்விஷ ஜந்துக்களால் தீண்டப்பட்டுத் தவிப்பதைக் கண்டு களிப்புறுவான். இம்மாதிரியான கெட்ட செயல்கள் மாலி ராவுக்கு எவ்வளவுக்கெவ்வளவு மகிழ்ச்சியை உண்டாக்கினவோ, அவ்வளவுக்கவ்வளவு அகல்யா பாய்க்குத் துக்கத்தை விளைவித்தன. தனக்கு இம்மாதிரியான பேய்ப்பிள்ளை பிறந்திருப்பதை நினைத்து நினைத்து அவள் வருந்துவாள்.

8. 'இத்தகைய துஷ்டப்பிள்ளை இறப்பதே நலம்,' என்று யோசனை செய்து, அகல்யா பாய் தன் பிள்ளையினுடைய உயிரைத் தானே முடித்துவிட்டதாகச் சிலர் கூறுவதும் உண்டு. ஆனால், அகல்யா பாயினுடைய சரித்திரத்தைப் பூர்த்தியாக எழுதிய மால்கம் துரை என்பவர், மேலே சொல்லப்பட்ட கதை அறியாதார் வார்த்தையே தவிர அச்செய்திக்கு ஆதாரம் யாதுமில்லை என்கிறார். இது மட்டும் அன்று; அகல்யா பாயைப்பற்றிய வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், அவ்வுத்தமஸ்திரீ இக்கொடூரமான பாவச் செயலில் ஈடுபட்டிருக்கவே மாட்டாளென்ற முடிவுக்கு வருவது திண்ணம்.

9. மாலி ராவினுடைய அகால மரணத்திற்கு வேறு காரணமும் சொல்லப்படுகிறது: அதாவது, அரண்மனையிலிருந்த ஒரு தையற்காரன் பேரில் அகாரணமாய் ஏதோ ஒரு குற்றத்தை சாட்டி விசாரணை செய்யாமல் உடனே அவனை மாலி ராவ் கொலை செய்ததாகவும், சில தினங்களுக்குள் தையற்காரன் குற்றவாளியல்லன் என்பதனை அறிந்த மாலி

ராவ் திடுக்கிட்டுப் பயந்து பயித்தியம் அதிகரித்துத் தையற்காரனையே நினைத்து நினைத்துக் கதறி உயிரை விட்டதாகவும் தெரிய வருகிறது. இப்படி மாலி ராவ் உயிருக்காக மன்றாடும் தருணத்தில், அகல்யா பாய் கொலையுண்ட அத்தையற்காரனுடைய ஆத்துமா சாந்தியடையட்டும், தன் பிள்ளை பிழைக்கட்டுமென்று இரவும் பகலும் பகவானை வேண்டியும் ஒன்றும் பயன்படவில்லை.

10. அகல்யா பாயினுடைய ஏக புத்திரன் மாலி ராவ் காலம் சென்றான். அவள் புத்திரி மணம் புரிந்து வேறு குடும்பத்திற்குச் சென்றபடியால் ஹிந்து சட்டத்தின்படி அவள் பட்டத்திற்கு வர முடியவில்லை.

11. இச்சந்தர்ப்பத்தில், அகல்யா பாயின் மாமனாரிடத்தில் முன்பு மந்திரியாய் இருந்த கங்காதர் என்பவன் தன்னுடைய பதவி ஓங்க வேண்டுமென்ற பேராசையினாலும், ஸ்திரீயானபடியால் அகல்யா பாய் ராஜரிகம் செய்யத் தகுதியற்றவளென்ற எண்ணத்தினாலும், அகல்யா பாய் அதிகாரத்துக்கு வராமலிருக்கும்படி எவ்வளவு முயற்சிகள் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து பார்த்தான். அகல்யா பாயோ, மிக்க தைரியசாலி; நியாயம் சட்டம் இரண்டையும் நன்றாக அறிந்தவள். தன் புருஷன், பிள்ளை இவர்களுக்குப் பிற்காலத்தில் ராஜ்யம் தனக்குத்தான் சேரவேண்டுமென்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். இவ்விஷயத்தைத் தன் ஆப்த உறவினரோடும் மஹாராஷ்டிர சேனாபதிகளோடும் கலந்து யோசித்து, உறுதிப்படுத்திக்கொண்டாள்; இந்தத் தீர்மானத்தைப் பூனாவிலிருந்த பேஷ்வாவுக்கும் தெரிவித்து. அவருடைய உடன்பாட்டையும் பெற்றாள். இதற்குள் கங்காதர், அகல்யா பாயோடு போர் புரிவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். இதை அறிந்த அகல்யா பாய், தன்னுடைய யானையின்மேல் ஏறித் தானே நேரில் போய் யுத்தம் செய்யத் தயாராய் இருப்பதைத் தன் எதிரிக்குத்

தெரிவித்தாள். ஆனால், அதற்குள் பேஷ்வா முன் வந்து, கங்காதர் ராவைப் போர் புரியாமல் தடுத்துவிட்டு, அகல்யா பாயின் அரசாட்சியையும் ஒப்புக்கொள்வதாக அவனிடமிருந்து உறுதி மொழி வாங்கிவிட்டார். ஆகவே, கங்காதரின் சூழ்ச்சிகளெல்லாம் பயனில்லாமல் போய்விட்டன. பெருந்தன்மை வாய்ந்த அகல்யா பாய், தான் அதிகாரத்தைப் பெற்ற பின் கங்காதர் ராவினுடைய தப்பையெல்லாம் மறந்துவிட்டு, அவனுக்கு மறுபடியும் மந்திரி பதவியை அளித்தாள்.

12. அகல்யா பாய் 30 வருஷ காலம் (கி. பி. 1765—1795) அரசாட்சி செய்தாள். அரசாட்சியை ஒப்புக்கொண்ட அவள் முதல் காரியமாகத் துகாஜி என்கிற மஹா வீர புருஷனை முக்கிய சேனாதிபதியாக நியமித்து, அவனிடத்தில் முழு நம்பிக்கை வைத்துப் படை சம்பந்தமான எல்லா விவகாரங்களையும் அவன் கையில் ஒப்பித்து, ராஜ்யத்தின் தென்பாகத்தையும் அவன் அதிகாரத்துக்குள்ளாக்கி வைத்தாள். துகாஜியும் அகல்யா பாயினிடத்தில் பேரன்பு பூண்டு, தனக்கு அப்பதவியை அளித்த அகல்யா பாயைத் தன் தாயாகவே பாவித்து, அவள் அரசாட்சிக்கு எவ்வளவு துணை புரியலாமோ, அவ்வளவும் புரிந்து வந்தான்.

13. தினந்தோறும் அகல்யா பாய் நெடுநேரம் தர்பாரில் அமர்ந்து அரசியல் விஷயங்களைப் பற்றிக் கவனிப்பாள். அவள் அரசாட்சி செய்யுங் காலத்தில் சில முக்கியமான துறைகளில் தன் கவனத்தைச் செலுத்தி வந்தாள்.

அவையாவன :—

1. மிதமான இறை மதிப்பு (moderate land assessment).
2. பரம்பரையாய் வருகிற கிராம உத்தியோகஸ்தர்கள், மிராசுதார்கள் ஆகிய இவர்களுடைய அதிகாரத்தைக் காப்பாற்றுதல்.
3. சரியான விசாரணை.

நியாய விசாரணையைப் பெரும்பாலும் மந்திரிகளைக் கொண்டு நடத்திய போதிலும், சில சமயங்களில் அகல்யா பாய் தானே நேராக நியாயஸ்தலங்களுக்குப் போய் வழக்குகளைத் தீர்ப்பாள்.

14. அகல்யா பாயினது ஆட்சிக் காலத்தில் அவளுடைய ராஜதானியில் எப்பொழுதும் சமாதானமே நிலவியது. பிற தேசத்தரசர்களும் அவளுக்கு ஒரு விதமான இடையூறும் செய்யாமல் அதிக மரியாதை செலுத்தி வந்தார்கள்.

15. அகல்யா பாயின் அரசாட்சியை மால்கம் துரை பின் வருமாறு பாராட்டுகின்றார் :—

"இந்தியாவில் எந்த ராஜாங்கத்தில் மந்திரிகள் அடிக்கடி மாறாமல் நிலையாய் இருந்து சிறப்பாக ராஜ்ய பரிபாலனம் செய்கிறார்களோ, அந்த ராஜாங்கமே உத்தம ராஜாங்கமாகும். இவ்வுண்மை அகல்யா பாய் அரசாட்சியினால் விளங்குகிறது. கோவிந்த பண்டு குன்னூ என்கிற சிரேஷ்ட குணம் பொருந்திய ஒரு பிராமணர், பிரதம மந்திரியாய் அகல்யா பாயினுடைய அரசாட்சிக் கால முழுமையும் அப்பதவியை வகித்து, அதிக திறமையுடன் காரியங்களை நடத்தி வந்தார். இவரைப் போலவே மற்றப் பெரிய உத்தியோகஸ்தர்களும் நிலையாய் இருந்து வேலை செய்தார்கள்."

16. எல்லா விதத்திலும் அகல்யா பாயினுடைய அரசாட்சி பெருமை வாய்ந்தது. அவளுடைய சிறந்த கொள்கை என்ன-வென்றால், தன்னைச் சுற்றியிருக்கும் பிரஜைகள் யாவரும் எப்பொழுதும் செழிப்புற்று இருக்க வேண்டுமென்பதே. அவள் சௌகார்கள், வர்த்தகர்கள், குடியானவர்கள் எல்லோரும் தனவான்களாவதைக் கண்டு களிப்புறுவாள்; அவர்கள் மேல் வரிகளைச் சுமத்தித் துன்பப்படுத்த மாட்டாள். அவளுடைய அரசாட்சியின் பலனாக இந்தூர் ராஜ்யம் ஒரு சிறிய கிராம-மாயிருந்தது பெரிய செல்வாக்கு நிறைந்த ராஜதானியாகிவிட்டது.

17. இத்தகைய ராஜதானியிலிருந்து வரும் வரும்படியிற் பெரும்பகுதி ஒன்றை அகல்யா பாய் தரும கைங்கரியங்களில் செலவு செய்தாள்; பல கோட்டைகளைக் கட்டினாள்; விந்திய மலைச் சாரிலில் சாலைகளை அமைத்தாள்; பல கோவில்களையும், பிரயாணிகள் தங்குவதற்குரிய தரும சாலைகளையும் கட்டிக் கிணறுகளை வெட்டுவித்தாள். அவள் புதுப்பித்த கோயில்களில் காசியிலுள்ள தேவாலயமும் ஒன்று. அவளுடைய தருமம் அவளுடைய ராஜதானியோடு நிற்கவில்லை. இந்தியாவில் முக்கியமான புண்ணிய க்ஷேத்திரங்கள் எங்கங்கே உண்டோ, அங்கெல்லாம் அவள் கட்டடங்களைக் கட்டி வைத்து, அவை உபயோகப்படுவதற்கேற்றபடி பணமும் அனுப்பி வந்தாள். இராமேசுவரத்தில் அவள் நிறுவிய தரும சாலை ஒன்றிருக்கிறது. வடக்கே கயாவில் ஒரு சிவாலயத்தில் தெய்வ ஆராதனை செய்கிற மாதிரியாயுள்ள அவளுடைய உருவச் சிலையொன்றைக் காணலாம்.

18. அகல்யா பாய் அங்கவீனமுடையவர்களிடத்தில் மிகவும் இரக்கம் கொண்டவள்; கீழ் ஜாதியார்களை முக்கியமான தினங்களில் வரவழைத்து, ஸங்கீதம் பிரசங்கம் முதலியவற்றால் சந்தோஷப்படுத்துவாள்.

19. அகல்யா பாயினுடைய தினசரி ஒழுக்கங்கள் கவனிக்கத் தக்கவை: தினந்தோறும் அவள் காலையில் வெகு சீக்கிரம் படுக்கையிலிருந்து எழுந்து, சூரியோதயத்திற்கு ஒரு மணி முந்தியே ஸ்நானம், ஜபம் இரண்டையும் முடித்துக்கொள்வாள்; பிறகு சில அந்தணர்களை அழைத்து மத ஸம்பந்தமான பல புஸ்தகங்களைப் பாராயணம் செய்யும்படி சொல்லுவாள்; அதற்குப் பிறகு சில தானங்களைச் செய்து, பல பிராமணர்களுக்கு அன்னமளிப்பாள்; அவர்கள் உண்ட பின்பு தான் உண்ணத் தொடங்குவாள். ஊனுணவு கொள்ளும் குலத்தில் பிறந்தவளாயினும், மாமிசத்தை விலக்கிவிட்டுக் காய் கறிகளையே அகல்யா பாய் உட்கொண்டு வந்தாள்; உண்ட பிறகு மறுபடியும் ஜபம்

பண்ணிவிட்டுச் சிறிது நேரம் சிரம பரிகாரம் செய்வாள்; பிறகு அரசியின் கோலத்துக்கேற்ற உடை தரித்து, பிற்பகல் சுமார் இரண்டு மணியளவில் தர்பாருக்குச் செல்லுவாள்; அங்கே ஆறு மணி வரையில் இருப்பாள்; ஆறு மணியிலிருந்து ஒன்பது மணி வரையில் சில யோக அப்பியாசங்களைச் செய்து, பிறகு பத்தியமான ஆகாரத்தை உண்டு, ஒன்பது மணியிலிருந்து பதினொரு மணி வரையில் அரசியல் விஷயங்களைக் கவனிப்பாள். மேலே சொல்லப்பட்ட ஒழுக்கங்களைத் தினந்தோறும் கூடியமட்டில் தவறாமல் அகல்யா பாய் செய்து வந்தாள்.

20. குணத்தில் சிறந்த பெண்மணியான அகல்யா பாய் உருவத்தில் ரூபவதியென்று எங்கும் வர்ணிக்கப்படவில்லை. ஆனாலும், அவளுடைய சாந்த நடவடிக்கைகளும் புன்சிரிப்புள்ள முகமும் பார்ப்பவர்களுக்கு அதிக திருப்தியை உண்டாக்கின. அவள் நடுத்தர உயரம் வாய்ந்தவள்; அதிக பருமனுமில்லை; மலர்ந்த கண்களையுடையவள்.

21. சாதாரண ஸ்திரீயின் புத்தியைவிட அவளுடைய புத்தி அதிக தீவிரத்தை அடைந்திருந்தது. அவள் வேத புராணங்களைப் படித்து அவைகளின் கருத்தை அறிந்தவள். அரசியல் விஷயங்களில் மிக்க சுறுசுறுப்புள்ளவள். புருஷன் இறந்த பிறகு அவள் அலங்காரமான உடைகளைத் தரிக்காமல், எப்பொழுதும் வெள்ளை வஸ்திரத்தையே தரித்தாள். கழுத்தில் ஒரு சிறிய தங்க மாலையைத் தவிர வேறோர் ஆபரணத்தையும் அவள் அணியவில்லை.

22. அகல்யா பாய் காலமாகுமுன்னமே அவள் அருமையான புத்திரி, சதி என்கிற வழக்கத்தை மேற்கொண்டு, அக்கினிக்கு இரையானாள். புத்திரியை மட்டுமல்லாமல் பேரனையும் இழந்த அகல்யா பாய், தன் துக்கங்களெல்லாவற்றையும் ஒரு பக்கத்தில் ஒதுக்கிவைத்து, பிரஜைகளுடைய நன்மையையே எண்ணி,

அறுபது வயது வரையில் சோர்வின்றி அரசாட்சி செய்தது வியக்கத்தக்கதே. அவள் 1795-ஆம் வருஷம் சிவபதம் அடைந்தாள்.

23. ஒரு பெண் அரசாட்சி புரிதல் தகுதியல்லவென்று சிலர் அகல்யா பாயைத் தள்ளிவைக்கப் பலவகையில் முயற்சிகள் செய்தனர். அவள் அரசாட்சி எந்நாட்டிலும் எக்காலத்திலும் கொண்டாடத் தக்கதேயென்று உறுதியாகச் சொல்லலாம். தான் செய்த ஒவ்வொரு காரியமும் பகவானுக்கே அர்ப்பணம் என்ற மன உறுதி கொண்டவள் அகல்யா பாய்.

24. துறவு மனப்பான்மையை மிகுதியாகக் கொண்ட ஒருவனேனும், ஒருத்தியேனும் அரசாங்க பாரத்தை வகித்துக் காலத்திற்குத் தக்கபடி குடிகளைப் பாதுகாத்துச் செங்கோல் செலுத்துவது அரிய செயலன்றென்பதை அகல்யா பாயின் வரலாறு நன்றாக விளக்குகின்றது. —கலை மகள்

பயிற்சி:

I. விடை எழுதுக:—

1. அகல்யா பாய் என்பவள் யார்?

2. மாலி ராவ் பிராமணர்களுக்குச் செய்த கொடுமைகள் யாவை? அவன் அங்ஙனம் செய்ததற்குக் காரணம் என்ன?

3. அகல்யா பாய் ஆட்சி புரிய நேர்ந்த காரணம் யாது? அவள் எவ்வாறு ஆட்சி புரிந்தாள்?

4. அகல்யா பாயினுடைய நித்தியானுஷ்டானங்கள் எவை?

II. 1. 10-ஆம் பத்தியின் உள்ள 3-ஆம், 4-ஆம் வாக்கியங்களை ஒரே வாக்கியமாக அமைத்தெழுதுக.

2. 17-ஆம் பத்தியில் உள்ள இரண்டாவது வாக்கியத்தில் உள்ள வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்றி வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.

3. இப்பாடத்திலிருந்து தன் வினை, பிற வினை, செய்வினை, செயப்பாட்டு வினை ஆகியவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் எடுத்தெழுதுக.

## இலக்கணம்.

### வினைச்சொல்

வேற்றுமை உருபுகளை ஏற்காமல் காலத்தைக் காட்டிப் பொருளினது தொழிலைத் தெரிவிப்பது வினைச்சொல். அது தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரு வகைப்படும்.

காலத்தை வெளிப்படையாய்க் காட்டுவது தெரிநிலை வினை. காலம் காட்டும் உறுப்பைப் பெறுமல், சொல்லுவோனது குறிப்பினுல் காலம் தெரிவிப்பது குறிப்பு வினை.

### தெரிநிலை வினையின் பிரிவுகள்

தெரிநிலை வினையானது தன் வினை, பிறவினை, செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்று வினை, செய்வினை, செயப்பாட்டு வினை என பல வகைப்படும்.

### உடன்பாட்டு வினை—எதிர்மறை வினை

தொழில் நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் வினை உடன்பாட்டு வினை; தொழில் நிகழாமையைத் தெரிவிக்கும் வினை எதிர்மறை வினை.

உதாரணம் :—

1. இராமன் பரிசு பெற்முன்.—உடன்பாடு
2. இராமன் பரிசு பெற்றிலன்.—எதிர்மறை

# 10. மனோன்மணீயம்

## ஒரு நாடகம்

[திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள், M.A., L.T.]

(கதைச் சுருக்கம்—பாண்டிய மன்னன் ஜீவகனுடைய இராச்சியத்தைக் கவர எண்ணிய அவன் மந்திரி குடிலன், ஒரு சூழ்ச்சியால் சேர மன்னன் பாண்டி நாட்டின்மீது படையெடுத்து வரும்படி செய்தான். சேர நாட்டுப் படைக்கும் பாண்டி நாட்டுப் படைக்கும் முதல் நாள் நடந்த யுத்தத்தில் பாண்டியன் தோல்வியுற்றான். அன்று இரவு அவன் தன் குருவான சுந்தர முனிவருடன் செய்யும் காரியம் யாதென யோசிக்கிறான்.)

அங்கம்—ரு

களம்—க

இடம்: பாண்டியர் அரண்மனை நந்தவனம்

காலம்: மாலை

[ஜீவக வழுதியும் சுந்தர முனிவரும் ஒரு மேடைமீது அமர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

சுந் :—வளைந்து கொடுக்கும் மூங்கில் சூறாவளியிலும் பிழைத்து நிமிர்ந்து நிற்கும்; அரசே, வளையாத நெடுமரங்களன்றோ வேரோடும் கிளைகளோடுஞ் சாய்ந்து முறிந்து விழும்? வேண்டா இப்பிடிவாதம்.

ஜீவ :—மூங்கிலும் ஒரு மரமோ, சுவாமி? வைரமுற்றிய நெடுநாளைய மரங்களுக்கு எந்நிலையிலும் பெருமையே! நீண்டெழுந்து முதிர்ந்த தேக்கு ஆணி வேருடன் கிளம்பித் தலை சாய்ந்து வீழ்ந்தாலும், அதனை மக்கள் பத்திரமாக எடுத்து வைத்துக்கொண்டல்லவோ பாராட்டுவார்கள்!—சுவாமி, உயிர்ப்-

பென்பது என்னுடலிலுள்ள வரையில் அதைப் போரிட்டே போக்குவேன்! அதுவே எனக்குப் புகழ்!

சுந் :—இது என்ன பயித்தியக்காரத்தனம்! அரியது செய்தலே ஆண்மை. உமக்கும் உம்மைச் சேர்ந்தோர்க்கும் இன்னல் நேரா தவழி காவல் புரிந்து, அவர்கள் உயிருக்கும் உமது உயிருக்கும் வீண் சேதமுண்டாகா தவாறு ஒழுகுதல் அரிய செயலோ, போலிப் புகழை நாடி உமது உயிரை வீணே போக்கிக்கொள்ளுதல் அரிய செயலோ? தீக்குருவி கண்ணை மூடிக்கொண்டு தன் தலையை மண்ணில் புதைத்துவிட்டால், தனக்கு உலகம் இருண்டு எப்பொருளுந் தோன்றாதவாறே எவர்க்குந் தன்னைக் காண்பதியலாது என்று நினைப்பதுபோல இருக்கிறதே உங்கள் மயக்கம்!

ஜீவ :—சுவாமி, ஒவ்வொரு மன்னனுக்கும் ஒவ்வொரு புது நோக்கம் இருக்க வேண்டுவது அவசியமன்றோ! அவர்கள் காலத்தில் ஏதோ ஒரு புதுமையினை இயற்றினர்கள் என்பதே அவர்களுக்குப் பெரும்புகழ் அளிப்பதாகும். நான் இவ்வரணினை இடித்துப் புதுமையான முறையில் கட்டி இதன் வன்மையைக்கொண்டு பகைவர்களைப் பஞ்செனப் பறக்கடிக்க வேண்டுமென அவாவியன்றோ எனது பழைய இராசதானியையும் விட்டு இங்கு வந்து அரசாளலானேன்? இதன் வன்மையினை அளவிடுதற்கு இப்போது சமயம் வாய்த்துளதே! இதைக் கைநெகிழவிட்டால் இதைப்போல மற்றொரு சமயம் வாய்ப்பது அரிதாமன்றோ, சுவாமி?—நான் சீர்திருத்தி அமைத்துள்ள இவ்வரண் நான் எதிர்பார்க்கிறபடி வன்மையாய் நின்றாலும் நிற்கட்டும்; பகைவர் தாக்க வலியற்று இடிந்து வீழ்ந்தாலும் விழட்டும். அதில் நின்று முற்றுகைவிலக்க முயல்வதே என் ஆண்மைக்கழகு. நான் பெரும்பிரயாசையோடு பலமாகச் சமைத்த கப்பலைச் சூறுவளியில் நடுக்கடலில் நானே செலுத்திச் செல்லாவிட்டால்,

அதற்குத்தான் என்ன பெருமை, எனக்குத்தான் என்ன பெருமை ?

சுந் :—கப்பல் பழுதற்றதாயும், கடல் பர்றைகளற்றதாயும், காற்று மிதமானதாயும் இருப்பின், அதைச் செலுத்திச் செல்வ-தில் தவறொன்றுமில்லை. ஆனல். உமது கடல் சண்டமாருதத்தில் கொந்தளித்துக்கொண்டிருக்கிறதே! நீர் மட்டத்தின்கீழ் அதில் எத்தனை கற்பாரைகள் மறைந்து கிடக்கின்றனவோ! வைரக் கப்பலேயாயினும், இக்கடலில் சுக்கல் சுக்கலாய்ப் போய்விடுமே! இந்நிலையிலா ஒரு மீகாமன் தன் கப்பலின் வன்மையைப்பற்றியும் அதை யோட்டுவதில் தனக்குள்ள திறமையைப்பற்றியும் பெருமை பாராட்டிக்கொண்டு அவற்றை நிரூபிக்க முயல்வான் ? அதை உடனே அருகிலுள்ள துறைமுகத்துக்கு ஓட்டி அதி-லுள்ள உயிர்களைக் காப்பாற்ற முயல்வதன்றோ அவன் சிறந்த மீகாமனயிருப்பதற்கு அழகு ?

ஜீவ :—எனது கப்பலை நான் இப்போது எந்தத் துறை-முகத்துக்கு ஓட்டிச் செல்வேன், சுவாமி ?

சுந் :—நான் அதற்கொரு துறைமுகம் கண்டுவைத்திருக்-கிறேன், அரசே. இந்தக் கோட்டையின் அமைப்பனைத்தும் எனக்கு நெடுங்காலத்துக்கு முன்னமே நன்றாய்த் தெரியும். தங்கள் பாட்டனர் அறிவுடை நம்பியார் அவர் தகப்பனர் காலத்தில் சில ஆண்டுகள் இத்திருநெல்வேலிக் கோட்டைக்கு அதிபராயிருந்தபோது, இதன் அந்தப்புரத்துக்கும் நான் இப்போது தங்கியுள்ள மடாலயத்து நந்தவனத்திலுள்ள மண்ட-பத்துக்கும் இடையே ஓரிரகசியமான சுரங்க வழியினைச் சமைத்து, அதன் வழியே சென்று, அக்காலத்தில் மடாதிபதி-களாயிருந்த தயானந்த சுவாமிகளை அடிக்கடி அடுத்து அவர்களிடம் பல அரிய உண்மைகளைக் கேட்டு வந்தார். பிறகு அச்சுரங்க வழி நெடுநாள் உபயோகத்திலில்லையாதலால், இரு முனைகளிலும் தூர்ந்திருந்தது. உங்களுக்கு இவ்வாணை உறுதி-

யெனும் மயக்கந்தோன்றிய நாள் முதலாக, அதனைப் புதுப்பித்து வைத்தால் அஃது ஆபத்துக் காலத்தில் உதவலாமென நினைத்து, நம் நாராயணர், நடராஜர், என் சீடர் முதலியோரது அந்தரங்க உதவியினைக் கொண்டு அதனை இரு முனைகளிலும் திறந்து வைத்துள்ளேன். அதற்காகவே நான் அன்று உங்களிடமிருந்து அவ்வறையின் சாவியைப் பெற்றேன். அவ்வழியாகவே நான் இப்போது இக்கோட்டைக்குள் வந்தேன். அத்துறைமுகம் உங்களுக்கும் உங்களைச் சேர்ந்தோருக்கும் இப்போது வசதி-யாகவுள்ளது. உங்கள் கப்பலை அங்குச் செலுத்தி வாருங்கள்.

ஜீவ :—குரு தயாபரரே, எனக்காகத் தாங்கள் எவ்வளவு பரிவுடன் வருந்தி உழைத்திருக்குதீர்கள் !

சுந் :—அதைப்பற்றிய கவலை இப்பொழுது உங்களுக்கு வேண்டா; இனி ஆக வேண்டுவதைக் கவனியுங்கள். நடராஜரை மதுரைக்கு அனுப்பியது நீங்கள் எதிர் பாராதவாறு உங்களுக்கு நன்மை புரிந்துள்ளது. அவர் யாத்திரிகர் வேடத்துடன் தேர்ந்தெடுத்த ஆயிரத்தைந்நூறு வீரர்களை உங்கள் உதவிக்கு அழைத்துக்கொண்டு வந்துள்ளார். அவர்களிற் சிலரே நடராஜ-ரோடு இன்று அமர்க்களத்தில் உங்களைப் பகைவர் கையினின்றும் மீட்டுக் காத்தனர்.

ஜீவ :—நடராஜருக்கு நான் ஒரு செய்தியும் அனுப்பவில்-லையே ! எவ்வாறு அவர் இங்குப் போர் நடக்கப் போகிற-தென்பதை உணர்ந்து வந்தார் ?

சுந் :—நீங்கள் எப்போது என் பேச்சைக் காற்றில் விட்டுச் சேரனிடம் அந்தரங்கமாக நடராஜரை அனுப்புவதற்குப் பதிலாகப் பலதேவனைப் பகிரங்க தூதனாக அனுப்பினீர்களோ, அப்போதே உங்களுக்குச் சீக்கிரமே ஏதோ விபத்து நேரப்-போகிறதென்று அனுமானித்து, நான் நடராஜருக்கு எச்சரிக்கை

சொல்லி அனுப்பினேன். அதன்படியே அவர் சரியான காலத்தில் சரியான சேனுபலத்துடன் வந்து சேர்ந்தார்.

ஜீவ :—ஆ! ஆ! தங்கள் கருணை இருந்தவாறென்னே! சேயினைக் காக்கும் தாயினைப் போன்றன்றோ தாங்கள் எனது நலனைத் தேடி வந்திருக்கிறீர்கள்!

சுந் :—முகமன் சொல்வது ஒருபுறமிருக்கட்டும்; இனி ஆவதைக் கவனியுங்கள். அரசே. இச்சுரங்க வழியே நீங்கள் சுற்றத்தோடு இன்றிரவு தப்பிவிடுவீர்களானால், நடராஜரும் அவரது ஆயிரத்தைந்நூறு வீரர்களும் துணை நிற்க, நீங்கள் யாதொரு விபத்துமின்றி மதுரைக்குப் போய்விடலாம். சேரன் அங்கு வந்து உங்களை வெல்லுதல் இயலாத காரியம்.

ஜீவ :—[சிறிது நேரம் யோசனையிலாழ்ந்திருந்து] சுவாமி, தங்கள் ஒப்பிலா அன்பையும், முன்னெச்சரிக்கைகளையும், எனக்-காகத் தாங்கள் வருந்தித் தேடியுள்ள பாதுகாப்புக்களையும் நினைக்க நினைக்க என்னுள்ளத்தில் நன்றி நீர் ஊற்றெடுத்து விழிகளை அலைக்கின்றது. ஆயினும். சுவாமி—சுவாமி—தாங்கள் கூறுகிறபடி நடக்கிலேனாயின், நான் நாயினுங் கடையேனாக நன்றி கொன்றேன் என்று நினைப்பீர்களோ? ஐயோ! தங்கள் அருங்கரங்களாலே அணைக்கப்பட்டுள்ள நான் அவற்றை அகற்றி அப்பாற்செல்ல முயன்றிடில், குருவின் அன்பைப் புறக்கணித்த கொடும்பாதகனாவேனே! என் செய்வேன், ஈசா!

சுந் :—என்ன, அரசே, மயங்குகிறீர்கள்? இதுவோ மயங்குந் தருணம்?

ஜீவ :—சுவாமி, என்னை மன்னிக்க வேண்டும். சேரனுக்குப் பயந்து இரகசியமாக ஓடினேன் என்னும் பழிப்புரையைத் தாங்குவதைவிட இந்த க்ஷணமே உயிர் விடுதல் மேல்! போக வேண்டிய உயிரைப் புகழுடன் போக்கிக்கொள்வதற்கு நாளைப் போரே தக்க சமயமன்றோ? என் வீரத்துக்கு மாசுண்டாகும்

வழியில் தாங்கள் என்னை நடக்கச் சொல்லுதல் நியாயமோ, சுவாமி?

சுந் :—ஒருவனை வலிந்து சண்டைக்கிழுப்பதும், அவ்வாறு வலிந்து தேடிக்கொண்ட போரில் நிரபராதிகளான குடிகளின் உயிர்களை மாய்ப்பதும் உங்களுக்குச் சூரத்துவமாகத் தோன்று-கின்றன போலும்!

ஜீவ :—போர் வந்த வழியை ஆராய்வதில் இனி என்ன இலாபம், சுவாமி? வந்த பின் முதுகு காட்டாது ஆண்மையோடு பொருதலல்லவோ வீரம்! மேலும், இன்று எனது வாளுக்கு ஏற்பட்டுள்ள சிறுமியை மீண்டும் ஒரு முறை பொருதேனும் நான் துடைத்துக்கொள்ளாவிட்டால், என்னை உலகம் மதிக்குமா? எனது அந்தப்புரத்துச் சேடியர்தாம் மதிப்பரோ, சுவாமி?

சுந் :—சிவசிவ! சங்கர! சம்போ! அரசே, முதலையேனும் பிடித்த பிடியை விடும்; நீங்கள் விடுவது ஏது! உங்கள் மயக்கத்தில் பாண்டித் தொல்குலம் உலகில் என்றும் நிலைத்திருக்க வேண்டுமே என்னும் எண்ணமும் உங்களுக்குத் தோன்று-திருப்பது எனக்கு மிகவும் அதிசயமாயிருக்கிறது! உங்கள் அருங்குலத்துக்கு இப்போது குழந்தை மனோன்மணி ஒருத்தியே வித்தாயிருக்கிறாள். அவளையேனும் இந்நிலையில் இப்பாழுங்-கோட்டையினின்றும் அப்புறப்படுத்திப் பாதுகாக்க வேண்டுவது உங்களுக்கு அவசியமாகத் தோன்றவில்லையே! உங்களுக்கு அஃது இயலாதாயின், என்னையேனும் அவளைப் பாதுகாக்க அனுமதியுங்கள். அது நான் உங்கள் குலத்துக்கு மட்டுமன்றி நமது பழந்தமிழ் நாட்டுக்கே இயற்ற வேண்டிய கடமையாகும்.

ஜீவ :—சுவாமி, எனக்கும் நம் தமிழ் நாட்டுக்கும் தாங்கள் இயற்றக்கூடிய பேருதவிகளில் இதைவிடச்சிறந்தது யாதுள்து? முழு மனத்துடன் அவளைத் தங்களிடம் ஒப்பிக்கிறேன். இனி யாவுந் தங்கள் பாரம். தாங்களே அவளுக்குத் தாயுந் தந்தையும்,

தமரும் சுற்றமும், என் கவலையெல்லாம் அவளைப் பொருத்தனவே; அவளுக்காகவே நான் உயிர் தாங்கியிருக்க வேண்டியிருக்கிறது. அவள் பத்திரமாயிருக்கிறாள் என்னும் உறுதி ஏற்பட்டுவிட்டால், நாளைச் சமரில் நான் எதற்கும் அஞ்சாது பொருவேன்; வெற்றி-கொண்டு மீண்டால், அவளை அழைத்துக்கொள்ளுவேன்; இல்லையேல், தாங்கள் அவள் சீரை நாடி இப்பாண்டி வமிசம் அழியாத வகையில் செய்வன செய்து காப்பாற்றுங்கள். இதுவரை 'சந்திர குலம்' எனத் துலங்கிய எங்கள் தொல்குலம் இனிச் 'சுந்தரர் குலம்' எனச் சந்ததமும் விளங்க நேர்ந்தது எங்கள் பாக்கியமே!

சுந் :—[எழுகிறார்] நல்லது, அரசே, இன்றிரவு நடுச்சாமத்தில் நடராஜருடனும் சில உண்மை வீரர்களுடனும் மனோன்மணியை அழைத்துச் செல்ல நான் இங்கு வருவேன். இறைவர் உங்களைக் காப்பாராக!

ஜீவ :—வணங்கினேன், சுவாமி; என் மனத்தை அழுத்தி-யிருந்த ஒரு பெரும்பாரத்தைத் தாங்கள் அப்புறப்படுத்தி-விட்டீர்கள்! இதற்கென்ன கைம்மாறு நான் செய்யப்போகிறேன்! —தங்கள் ஆசீர்வாதம் இருக்கட்டும். [வணங்கி நிற்கிறான்.]

சுந் :—[ஆசீர்வதிக்கிறார்.] நல்லது; நடு நிசியில் வருவேன், மனோன்மணியை அழைத்துச் செல்ல, தக்க பெண்துணையோடு ஆயத்தமாய் இருக்கச் சொல்லுங்கள்.

ஜீவ :—அப்படியே, சுவாமி. [சுந்தர முனிவர் போகிறார்.] ஆ! ஆ! ஈசா இன்று என்மீது எவ்வளவு கருணை காட்டியுள்ளார்! குடிலருக்கு இவ்வெதிர்பாராத சந்தோஷச் செய்தியைச் சொல்ல வேண்டும்; அவரும் நம்முடன் மகிழ்வார்.—அவர் ஏன் இன்னும் வரவில்லை?—சரி, இதற்கிடையே மனோன்மணியைக் கண்டு வருவோம். [போகிறான்.]

பயிற்சி:

I. விடை எழுதுக:—

1. இக்களத்தின் சந்தர்ப்பத்தை விளக்குக.

2. சுந்தர முனிவர் ஜீவகனுக்குச் செய்த நன்மைகள் யாவை?

3. ஜீவகன் ஏன் அரண்மனையை விட்டு வெளியேற மறுத்தான்?

II. 1. சுந்தர முனிவர் ஜீவகனுக்குச் சொன்ன விஷயங்களை உங்கள் சொந்த வார்த்தைகளால் எழுதுக.

2. சுந்தர முனிவர் கடலையும் கப்பலையும் உவமித்துக் கூறிய விஷயங்களை விளக்குக.

3. 7-ஆம் பத்தியில் உள்ள மூன்றும் வாக்கியத்தைச் சிறு வாக்கியங்களாக மாற்றுக

# 11. இமய மலை

[வித்துவான் ம. மாசிலாமணி அவர்கள்]

1. இந்நில உலகின்கண்ணுள்ள மலைகள் பலவற்றினும் உயர்ந்து நிற்கும் உயர் வரை, பொற்கோட்டு இமயமேயாகும். இமயமலை என்றுலே உள்ளத்தில் இன்பம் ஊறுகின்றது; உணர்ச்சி உண்டாகின்றது; கவி துளும்புகின்றது. ஏன்? நமக்கு அது பெருமையையும் உயர்வையும் அளிக்கின்றதன்றோ!

2. இமய மலையை இயற்கையன்னையின் இருக்கையென்றே கூறலாம். கண்ணுக்கெட்டியவரை ஒரே பனிப்படலம்! உருக்கி வார்த்த வெள்ளியையொத்த தெள்ளிய காட்சி! இதன் ஏற்றத்தைப்பற்றிப் பண்டைப் புலவர் பலரும் பலவாறு புகழ்ந்து கூறியுள்ளனர். இதைப்பற்றிச் சிறந்த தமிழ்ப் புலவரான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம் பாடிய பிரபுலிங்க லீலை என்னும் நூலில்,

"கண்பிசைத் தொருசே யின்னும் கனுழினுத் தனைக்கொ
[டுப்பன்
மண்பிசைத் துண்ட மாயன் மறுத்திட வலிய னல்லன் ;
நண்பிசைந் திறைவ னுக்கே காமிட னுவ மென்று
பண்பிசைந் தலைதி ரண்ட பரிசினின் றிடுமக் குன்றம்."

எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இமம் என்பதற்குப் பனி என்பது பொருள். இம்மலை பனியால் மூடப்பட்டிருப்பதாலேயே, பனிமலை எனப் பொருள் தரும் இமயமலை என்ற பெயர் இதற்கு ஏற்பட்டது. இதனை வெள்ளி மால் வரை, பொன்னின் மால் வரை, வடவரை, மேரு என வழங்குவதும் உண்டு. செம்மையையே, அதாவது சீரிய ஒழுக்கத்தையே தங்கள் மதமாகக் கொண்ட சைவப் பெருமக்களின் முழுமுதலிறைவனும் சிவபிரானது உறையுளாகக் கூறப்படுவதுமிதுவே.

4. இத்தகைய இப்பனிமலை நமது இந்திய நாட்டின் வடவெல்லையாய் அமைந்துள்ளது ; பண்டு தொட்டு எதிரிகள் நம் நாட்டுட் புகாதபடி இயற்கையரணாய் நின்று நம்மைப் பாதுகாத்து வருகின்றது. இமய மலை, மேல் கோடியிலிருந்து கீழ்க்கோடி வரை சுமார் 1,500 மைல்களுக்குக் குறையாத நீளமுள்ளது எந்த இடத்திலும், 20,000 அடிகளுக்குக் குறையாத தொடர்ச்சியான சிகரங்களை உடையதாயிருக்கின்றது. இயற்கையமைப்பைக்கொண்டு இமயமலையை முக்கூறாகப் பிரிக்கலாம். அடிவாரத்திலிருந்து ஐயாயிரம் அடி உயரம் வரையிலுள்ளது முதற்கூறு. அதற்குமேல் ஒன்பதினாயிரம் அடி உயரம் வரையுள்ளது இரண்டாங்கூறு. அதற்கு மேற்பட்ட இடமனைத்தும் மூன்றாங்கூறாகும்.

5. முதற்கூற்றில் பரிதியின் சுடர் நன்கு படுவதனால், அங்குச் செடி கொடிகள் மிகச் செழிப்பாய் வளருகின்றன. மா பலா முதலிய பெருமரங்கள் அங்கு வளர்வதில்லை என்றாலும், அப்பகுதியிலும் அடிவாரத்திலும் செல்லும் கோது-

மையும் விளைகின்றன. மேல் நாட்டுக் காய் கறிகள் அங்கு நன்றாய் வளரும். இரண்டாங் கூற்றில் மாரி காலத்தில் பெய்த பனியும் மழையும் உறைந்து பனிப் பாறைகளாய்த் தோய்ந்து விடும். வெயிற்காலம் வந்தவுடன் அவை உருகத் தொடங்கும். அங்கு மர வகைகள் நன்றாக வளரும். இருப்பினும், அம்மரங்கள் என்றும் ஒரே நிலையாயிரா; மாரி காலத்தில் சிதைந்து அடி இழந்து காணப்படும்; கோடையிலோ வெனில், வானுற ஓங்கி வளர்ந்து கவின் பெறு காட்சியை நல்கும். மூன்றாங் கூற்றில் என்றும் பனி உறைந்தே கிடக்கும். முதுவேனிற்காலமாகிய ஆனி ஆடி மாதங்களில் அங்குள்ள பனி சிறிது உருகி ஓடும்,

6. இமயமலையில் பலவேறு வகைப்பட்ட விலங்குகளும், பறவைகளும் காணப்படுகின்றன. புலி, கரடி, யானை முதலிய கொடிய விலங்குகள் இமய மலையின் அடிவாரங்களில் வாழ்கின்றன. உயர்ந்த பிரதேசங்களில் மான்கள் மந்தை மந்தையாகக் காணப்படும். அங்குக் கஸ்தூரி மான் என்ற ஒரு வகை மானும் உண்டு. அம்மான், மிக உயர்ந்த கொடுமுடிகளிலேயே வாழும். மலைமாடுகளும் அங்கு உண்டு. அங்குள்ள ஒரு வகைப் பறவை, வேடர்களால் பிடிக்க முடியாததாய் இருக்கிறது. அப்பறவை, வேடர்களுக்கு அகப்படுவதுபோலப் பாசாங்கு காட்டி, அவர்களை மலையில் வெகுதூரம் அலைய வைக்கும். மலையுச்சியில் கழுகுகள் கூடுகட்டி வாழ்கின்றன. அடிவாரத்தில் மயில்கள் வசிக்கின்றன.

7. இமயமலையிலிருந்து கங்கை, சிந்து, பிரமபுத்திரா என்ற பேராறுகள் தோன்றி வடநாட்டை வளப்படுத்துகின்றன. இவ்வாறுகளில் எக்காலத்திலும் நீர் வற்றாது ஓடும். மாரி காலத்தில் மழை நீர் ஓடுகின்றது. கோடை காலத்திலோ, இமயமலை முகட்டிலுள்ள பனிக் கட்டிகள் உருகி நீராய் ஓடும், இதனால் இந்த ஆறுகளை 'உயிர் ஆறுகள்' என்று மக்கள் கூறுகின்றார்கள்.

8. இமயமலையின் உயர்ந்த சிகரத்திற்கு எவரேஷ்டு என்பது பெயர். தவளகிரி, காஞ்சன சிருங்கம் என்ற இரண்டு சிகரங்களும் இதைப்போலவே உயர்ந்த சிகரங்களாம். இவ்விமயமலையின் உச்சியில், கடலில் வாழக்கூடிய மீன் முதலிய உயிர் வகைகளின் எலும்புக் கூடுகள் ஆங்காங்குக் காணப்படுவதாகவும், அவை மிகவும் பழமையானவைகளாகக் காணப்படுவதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இவற்றால், மிகப் பழைய காலத்தில் இன்று இமயமலை இருக்கும் இடமெல்லாம் கடற்பிரதேசமாயிருந்தது என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். இஃது உங்களுக்கு வியப்பாகத்தோன்றலாம்! இருப்பினும், காடு நாடாவதும், நாடு காடாவதும், கடல் நிலமாவதும், நிலம் கடலாவதும் இயற்கை தானே!

9. இமயமலையின் அடிவாரத்தில் பல அழகிய நாடுகளும், நகரங்களும் காணப்படுகின்றன. அடிவாரத்திலிருப்பது நேப்பாளம். அங்குள்ள சிற்றூர்களில் பயிர்கள் நன்றாய் வளருகின்றன. அதற்குமேல் ஸ்ரீநகர் என்னும் சிறந்த நகரைத் தலைநகராகக்கொண்ட காஷ்மீர நாடு இருக்கின்றது. போர்வைக்குப் பெயர்போனதுகாஷ்மீரம். ஏன்? நாம் 'காஷ்மீரச் சால்வை'யைப் போற்றவில்லையா? அங்கு மயிரடர்ந்த ஆடுகள் மிகுதியாய் வசிக்கின்றன. அவ்வாடுகளின் உரோமத்தைக்கொண்டு சால்வைகள் செய்து அனுப்புகிறார்கள்.

10. இறுதியாக இமயமலையால் நாம் அறியவேண்டுவன யாவை? அதன் உயர்ச்சியைப்போல நம் வாழ்க்கை உயரப்பாடுபடவேண்டும்.; உயர்ந்த எண்ணங்களைக் கொள்ள வேண்டும்; அதன் குளிர்ந்த தன்மையைப்போல எவரிடத்தும் அன்பாக நடந்து கொள்ளல் வேண்டும். அதன் தூய்மையைப்போல நம் மனமும் தூய்மை அடைதல் வேண்டும். இமயமலையைப்போல நிலை கலங்காது நின்று, எதிலும் அறிவு நிறம்பாது, ஆண்மையுடன் நாம் வாழ்வோமாக!

## பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. இமயமலையைப்பற்றிச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுவது யாது?

2. இமயமலையின் இயற்கையமைப்பின் மூக்கூறுகளையும் தனித்தனி எழுதுக.

3. இமய மலையில் வாழும் விலங்குகளைப் பற்றியும் பறவைகளைப்பற்றியும் நான்கு வாக்கியங்கள் எழுதுக.

4. இமய மலையின் உன்னத சிகரங்கள் எவை?

5. இமய மலைப் பிரதேசம் ஒரு காலத்தில் கடலாய் இருந்த தென்பதை எவ்வாறு நிரூபிக்க முடியும்?

6. இமய மலையின் அடிவாரத்தில் உள்ள நாடுகள் எவை? ஒவ்வொன்றைப்பற்றியும் இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

II. 1. வாக்கியங்களில் அமைத்தெழுதுக :—

இன்பம் ஊறுகின்றது, களி துளும்புகின்றது, இயற்கையன்னை, இயற்கையரண், வானுற ஓங்கு, கவின் பெறு காட்சி.

2. இப்பாடத்தின் முதற்பத்தியில் உள்ள வாக்கியங்களில் கடைசி வாக்கியம் தவிர மற்றவைகளை ஒரே வாக்கியமாக அமைத்து எழுதுக.

3. இரண்டாம் பத்தியில் உள்ள விஷயத்தை உங்கள் சொந்தச் சொற்களால் எழுதுக.

## இலக்கணம் :

### வினைச்சொல்

வினைச்சொல் தெரிநிலை வினை, குறிப்பு வினை என்று இரு வகைப்படும்.

தெரிநிலை வினை காலத்தை வெளிப்படையாகக் காட்டும். இது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறையும் உணர்த்தும்.

உதாரணம் :—தச்சன் நாற்காலி செய்கிறான்.

| | | |
|---|---|---|
| செய்கிறான் | — | தெரிநிலை வினை முற்று. |
| மரம் | — | முதற்கருவி |
| தச்சன் | — | செய்பவன் |
| உளி முதலியன | — | துணைக்கருவிகள் |
| செய்யும் இடம் | — | நிலம் |
| செய்தல் (தொழில்) | — | செயல் |
| நிகழ்காலம் | — | காலம் |
| நாற்காலி | — | செய்பொருள் |

குறிப்பு வினை :—காலம் காட்டும் உறுப்பைப் பெறாமல் சொல்லுவோனது குறிப்பினால் காலம் தெரிவிப்பது குறிப்புவினை.

உதாரணம் :—

| | | | |
|---|---|---|---|
| அவன் பொன்னன். | —பொருள் | — | குறிப்புவினை |
| அவன் கோசல நாட்டான் | —இடம் | — | ,, |
| இராமன் நவமியான். | —காலம் | — | ,, |
| அருச்சுனன் நெடுந்தோளன். | —சினை | — | ,, |
| சிவன் சிவப்பன். | —குணம் | — | ,, |
| தருமன் கடுநடையன். | —தொழில் | — | ,, |

பயிற்சி :

முன் பாடத்திலிருந்து தெரிநிலை வினை குறிப்பு வினைகளுள் ஒவ்வொன்றுக்கும் மூன்று உதாரணங்கள் தருக.

———

# 12. சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

1. பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர மன்னன், வஞ்சி நகரத்தைத் தலைநகராகக் கொண்டு, சேர நாட்டை ஆண்டு வந்தான். இவன் மிகுந்த ஆண்மையும் புகழும் நிறைந்து விளங்கினன்; தமிழினிடத்தும் புலவர்களிடத்தும் ஆரா அன்புடையவன். இவனுடைய அவைக்களத்தில் சிறந்த புலவர்களாகிய மோசி கீரனர், அரிசில் கிழார் முதலிய பல புலவர்களிருந்து அவையை அலங்கரித்து வந்தார்கள்.

2. இவன் காலத்தில் அதிகமான் என்ற ஓர் அரசன், தகடூர் என்ற நகரை ஆண்டு வந்தான். அவன் சிறந்த போர் வீரன்; தன்னிடத்து வந்த புலவர்கட்கு எதையும் இல்லை என்னது கொடுக்கக் கூடியவன். இந்நிலையில் இரும்பொறைக்கும், அதிகமானுக்கும் இடையே மாறுபாடு எழுந்தது. இருவர் படைகளும் வீறிட்டெழுந்தன. தகடூரில் இரண்டும் சந்தித்துப் பொருதன. அதிகமான் சிறந்த வீரனாய் இருந்தாலும், இரும்பொறையின் பெரும்படைக்கு முன்னே, அதிகமானுடைய சிறிய படையானது எதிர்த்து நிற்க இயலாது புறமுதுகிட்டு ஓடிற்று. இரும்பொறை வெற்றிபெற்றான்; வாகை மாலை சூடினன். இவ்வாறு தகடூரை எறிந்து அதிகமானை வென்றமையால், இவனுக்குத் 'தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை' என்ற பெயர் வழங்கலாயிற்று.

3. இரும்பொறை தகடூரை வென்று கைக்கொண்டதுடன் நின்றானில்லை; மேலும் பல நாடுகளையும் வென்று தன் கீழ்ப்படுத்த எண்ணினன். பிற நாடுகளைப் பிடிக்க வேண்டுமென்ற ஆசையால், இவன் தன்னுடைய நாட்டின் நன்மையை

அதிகமாகக் கருத முடியவில்லை. இதனால் குடிகளுக்குப் பல இன்னல்கள் விளைந்தன. இவைகளை உணர்ந்த மோசி கீரனார், இரும்பொறையனிடம் சென்று, "அரசே இவ்வுலகத்தவருக்கு உயிர் நெல்லுமன்று; நீருமன்று; மன்னனேயாவான். ஆகவே, தானே உலகமக்களின் உயிர் என்பதனை ஒவ்வொரு மன்னவனும் உணர வேண்டும்; உணர்ந்து நீதி வழுவாது முறை செலுத்த வேண்டும். இதை விட்டு நாட்டாசை கொண்டு திரிவது தக்கதன்று. அதனால் பல உயிர்கள் சேதமடைகின்றன. எனவே, இவ்வெண்ணத்தை விடுக," என்று கூறினார்.

4. இரும்பொறை, புலவரின் பொன் மொழிகளைக் கேட்டான். மன மாற்றமடைந்தான்; போர் செய்யும் எண்ணத்தைக் கைவிட்டு நாட்டு மக்கள் நன்மைக்கானவற்றைச் செய்தான்; சீரிய முறையில் குடிகளை ஓம்பினான்.

5. இங்ஙனமிருக்க, ஒரு நாள் அரண்மனையிலிருந்த வீர முரசத்தை நீராட்டுவதற்காக வெளியே எடுத்துச் சென்றார்கள். பின்னர் முரசு வைக்கப்பட்டிருந்த அந்த முரசு கட்டிலைத் தூய்மை செய்து, எண்ணெய் நுரை முகந்தாற்போன்ற பூக்களைப் பரப்பி, மீண்டும் அம்முரசைக் கொண்டுவந்து வைப்பதற்காக அலங்கரித்து வைத்திருந்தார்கள். அந்தச் சமயத்தில் புலவர் மோசி கீரனார், எங்கோ வெயிலில் சென்று களைத்து வந்தார்; முரசு கட்டிலின் அருகே வந்து நின்றார். அஃது அழகாகப் படுக்கைபோல ஒப்பனை செய்திருப்பதை நோக்கவே அயர்வு மிகுதியால் அதன்மீதேறிப் படுத்தார். படுத்தவர் உறங்கிவிட்டார். இவ்வாறு முரசு வைக்கப்படும் அம்முரசு கட்டில் அக்காலத்து மிகப் புனிதமாக எண்ணப்பட்டு வந்தது. அதில் யாராவது ஒருவன் தவறி ஏறிவிட்டால், அவனுடைய சிரம் சேதிக்கப்படும். ஆனாலும், புலவர் களைப்பு மிகுதியால் இவற்றுள் ஒன்றையும் எண்ணாது அம்முரசு கட்டிலிலேறி உறங்கினார்.

6. அச்சமயத்தில் இரும்பொறை அப்பக்கம் வந்தான். முரசு கட்டிலில் யாரோ ஆள் இருப்பதையறிந்து, சினத்துடன் அருகில் வந்தான்; அங்கு மோசி கீரனர் உறங்குவதைக் கண்டான். அவன் சினம் தணிந்தது. மன இரக்கம் கொண்டான். 'பாவம்! புலவர் களைப்பால் உறங்குகிறார்! உறங்கட்டும்,' என்று கூறிக் கவரி எடுத்துவந்து அவர் கண் விழிக்குமளவும் விசிறிக்கொண்டிருந்தான். சிறிது நேரம் சென்றது. புலவர் விழித்தவுடன் அரசனைக் கண்டு பயந்து எழுந்தார். ஆனாலும், இரும்பொறை, புலவரை நோக்கி, 'அஞ்ச வேண்டா,' என்று கூறித் தேற்றினன்.

7. அதைக் கேட்ட மோசி கீரனர், "அரசே, அறியாது ஏறிய என்னை வாள்கொண்டு வெட்டவேண்டியிருக்க, அதனைச் செய்யாது, நினது சிறந்த கைகளால் எனக்குக் கவரி வேறு வீசினையே! அதுவே போதும், நினது தமிழ்ப் பற்றிற்குச் சான்று," என்று கூறி மகிழ்ந்தார்.

பயிற்சி:

I. விடை எழுதுக:—

1. தகடூரை ஆண்டு வந்த மன்னன் யார்? அவனுடன் போர் எழுந்தவன் யார்?

2. இரும்பொறைக்கு நற்புத்தி புகட்டியவர் யார்? அவர் கூறிய நற்புத்திகள் யாவை?

3. முரசு கட்டில் என்பது யாது? அதன் சம்பந்தமான நிகழ்ச்சி யாது?

II. 1. முதற்பத்தியில் உள்ள முதல் வாக்கியத்தைச் சேரநாடு என்ற எழுவாயைக்கொண்டு ஆரம்பித்து எழுதுக.

2. முதற்பத்தில் உள்ள நான்காம் வாக்கியத்தைச் செயப்பாட்டு வினையைக்கொண்டு முடிக்க.

3. மூன்றும் பத்தியில் உள்ள முதல் மூன்று வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக அமைத்து எழுதுக.

# 13. பொரிமாத் தோண்டி

உரைக்குமிக் கதையே தென்னில் ஓதுமோர் நகரந் தன்னில்
தரித்திர பிரம சாரி சார்ந்தொரு சிரார்த்தத் துண்டான் ;
அரைத்திடு பொரிமாத் தோண்டி அவற்கொரு மறையோன் [ஈந்தான்
திருத்தியிற் பருப்புஞ் சோறுந் தின்றதோர் மயக்கத்தாலே, 1

மற்றொரு நகர்க்குச் செல்லும் வழியிலோர் மணற் றடத்தில்
சற்றொரு கணப்போ தங்கே தரித்தவ னிருந்து நெஞ்சில்
உற்றகா ரியங்கள் கோடி யுன்னினன் : " இந்த மாவை
விற்றுநாம் ஆடுவாங்கி மேய்க்கிலோ ரிரண்டு குட்டி 2

" போடுமவ் விரண்டி லொன்று பொலிகடாத் தன்னை விற்று
நாடுபெண் ணாடி ரண்டு நயவிலை யாகக் கொள்வோம் ;
ஆடொரு நாலாம் ; அந்த ஆடுக விரண்டி ரண்டாய்ப்
போடுமக் குட்டி யோடே பொருந்திய பனிரண் டாமே. 3

" பன்னிரண் டாடும் விற்றுப் பசுக்களோ ரிரண்டு கொள்வோம்
தன்னிலே பட்டிமேய்ந்து தருக்கியே யிரண்டு மீனும் ;
மன்னுபால் நெய்யும் விற்று மற்றிரு பசுவுங் கொள்வோம் ;
அன்னவப் பசுக்க ளாறு மாறுசேங் கன்று நல்கும் 4

" மூவணை யேறுங் கூட்டி முன்னுள நிலங்க ளெல்லாம்
ஓவற வளங்க ளாக உழுதுநாம் பயிர்க விட்டே
மேவுதா னியங்க ளெல்லாம் விலைகளைக் குறைய விற்றுக்
காவல னறிக்கை யாலே கனக்கவோர் வீடு கட்டி, 5

" இருந்துநாம் பணமுங் காசு மேரொடு பொருளுந் தேடிப்
பொருந்திய பிராம ணர்க்குப் போசன மிடுவோம் ; இட்டால்
வருந்தியே நமக்குப் பெண்ணும் வலியவே தருவார் ; அந்தத்
திருந்திழை யாளும் நாமுஞ் செருக்கியங் கிருந்து வாழ்வம். 6

* * *

"அப்படி யிருக்கு நாளி லந்தியிற் பசுக்கள் கட்டக்
கொப்படர் கண்ணுள் செல்லக் குழந்தையு மழும்; நா மோடி
இப்படி யடிப்போம் அங்கே," என்றொரு தடியெடுத்துச்
செப்பிய பொரிமாத் தோண்டி சிதறிட அடித்திட்டானே. 7

கலங்கினன் பிரம சாரி காரகஸ் தங்க ளெல்லாம்
துலங்கிய பொரிமா வைத்த தோண்டியோ டழிந்த வன்றே;
மலங்கு கண்ணீர்கள் சோர வயிற்றினி லடித்துக் கொண்டே
நிலந்தனிற் புரண்டு வீழ்ந்து நெடுந்துய ரடைந்தா னன்றே. 8

பஞ்ச தந்திரம்] [வீரமார்த்தாண்டட் தேவர்

பயிற்சி:

1. இச்செய்யுட்களில் அமைந்துள்ள கதையை வசன நடையில் சுருக்கமாக எழுதுக.

2. இச்செய்யுளால் நீங்கள் அறியும் நீதி யாது?

3. 3-ஆம் அடி முதல் 7- ஆம் அடி வரையிலுள்ள வரிகளை வசன நடையில் அமைத்து எழுதுக.

---

# 14. மங்கையர்க்கரசியார்

[வித்துவான் டி. என். தாணுவம்மாள் அவர்கள்]

1. மங்கையர்க்கரசியார் சரித்திரத்தை நினைக்கும்போது என்னை அறியாமலே எனக்கு ஊக்கமுண்டாகிறது.

2. இச்சரித்திரம் இற்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்ததொன்றாகும். மிகு தொன்மைக் காலத்திலேயே இச்சரித்திரம் நிகழ்ந்த போதிலும், இது சைவர்களாகிய நமக்கெல்லாம் என்றும் அழியாத வழி காட்டியாய் உள்ளது. சமயப்பற்று இன்னவாறு மக்களை நன்னெறியிற் செலுத்துதற்கு உபகாரமாம் என்பதை இச்சரிதம் நன்கு விளக்குகிறது. தேசத்தை நல்வழியில் நிறுத்துதற்குச் சமயம் எவ்வாறு உதவினது என்பதையும் இச்சரித்திரம் அழகுறக் காட்டுகிறது.

மங்கையர்களுடைய நல் வாழ்வுக்கு ஓர் இலக்கியமாகவும் இச்சரிதம் இலங்குகிறது.

3. மங்கையர்க்கரசியாரின் புராணத்தைத் தொண்டர் சீர் பரவும் சேக்கிழார், ஒரு தனிப் புராணமாகவே செய்தருளியிருக்கின்றார். அதில் சரித்திர விஷயங்கள் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. ஆனால், திருஞான சம்பந்தர் புராணத்திலே இச்சரித்திரம் மிக விரிவாய் அமைந்துள்ளது.

4. மங்கையர்க்கரசியார் காலத்திலே பாண்டி நாட்டிலே சைவசமயம் நிலை குன்றி, அருக சமயம் வளர்ந்தோங்கியது. அம்மையாரின் நாயகராகிய பாண்டிய மன்னரும் தாம் முன் செய்த தீவினைப் பயத்தினாலே அருக சமயமே உண்மைச் சமயமென நினைத்து, அச்சமயத்தைத் தழுவி, அதன் நெறியே நிற்பாரானார். 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி,' அல்லவா? பாண்டி நாட்டு மாந்தர் பலரும் சைவ சமயத்தைக் கைவிட்டு அருக சமயத்தைக் கொள்ளலாயினர். சைவ வாய்மையும் வைதிக வழக்கமும் ஓர் இடத்தும் காணப்படாது மங்கி மறையலாயின. தமிழ் நாட்டிலேயுள்ள பதிகளிலெல்லாம் அருகருடைய பாழியும் பள்ளியும் நிரம்பின. அருக சமயத்தினர் மயிற்பீலியையும் பாயையும் தடுக்கையும் கையிலேந்தித் தலை மயிற் மழித்தவராய் முக்கோல் பிடித்தவராய் நாடெங்கணும் மொய்த்து வசித்து வந்தனர்.

5. ஆனால், நாட்டிலெங்கும் புகலிடங் காணாது இருவரிடத்து மாத்திரம் சைவ சமயம் புகல் புகுந்தது போலக் காணப்பட்டது. அவ்விருவர் யாவரெனில், அரசருடைய மனைக்கிழத்தியாரான பாண்டிமாதேவியாரும், அமைச்சரான குலச்சிறையாருமவர். இவர்கள் தங்களுடைய தமிழ் நாடு முழுவதையும் சமண சமயம் விழுங்கிவிட்ட தீங்கினை நினைந்து மிகவும் துன்புற்றார்கள்; தாங்கள் சைவ நெறியில் ஈடுபாடுடையவர்களாய் அச்சமயத்திலேயே இருப்பதை அரசர் உணர்ந்து

கொள்ளாவண்ணம் ஒழுகி வந்தார்கள். இவ்வாறு ஒழுகி வரும்பொழுது சைவச் செந்நெறியை நிலை நிறுத்தி வருகின்ற புகலி வேந்தர் திருமறைக்காடு வந்துள்ளாரென்பதைத் தங்களுடைய நல்வினைப்பயனால் இருவரும் கேள்விப்பட்டனர். அப்பொழுது அவர்களுடைய சிந்தையிலே மகிழ்ச்சி பொங்கி எழுந்தது; அவர்களுடைய முகங்கள் அப்பொழுதலர்ந்த செந்தாமரை போலப் பொலிவுற்று விளங்கின. தாங்கள் புகலி வேந்தருடைய திருவடிகளை நேரிலே தரிசித்துப் பணியும் பேறு பெறவேண்டுமென்னும் குறிப்பைத் தெரிவிக்கும்படி பரிசனங்களைத் திருமறைக் காட்டில் எழுந்தருளியிருக்கும் திருஞான சம்பந்தர் பக்கல் விடுத்தார்கள். அவர்கள் தமிழ் நாடு வடவெல்லை பிற்படக் கடந்து சென்று, திருமறைக்காடு சேர்ந்தார்கள்; சேர்ந்து, அங்கே பிள்ளையார் அமர்ந்திருக்கும் திருமடத்திற்குச் சென்று, தாங்கள் வந்துள்ள செய்தியை வாயில் காவலாளருக்குச் சொன்னார்கள். அவர்களும் பரிசனங்கள் வந்தமையை விண்ணப்பஞ் செய்தார்கள். அதனைக் கேட்ட சம்பந்தர் 'அழையும்,' என அருள் செய்தார். பின்னர், பரிசனங்கள் பிள்ளையாரது திருமுன்பிலே சென்று வணங்கி நின்றார்கள். பிள்ளையார் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் முதலியவர்களது உடல் நலத்தை வினவலும், பரிசனங்கள் உடல் நலம் கூறி அவரை வணங்கி, "பாண்டி நாடு சமணர்களது மாயத்திலே அழுந்திவிட்டது. இந்நிலையை இங்கே தெரிவிக்கும்படி எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்கள்," என்று கூறினார்கள். அப்பொழுது அங்கிருந்த தொண்டர்கள், "சமணர்களை வென்றருளிப் பாண்டிநாட்டில் வைதிக சமயத்தை நிலை நிறுத்திப் பாண்டிய அரசனையும் சைவ நெறியிலே ஒழுகும்படி செய்யும் செயலைத் தேவரீர் திருவுள்ளம் பற்றவேண்டும்," என்று போற்றிக் கூறினார்கள். பிள்ளையாரும் அதற்கு இணங்கினர்; பின்னர் வாகீச முனிவருடன் கோவிலுக்குச் சென்று, இறைவரைப் பணிந்து, அங்கே கோபுரவாயிலிருந்து பாண்டிமாதேவியாரும் அமைச்-

சரும் சொல்லியனுப்பிய செய்தியை வாகீச முனிவருக்குச் சொல்லித் தாம் பாண்டி நாடு செல்ல எண்ணி இருப்பதையும் தெரிவித்தார். அப்பொழுது நாவுக்கரசர், "சமணர்களுடைய வஞ்சனைக்கு அளவேயில்லை. தாங்கள் புறப்படும் போதுள்ள கோளும் தீது. ஆதலால், அங்கே எழுந்தருள உடன்படுவது தகாது," என்று கூறினர். அப்பொழுது திருஞான சம்பந்தர், "பரசுவது நம்பெருமான் கழல் என்றால், பழுதணையாது," எனப் பகர்ந்து, கோளறு திருப்பதிகத்தையும் பாடி அருளினர். இதன் பின்னர் நாவுக்கரசரும் சம்பந்தர் செல்வதற்கு மனம் ஒப்பித் தாமும் உடன் போக அமைந்தபோது சிரபுரத்துப் பிள்ளையார் அவரைச் சோழநாட்டிலேயே இருக்க வேண்டினர். அவரது ஆணையை மறுத்தற்கஞ்சி நாவுக்கரசரும் அவ்வாறே செய்தார். பின்னர் இறைவரைப்பணிந்து விடை பெற்றுக்கொண்டு நாவுக்கரசருக்கு விடை கொடுத்துச் சிவிகைமீதேறிப் பாண்டி நாட்டிற்குப் பிள்ளையார் எழுந்தருளலாயினர்.

6. தொண்டர் குழாங்கள் போற்றிச் சூழ்ந்தன. வேதங்கள் முழங்கின. மங்கலத் தூரியங்கள் ஒரு பக்கம் முழங்கின. பேரி, தாரை, காளம் முதலியன எங்கும் ஒலித்தன.

7. இவ்வாறாக வழியிலுள்ள இடங்களுக்குச் சென்று, ஆங்காங்கே எழுந்தருளியிருக்கும் இறைவரை வணங்கிக்கொண்டு பிள்ளையார் சென்றனர். இங்ஙனம் வழிபட்ட திருப்பதிகள் அகத்தியன் பள்ளி, திருகோலக்கா, கடிக்குளம், திரு இரும்பாவனம், திருவுசாத்தானம் முதலியவைகளாகும். சோழ நாட்டைக் கடந்து தென்பாண்டி நாட்டிற்குச் செல்லும் வழியிலுள்ள திருக்கொடுங்குன்றம் என்னும் பதியை அணைந்து, அமர்ந்திருக்கும் கொழும்பவளச் செழுங்குன்றைத் தமிழ் பாடித் துதித்துப் பின்னர்க் காடும் நாடும் கடந்து மதுரைப்பதிக்கு வந்து சேர்ந்தார்.

8. இவ்வாறு திருஞான சம்பந்தர் வந்துகொண்டிருக்கும் பொழுது மதுரையைச் சூழ்ந்துள்ள எண்பெருங்குன்றுகளிலும் வசிக்கின்ற அருகர்கள், தங்களுக்கு அழிவு வருவதன் அறிகுறியாகத் தீக்கனுக்களோடு துர்ந்மித்தங்களும் நிகழக் கண்டார்கள். பள்ளிகளின் மேலும் பாழிகளின் மேலும் அசோக மரத்தின் மேலும் கூகை ஆந்தை முதலான தீய புள்ளினங்கள் பூசலிட்டன. பீலியும் தடுக்கும் பாயும் கை நழுவி விழலாயின. அருகர் அழிவுக்குக் காரணம் காணுது அறிவு கெட்டு மயங்கி வருந்தினர்; தம்முடைய ஆகமங்களிலே சொல்லப்பட்டுள்ள பொறை முதலான நற்குணங்களைக் கைவிட்டுக் கடுங்கோப முதலிய தீக்குணங்களைக் கைக் கொண்டனர். அருகர் வாழ்ந்து வந்த எல்லாப்பதிகளிலும் இவ்வாறு உற்பாதங்களும் தீக்கனுக்களும் நிகழ, அவற்றைத் தெரிவித்தற்பொருட்டு எல்லாரும் ஒன்றுகூடி மதுரைக்கு வந்து சேர்ந்தனர்; அங்கு அரசரிடம் எல்லாம் விவரமாகக் கூறினர்.

9. இவ்வாறு அருகர் அறிவிழந்து வருந்தும் பொழுது சைவமரபிலுதித்த மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் அளவில்லாத மகிழ்ச்சியைக் காட்டும் நன்னிமித்தங்கள் கண்டனர்; அதனால், சமண சமயம் குன்றிச் சைவ சமயம் விருத்தியாதல் உறுதியெனக் கருதி மகிழ்ந்தனர். இவ்வாறிருக்கையில் "உலகமெல்லாம் உய்யும்படி திருவவதாரஞ் செய்தருளிய பரமாசாரியராகிய சம்பந்தர் எழுந்தருளி வருகிறார்!" என்று சிலர் சொல்லக் கேட்டனர். இது கேட்ட அரசியார், அவ்வாறு சொல்லியவர்களுக்கு அளவிறந்த பொருள் கொடுத்தனுப்பித் தம்மை வணங்கி நின்ற குலச்சிறையாரை நோக்கி, "நம் பிரானுராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை எதிர் கொள்ளும்," என்றார். அமைச்சரும் அரசியாரை வணங்கி, விரைந்து சென்று, மதுரைக்குப் புறத்திலே போய்ப் பிள்ளையாரை எதிர் கொள்ளச் சென்றார். பின்னர்ப் பாண்டிமாதேவியார் அரசரிடம் விடை பெற்றுப் பரிசனங்கள் சூழ இறைவரை வணங்குதற்கு ஆலயத்திற்

சரும் சொல்லியனுப்பிய செய்தியை வாகீச முனிவருக்குச் சொல்லித் தாம் பாண்டி நாடு செல்ல எண்ணி இருப்பதையும் தெரிவித்தார். அப்பொழுது நாவுக்கரசர், "சமணர்களுடைய வஞ்சனைக்கு அளவேயில்லை. தாங்கள் புறப்படும் போதுள்ள கோளும் தீது. ஆதலால், அங்கே எழுந்தருள உடன்படுவது தகாது," என்று கூறினர். அப்பொழுது திருஞான சம்பந்தர், "பரசுவது நம்பெருமான் கழல் என்றால், பழுதணையாது," எனப் பகர்ந்து, கோளறு திருப்பதிகத்தையும் பாடி அருளினர். இதன் பின்னர் நாவுக்கரசரும் சம்பந்தர் செல்வதற்கு மனம் ஒப்பித் தாமும் உடன் போக அமைந்தபோது சிரபுரத்துப் பிள்ளையார் அவரைச் சோழநாட்டிலேயே இருக்க வேண்டினர். அவரது ஆணையை மறுத்தற்கஞ்சி நாவுக்கரசரும் அவ்வாறே செய்தார். பின்னர் இறைவரைப்பணிந்து விடை பெற்றுக்கொண்டு நாவுக்கரசருக்கு விடை கொடுத்துச் சிவிகைமீதேறிப் பாண்டி நாட்டிற்குப் பிள்ளையார் எழுந்தருளலாயினர்.

6. தொண்டர் குழாங்கள் போற்றிச் சூழ்ந்தன. வேதங்கள் முழங்கின. மங்களத் தூரியங்கள் ஒரு பக்கம் முழங்கின. பேரி, தாரை, காளம் முதலியன எங்கும் ஒலித்தன.

7. இவ்வாறாக வழியிலுள்ள இடங்களுக்குஞ் சென்று, ஆங்காங்கே எழுந்தருளியிருக்கும் இறைவரை வணங்கிக்கொண்டு பிள்ளையார் சென்றனர். இங்ஙனம் வழிபட்ட திருப்பதிகள் அகத்தியன் பள்ளி, திருகோலக்கா, கடிக்குளம், திரு இரும்பாவனம், திருவுசாத்தானம் முதலியவைகளாகும். சோழ நாட்டைக் கடந்து தென்பாண்டி நாட்டிற்குச் செல்லும் வழியிலுள்ள திருக்கொடுங்குன்றம் என்னும் பதியை அணைந்து, அமர்ந்திருக்கும் கொழும்பவளச் செழுங்குன்றைத் தமிழ் பாடித் துதித்துப் பின்னர்க் காடும் நாடும் கடந்து மதுரைப்பதிக்கு வந்து சேர்ந்தார்.

8. இவ்வாறு திருஞான சம்பந்தர் வந்துகொண்டிருக்கும் பொழுது மதுரையைச் சூழ்ந்துள்ள எண்பெருங்குன்றுகளிலும் வசிக்கின்ற அருகர்கள், தங்களுக்கு அழிவு வருவதன் அறிகுறியாகத் தீக்கனுக்களோடு துர்நிமித்தங்களும் நிகழக் கண்டார்கள். பள்ளிகளின் மேலும் பாழிகளின் மேலும் அசோக மரத்தின் மேலும் கூகை ஆந்தை முதலான தீய புள்ளினங்கள் பூசலிட்டன. பீலியும் தடுக்கும் பாயும் கை நழுவி விழலாயின. அருகர் அழிவுக்குக் காரணம் காணாது அறிவு கெட்டு மயங்கி வருந்தினர்; தம்முடைய ஆகமங்களிலே சொல்லப்பட்டுள்ள பொறை முதலான நற்குணங்களைக் கைவிட்டுக் கடுங்கோப முதலிய தீக்குணங்களைக் கைக் கொண்டனர். அருகர் வாழ்ந்து வந்த எல்லாப்பதிகளிலும் இவ்வாறு உற்பாதங்களும் தீக்கனுக்களும் நிகழ, அவற்றைத் தெரிவித்தற்பொருட்டு எல்லாரும் ஒன்றுகூடி மதுரைக்கு வந்து சேர்ந்தனர்; அங்கு அரசரிடம் எல்லாம் விவரமாகக் கூறினர்.

9. இவ்வாறு அருகர் அறிவிழந்து வருந்தும் பொழுது சைவமரபிலுதித்த மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் அளவில்லாத மகிழ்ச்சியைக் காட்டும் நன்னிமித்தங்கள் கண்டனர்; அதனுல், சமண சமயம் குன்றிச் சைவ சமயம் விருத்தியாதல் உறுதியெனக் கருதி மகிழ்ந்தனர். இவ்வாறிருக்கையில் "உலகமெல்லாம் உய்யும்படி திருவவதாரஞ் செய்தருளிய பரமாசாரியராகிய சம்பந்தர் எழுந்தருளி வருகிறார்!" என்று சிலர் சொல்லக் கேட்டனர். இது கேட்ட அரசியார், அவ்வாறு சொல்லியவர்களுக்கு அளவிறந்த பொருள் கொடுத்தனுப்பித் தம்மை வணங்கி நின்ற குலச்சிறையாரை நோக்கி, "நம் பிரானுராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை எதிர் கொள்ளும்," என்றார். அமைச்சரும் அரசியாரை வணங்கி, விரைந்து சென்று, மதுரைக்குப் புறத்திலே போய்ப் பிள்ளையாரை எதிர் கொள்ளச் சென்றார். பின்னர்ப் பாண்டிமாதேவியார் அரசரிடம் விடை பெற்றுப் பரிசனங்கள் சூழ இறைவரை வணங்குதற்கு ஆலயத்திற்

சென்று சொக்க நாத சுவாமியை நமஸ்கரித்து, பின் பிள்ளை-யாரை நல்வரவு ஏற்பதற்கு ஆயத்தமாய் நின்றார்.

10. பரசமய இருளை நீக்குவதற்கு அவதாரஞ் செய்தருளிய பிள்ளையார், துந்துபி முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, எண்ணிறந்த அந்தணர்கள் வேதத்தொனி பரப்ப, அடியார்கள் 'ஹர, ஹர' என்று முழக்கஞ்செய்ய, எம்மருங்கும் விபூதியின் பேரொளி பரவம் மிகுந்த சமணமென்னும் வல்லிருளை முற்றும் மாய்க்க, ஞான மணி விளக்கு எழுந்தது போலச் சிவிகைமீது வந்தார். சின்னங்களெல்லாம், 'பரசமய கோளரி வந்தார்!' என்று பணி மாறின. அடியார்கள் அவருடைய மகிமைகளை எல்லாம் பாடி ஆடினர்கள். இவ்வாறு எழுந்தருளி வரும் போதுண்டான ஓசையைக் குலச்சிறை நாயனர் அளப்பருங்களிப்புடன் செவி மடுத்துக் கீழ்வீழ்ந்து வணங்கியபின், சம்பந்தர் முன் சென்றார். மறுபடியும் கீழே விழுந்து வணங்கிக் கிடந்தனர் மந்திரியார். அப்பொழுது அடியார்கள் குலச்சிறையார் பூமியினின்று எழாமை கண்டு, திருஞான சம்பந்த மூர்த்தியிடம் வாய் பொத்தி நின்று, "பாண்டியருடைய அமைச்சரான குலச்சிறை-யார் திருமுன்னே வந்து அடியற்ற மரம்போல விழுந்து கிடக்கின்றனர்," என்று விண்ணப்பஞ் செய்தனர். சம்பந்தர் சிவிகையினின்றும் இறங்கி, அவரை அணைந்து, தம் கரங்களில் எடுத்து, "வளவர்கோன் பாவைக்கும் உமக்கும் திருவருள் நிரம்ப உண்டாகுக!" என்றார். அமைச்சர் மீண்டும் வணங்கி, 'தேவரீர் வருதலால் அடியேங்கள் என்றும் திருவருள் உடையோம் ஆயினேம்; யாங்களும் எங்கள் நாடும் வேந்தரும் திரு நீற்று ஒளியிலே விளங்கும் பெருமையை விரைவிலே பெற்றோம் ஆவோம்," என்று கூறித் தம்மை எதிர் சென்று அடி பணியுமாறு அரசியார் ஏவியுள்ள செய்தியையும் தெரிவித்தனர். அப்பொழுது மதுரையம்பதி சமீபத்துத் தோன்றியது. சம்பந்தர், "திருவாலவாய் எங்கே?" என்று

கேட்க, அங்கே சூழ்ந்து நின்ற அடியார், "அதோ தெரிகின்றது," எனக் காட்டினர். உடனே சம்பந்தர் மண்மிசை விழுந்து பணிந்து, 'மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை,' என்றெடுத்து மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் ஆகிய இருவருடைய திருத்தொண்டுகளையும் சிறப்பித்துத் திருப்பாட்டினிறுதியில் 'ஆலவாயாவது மிதுவே' என்பது அமைத்துத் திருப்பதிகம் பாடி, அடியார்களோடும் அமைச்சரோடும் சந்நிதானத்தை அடைந்து, மீண்டும் நிலமிசை வீழ்ந்து வணங்கிப் பாடினர். அப்போது ஒரு பக்கத்திலே ஒதுங்கி நின்ற பாண்டிமாதேவியார் முன்னே வர, குலச்சிறையார் பிள்ளையாரை வணங்கி நின்று, "சுவாமி, இங்கே சிரசின்மேற் கைகுவித்துக்கொண்டு வருகின்றவரே பாண்டிமாதேவியார்," என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையார் களிப்புடன் எதிரே சென்றார். உடனே தேவியார் விழுந்து வணங்கி, தம்முடைய மனக்கருத்து முற்றியதென்று நினைந்து, கண்ணீர் சொரிய, வாய் குழறி, "அடியேனும் அடியேனுடைய பதியும் செய்தவம் என்னென்பேன்!" என்று சொல்லித் துதித்தனர். பிள்ளையார், "பரசமயத்தார்களிடையே இருந்தும் சைவ நெறியிலே நிலை நின்று வாழும் அன்புடையம்மையீர், உம்மைக் காணுதற்கு வந்தோம்," என்று சொல்லி, அவரை விடைகொடுத்து அனுப்பிவிட்டு, அடியார்கள் சூழ மடத்துக்குப் புறப்பட்டனர்; வழியிலுள்ள கோவில்களை வணக்கம் செய்து, அங்கே பணி செய்யும் சைவ அடியார்களுக்கு அருள்புரிந்து, குலச்சிறையார் திருமடங்காட்டப் பரிசனங்களோடு அதில் எழுந்தருளியிருந்தார்.

11. இஃது இவ்வாறாக, பிள்ளையார் அடியார்களோடு எழுந்தருளி வரக்கண்ட சமணரெல்லோரும் பொறாமைகொண்டு மனம் புழுங்கிச் சூரியன் மறைந்த பின்னர் ஒன்று கூடிப் பாண்டிய அரசரை அடைந்தனர். பாண்டியர், "நீங்கள்

இங்ஙனம் திரண்டுவரக் காரணம் யாது?" என்று பரிந்து வினவ, சமணர், "அரசரே, உம்முடைய மதுரையிலே சைவ வேதியர்களை நாங்கள் காண நேரிட்டதால் இன்று நாங்கள் கண்டு முட்டு," என்றனர். அரசர், "யானும் கேட்டு முட்டு" என்று சொல்லி, வருத்தங்கொண்ட மனத்தராகி, "அவ்வடியார்கள் இங்கே எழுந்தருளக் காரணமென்ன? அவர்கள் யார்? என்றார். அதற்குச் சமணர்கள், "சோழநாட்டில் சீர்காழியிலிருக்கின்ற ஓர் அந்தணச் சிறுவன், சிவபெருமானிடத்திலே ஞானம் பெற்றவனென்று சொல்லுகிறார்கள். முத்துச் சிவிகையின் மேற்கொண்டு எங்களை வாதிலே வெல்லும்பொருட்டு அடியார்களோடு வந்திருக்கிறான்," என்றார்கள். பாண்டியர் கோபித்து, "இதற்கு நாம் யாது செய்வோம்?" என்று சொல்லத் தீயவர்களாகிய சமணர்கள், "நாங்கள் அந்த அந்தணப்பிள்ளை இருக்கின்ற மடத்திலே மந்திர வித்தையினாலே அக்கினி பற்றச்செய்வோமாயின், அவன் இந்நகரத்திலே இராமல் போய்விடுவான்," என்றார்கள். பாண்டியர் அதுகேட்டு, "விரைந்துசென்று அங்ஙனஞ் செய்யுங்கள்," என்று சொல்லி அவர்களைப் போக விடுத்து, யாதொரு பேச்சுமின்றி, மனக் கவலையோடு சயனத்திற் புகுந்தார். பாண்டிமாதேவியாரும் அங்கே வரப், பாண்டியர் ஒன்றும் பேசாதிருந்தார். அப்போது பாண்டிமாதேவியார், "என் உயிர்க்குயிராகிய இறைவரே, நீர் முன்னுள்ள மகிழ்ச்சியின்றி முகம் வாடியிருக்கின்றீர்; உமக்கு வந்த கவலை யாது? சொல்லியருளும்," என்றார். தேவியாரை நோக்கிப் பாண்டியர், "காவிநேர் கண்ணாய், சோழநாட்டிலே சீர்காழியிலிருக்கின்ற அந்தணச் சிறுவன் சங்கரன் அருள்பெற்று நம்முடைய அடியார்களை வாதில் வெல்லும் பொருட்டு இங்கே வந்திருக்கிறான். அவனைக் கண்ட சமண அடிகள் கண்டு முட்டு; நான் கேட்டு முட்டு. இதுவே என் கவலைக்குக் காரணம்; வேறொன்றுமில்லை," என்றார். மங்கையர்க்கரசியார் அது கேட்டு, "என் நாயகரே, நீர் கோபித்துக்கொள்ள வேண்டா. இருவரும் வாது

செய்தால், வென்றவர் பக்கம் நாம் சேர்ந்து, அவர் அநுட்டிக்கும் சமயத்தைச் சார்தல் உறுதியாகும்," என்று சொல்லி பெருமகிழ்ச்சியோடு தம்முடைய மாடத்திற் சென்றிருந்தார். குலச்சிறை நாயனார் அங்கே எய்த, பாண்டிமாதேவியார் இந்தச் செய்தியை அவருக்குச் சொன்னார். குலச்சிறையார் கை குவித்து நின்று, "இன்றைக்குத் திருஞான சம்பந்தர் இங்கே எழுந்தருளப் பெற்றோம். இனிச் சமணர்கள் என்ன வஞ்சனை செய்வார்களோ! அறியேன்," என்றார். அரசியார் அஞ்சி, "சமணர் தீத்தொழில் புரியச் சிறிதும் அஞ்சார்! திருஞான சம்பந்தப் பெருமானுக்கு யாதேனும் தீங்கு வருமாயின், நாமும் உயிர் துறந்துவிடுவோம்!" என்றார். இது நிற்க.

12. அருகர் தமது மந்திர வலியால் திருஞான சம்பந்தர் இருக்கும் மடத்திலே தீப்பற்றும்படியாக ஜபித்தனர். ஆனால், அவர்கள் மந்திரங்கள் சிறிதும் பயன்படவில்லை. ஆதலால், அருகர்கள் மிகவும் தளர்ந்து பயங்கொண்டு, "வேந்தன் இதனை அறிவானாகில் நம்மை மதியான்; நமது சமயத்தையும் அழித்துவிடுவான்," என்று நினைத்து, தீ எடுத்துத் திருமடத்திலே கொளுத்தினார்கள். தீ நன்றாய்ப் பற்றிக்கொண்டதைச் சம்பந்தர் பரிசனங்கள் பார்த்துப் பதைபதைத்து, அவர் திருமுன் சென்று விண்ணப்பித்தார்கள். அவர், "அரசன் நீதி வழுவினன்; அதனாலேற்பட்ட தீங்கே இது," எனக் கருதி, 'இட்ட இத்தழல் பையவே சென்று பாண்டியற்காக,' என்று பணித்தருளினார். விடியற்காலமாயிற்று. இரவிலே சமணர்கள் செய்த தீங்கினை மங்கையர்க்கரசியாரும் மந்திரியாரும் கேள்வியுற்று, "இங்கே சிரபுரப் பிள்ளையாரை வரவழைத்த நாம் மாய்வதுதான் சரி!" என மயங்கிப் பதைத்தார்கள்; பின்பு திருமடத்திற்குத் தீங்கு நேரவில்லை என்பது தெரிந்து, "சமணர்கள் செய்த தீச்செயல் எவ்வாறு முடியுமோ?" என்று வருந்திக்கொண்டிருந்தார்கள். அப்போது, "அரசர் வெப்பு நோயால்

வருந்துகின்றார்," என்று கேள்விப்பட்டுத் தேவியார் அங்கே சென்றார். பக்கத்தே மருத்துவ நூல் வல்லவர்கள் வைத்தியம் செய்து கொண்டிருந்தார்கள். சமணர்களும் அரசருடைய வெப்பு நோயைப்பற்றிக் கேள்விப்பட்டு அங்கே வந்து சேர்ந்தார்கள்; தங்கள் மந்திரங்களை உச்சரித்துப் பீலிகொண்டு தடவிக் கையிலேயுள்ள கமண்டல நீரைத் தெளித்து, "அருகா, காவாய்," என்று ஓதினார்கள். ஆனால், வெப்பு நோயோ, மிகுதிப்பட்டுக்கொண்டே வந்தது. இதனைக் கண்ட அரசியார், அச்சங்கொண்டு, குலச்சிறையாரை நோக்கி, "இது சமணர் செய்த தீங்கினால் மூண்டதோ!" என்று சொல்ல, குலச்சிறையாரும் அவ்வாறென்று அரசர்பால் எடுத்துக்கூறி, "இந்த நோய் பிள்ளையார் அருளினாலே தீர்வதாகும்," என்று வற்புறுத்தினார். அப்போது மன்னவர் சமணர்களை நோக்கி, மாமறைச் சிறுவர் அருளினாலே இந்நோய் அகலுமாயின் அதனையும் அறிகின்றேன்," என்று கூறிப் பின்னும், "என் நோயைத் தீர்க்கின்றவர் பக்கம் சார்வேன்," என்னும் உறுதி அறைந்து, சம்பந்தரை அழைத்து வரும்படி இசைத்தார். குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் சைவ முதல்வர் வீற்றிருக்கும் மடத்தைச் சார்ந்து, தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும் கானத்தின் எழு பிறப்பைக் கண்களிக்கக் கண்டார்கள்; கண்டு, அருகர் செய்த கொடுந்தொழிலை நினைந்து வருந்தி, நிலமுற விழுந்து வணங்கிக் கிடந்தார்கள். பிள்ளையார் அவர்களை நோக்கி, "திருவுடையீர், உங்கள்பால் தீங்குளதோ?" என வினவ, அவர்கள், "வஞ்சகர் செய்த தீத்தொழில் பேய் மன்னவர்பால் புகுந்துகொண்டது. அவர் வெப்பு நோயால் வருந்துகிறார். ஆகையால், அதனைத் தீர்த்துச் சமணர்களை வென்றருளின், எங்கள் உயிரும் உய்யும்; எங்கள் இறைவரான அரசர் உயிரும் உய்யும்," எனக் கூறினார்கள். இதனைக் கேட்ட சம்பந்தர், "நீங்கள் அஞ்சவேண்டா. மீனவனுக்கு வெண்ணீ-

நீந்து நோயைத் தீர்வித்துச் சமணர்களை வெல்கின்றோம்,'' என்று சொல்லிச் சிவிகை மீதேறிப் புறப்பட்டுச் சென்றார்; செல்லும் வழியில் ஆலயத்துள் சென்று, அங்கே பல பதிகங்களைப் பாடியருளினார்; பின் இறைவரை வணங்கி விடைகொண்டு, திருநீற்றுக் கோலத்தோடு தொண்டர் புடை சூழ அரசர் அரண்மனை வாயிலில் வந்தணைந்தார். அப்பொழுது தொண்டர்கள் முழங்கிய வாழ்த்தொலி எங்கும் பரந்தது. பல்லியங்கள் பம்பின. திருநீற்றின் சோதி எங்கும் நிரம்பியது. குலச்சிறையார் அரசர் முன்பு வந்து சம்பந்தர் வரவைத் தெரிவிக்க, அரசர் தம் பக்கத்தே பொற்பீடம் அமைக்கக் கட்டளையிட்டு, மந்திரியாரிடம் அவரை உள்ளே அழைத்து வரும்படி கூறினார். அப்போது சமணர்கள் அரசருடைய தன்மையைக் கண்டு, "இதுவா நமது சமயத்தை நாட்டுகின்ற விதம்! நீ இன்று உன்னுடைய சமயத்தைக் காக்க வேண்டுமென்று எண்ணினையாயின், எங்கள் இரு திறத்தாரையும் ஒன்றாயிருந்து நோயைத் தீர்க்குமாறு சொல்லிச் சம்பந்தரால் நோய் தீர்ந்தாலும் நாங்கள் தீர்த்ததாகக் கூறவேண்டும்,'' என்று சொன்னார்கள். இதனைக் கேட்ட அரசர், "இரு திறத்தாரும் தனித்தனியாகத் தீர்க்க வேண்டும். நான் வஞ்சகம் கூறமாட்டேன்,'' என்று சொல்லினர். அப்பொழுது சம்பந்தர் சிவிகையினின்றும் இறங்கி உள்ளே சென்றனர். குலச்சிறையாரும், பாண்டிமாதேவியாரும் ஆசனத்தினின்றும் கீழே இறங்கி அடுத்துச் சென்றனர். பாண்டி மன்னர் கவுணியர் குலவிளக்கைத் தரிசித்தனர். அவர்க்கிடப்பட்டுள்ள பொற்பீடத்தைச் சுட்டிக்காட்ட அதில் சம்பந்தர் வீற்றிருந்தார். அருகருக்கு அச்சம் பிறந்தது. செழியர் அவரைப் பார்த்த மாத்திரத்திலே. வெப்புநோய் சிறிது நீங்கப் பெற்றார். சம்பந்தரை நோக்கி அவர் வாழும் பதி யாதெனக் கேட்டபோது அவர் தம் பதியைக் கூறினார்.

13. பிள்ளையார் ஆசனத்தில் எழுந்தருளியிருப்பதைக் கண்ட அருகர் பொறுமை கொண்டு தங்கள் உள்ளத்திலுள்ள அச்சத்தை மறைத்துக் கோபம் பொங்கப் பால சூரியனைச் சூழ்கின்ற கருமுகிற் குழாங்கள் போலப் பிள்ளையாரைச் சூழ்ந்து வாதில் வெல்லக் கருதித் தங்கள் சமய நூல்களை எடுத்துச் சொற்றனர். பிள்ளையார் அதைக் கேட்டு, "உங்கள் சமய நூற்றுணிவை உள்ளபடி சொல்லுங்கள்," என்று சொல்லியருள, அருகர் துள்ளியெழுந்து பதறிக் கதறினார்கள். அரசியார் அது கண்டு பாண்டியரை நோக்கி, "என் பிராண நாயகரே, முதலில் எம்பெருமானார் உம்முடைய நோயை நீக்கியருளுக; பின்பு அருகர் பேச்சில் வல்லராயின் பேசக்கடவார்கள்," என்றார். பாண்டியர் சமணரை நோக்கி, "நீங்களும் இந்தச் சிவ பக்தரும் உங்கள் தெய்வத் தன்மையை என்னுடைய வெப்பு நோயைத் தீர்ப்பதினாலே தெரிவியுங்கள்," என்றார். சம்பந்தர் தேவியாரைப் பார்த்து, "மாதேவியே, நீ என்னைச் சிறுவன் என்று அஞ்சவேண்டா; நான் அருகருக்கு எளியேன் அல்லேன்," என்னும் கருத்துக்கொண்ட 'மானின் நேர்விழி மாதராய்,' என்னும் திருப்பதிகம் பாடியருளினார். அது கேட்டு மன்னர் இருவரையும் பார்த்து, "என்னுடைய நோயைத் தீருங்கள்; தீர்த்தவர் எவரோ அவரே வென்றவராவர்," என்று சொல்ல, சமணர் இடப்பக்கத்து நோயும், திருஞான சம்பந்தப் பிள்ளையார் வலப்பக்கத்து நோயும் தீர்ப்பதாக ஒப்புக்கொண்டு அவரவர் மந்திரங்களைச் சொல்ல ஆரம்பித்தனர்.

14. சமணர் பீலிகொண்டு இடப்பக்கம் தடவினர். அதனாலே வெப்பு நோய் வளரப் பாண்டியர் பொறுக்க முடியாது பிள்ளையாரைப் பார்த்தனர். பிள்ளையார் அரசருடைய நோக்கத்தைக் கண்டு, 'மந்திரமாவது நீறு,' என்ற திருநீற்றுப் பதிகம் பாடி, அரசனின் வலப்பாகத்தை விபூதிகொண்டு தமது அருமைத் திருக்கையினாலே தடவி அருள, அப்பாகம் வெப்பு நோய்

நீங்கிப் பொய்கைபோலக் குளிர்ந்தது. இடப்பாகத்து நோய் முன்னிலும் இரு மடங்காய் மிகுந்து பொங்கியது. சமணர் துணுக்குற்றனர். மயிர்பீலி தீய, அவ்வெப்பு நோய் தம்மீது தாவச் சரீரம் கன்றிச் செருக்கு அழிந்து அருகு இருக்க மாட்டாது தூரத்திலே நின்றார்கள்; பாண்டியர், "சமணர்களே, நீங்கள் தோல்வியுற்றீர்கள்; என்னை விட்டு அகலப் போய்விடுங்கள்," என்று சொல்லிப் பிள்ளையாரை நோக்கி, "அடியேனை ஒரு பொருளெனக் கொண்டு உய்வித்த காருணிய சுவாமியே, இடப்பாகத்து நோயையும் தீர்த்தருள் புரிய வேண்டும்," என வணங்கப் பிள்ளையார் இடப்பாகத்தையும் முன்போல நீறு கொண்டு தடவ, நோய் நீங்கி வழுதியார் பிழைத்தனர். அது கண்ட தேவியாரும் குலச்சிறையாரும் பிள்ளையார் அடியில் வீழ்ந்து, "எங்கள் அரசர் உய்ந்து நன்மை பெற்றனர்!" என்று களிப்படைந்தார்கள். பாண்டியர் சயனத்தை விட்டு எழுந்து, இரண்டு கைகளையும் சிரசின்மேற் குவித்து, "பொய்யாணைச் சமணர் முன் அடியேனுடைய நோயைத் தீர்த்த திருஞான சம்பந்த மூர்த்தியின் திருப்பாதங்கள் அடைந்து பிழைத்தேன்!" என்றார்.

15. பின்னும் சம்பந்தர் நீரிலும் நெருப்பிலும் சமணரை வாதில் வென்றனர். சமணர் கழுவேறி மாண்டனர்; சைவம் தழைத்து ஓங்கிற்று. ஒரு பெண்மணியாகிய மங்கையர்க்கரசியாரால் சைவம் தழைத்தது.

16. சேக்கிழார் பெரிய புராணத்தில் வெகு அழகுபெற அம்மையார் அருஞ்செயலை விளக்கியுள்ளார்.

'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை

எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மாற் போற்ற லாமே!"

—கலை மகள்

## பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. மங்கையர்க்கரசியார் என்பவர் யார்? அவர் சைவ மதத்திற்குச் செய்த நன்மை யாது?

2. மங்கையர்க்கரசியார் புரிந்த நன்மைக்கு உடனிருந்து உதவி புரிந்தவர் யார்? அவர் எவ்வாறு உதவி புரிந்தார்?

3. சம்பந்தர் என்பவர் யார்? அவர் எவ்வாறு பாண்டி நாட்டில் சைவத்தை நிலை நாட்டினர்?

II. 1. சமயப்பற்று, இலக்கியம், நிலை குன்றி, மங்கி, மயிற்பீலி, புகலிடம்—வாக்கியங்களில் அமைக்க.

2. நான்காம் பத்தியில் உள்ள முதல் இரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்குக.

3. இப்பாடத்திலிருந்து கலப்பு வாக்கியத்திற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

## இலக்கணம் :

### சொற்றொடர்

### 1. வினை முற்றுத் தொடர்

ஒரு வினை முற்றைத் தொடர்ந்து பெயர்ச்சொல் வந்தால், அது வினை முற்றுத் தொடராம்.

உதாரணம் :

சென்றான் சிவராமன்.—தெரிநிலை வினைமுற்றுத் தொடர்
கரியன் கண்ணன்.—குறிப்பு.

### 2. வினையெச்சத் தொடர்.

வினை முற்றின்முன் வினையெச்சம் வருமாயின், அது வினையெச்சத் தொடராம்.

உதாரணம் :—

1. உண்டு வந்தான். —தெரிநிலை வினையெச்சத் தொடர்
2. மெல்லப் பேசினான்.—குறிப்பு ” ”

### 3. பெயரெச்சத் தொடர்

ஒரு பெயர்ச்சொல் ஒரு பெயரெச்சத்தைத் தொடர்ந்து வருமாயின், பெயரெச்சத் தொடர் எனப்படும்.

உதாரணம் :—

1. வந்த மாடு — தெரிநிலைப் பெயரெச்சத் தொடர்
2. நல்ல காலம் — குறிப்பு ” ”

### பயிற்சி :

முன் பாடத்திலிருந்து வினை முற்றுத்தொடர், வினையெச்சத் தொடர், பெயரெச்சத் தொடர் ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்கள் தருக.

## 15. கிருஷ்ணனும் அருச்சுனனும்

பகவத்கீதை

[இராகம்—புன்னாகவராளி; தாளம்—ஆதி]

பல்லவி

தெரிந்து கொள்ளர்ச்சுனா—இது மகாரகசியம்—சிந்தையில்
[ஏனினம்பயம்]

அநுபல்லவி

வரும்பகை வருமில்லை; மித்துருக் களுமில்லை;
மக்களு மில்லை; முன்னே வந்தோர்க ளுமில்லை;
விறலாண்மை குறைந்துசா வாருமில்லை; விதியை
வெல்வாரு மில்லை; மேலாச் சொல்வாரிச்
[சங்கதியை. (தெரிந்து)

சரணங்கள்

(1) பொருளுக் கெல்லாம்பழைய—பொருளைநித் தியத்வத்தைப்
பொருந்தியெங் குமிருப் பதைப்—பரி
பூரணத்தை யொப்பற்ற—தன்மையு டையதைஜம்
புலனால் அறிவரி யதை
அருவுரு வானதை—அந்தமின் றிநிற்பதை
அறியாம லேயுத்தத் திலே—நிலே.
அழிந்து போகுமென—எப்படி நினைத்தாய்? சொல்
லாயுன துமனத் திலே
கருதுமது வடவைக் கனலாலும் வேகாது;
கடலாலும் புரளாது; காற்றாலுஞ் சாகாது;
எரியிடிக் குமஞ்சாதிவ் வியல்புள்ளது வாடுமோ?
எப்படி யதைப்புடையால் வெட்டிக் கொல் லக்
கூடுமோ! (தெரிந்து)

(2) ஒருவன் பழங்கந்தையை—ஒழித்துப் புதுக்கலையை
உடுப்பது போல்மண் மீது—இந்த
உடல்போனால் மற்றோருட—லினிற்சேரு மல்லாலுண்மைக்
கொருகாலும் அழி வேது?
அருவினைப் பயனுற்ற—உடலுக்கல் லாமல் ஆத்மா
அடையுமோ ஒரு தாறும்?—அந்த
ஆத்மாக் கடங்கள்தோறும்—தங்குங் கதிர்போல் நிற்கும்
ஆகு முடலந் தோறும்.
வெருவித்தன் செயலற்றால் வினையணு காதென்பதம்
மேவுவார் யாரும்புவி மீதில்லை லாங்கற்பிதம்;
பரமொன்றே நித்தியம் என்றுணர்ந் தாலப்போது
பாவபுண் ணியமென்ற யாவுங்குற் றந்தோன்றாது.
(தெரிந்து)

பாரத நாடகம்]
{ கோ. முத்துராமக் கவிராயர்
கதிர்வேல் கவிராஜ பண்டிதர்

பயிற்சி :

1. இப்பாடலை இயற்றியவர் யார்?

2. கிருஷ்ணன் அருச்சுனனுக்குக் கூறும் உண்மைகள் யாவை?

3. இவ்வுண்மைகளைக் கிருஷ்ணன் கூற நேர்ந்த காரணங்கள் யாவை?

4. இப்பாடலில் உள்ள விஷயங்களைச் சுருக்கமாக வசன நடையில் எழுதுக.

# 16. உலக அதிசயங்கள் ஏழு—I

உலகில் மக்கள் தங்களுக்கு வியப்பையூட்டும் பொருள்களைப் பற்றிக் கேட்டவிடத்தோ, அன்றிக் கண்டவிடத்தோ "ஈதென்ன அதிசயமாயிருக்கின்றதே!" என்று கூறக் கேட்டிருக்கின்றோம். ஒன்றைப்பற்றிப் பேசும்போதும், "இதுவென்ன உலகத்திலில்லாத அதிசயமோ!" என்று நம்மில் பலரும் கேட்கத் துணிகின்றோம். எனவே, நமக்கு வியப்பை யூட்டுவனவற்றையே அதிசயப் பொருள்களாக நாம் மதிக்கின்றோம். அவ்வாறு உலகில் இருந்தனவாகவும் அவற்றில் பல இன்று இறந்தனவாகவும் கூறப்படும் அதிசயங்கள் ஏழு. அவற்றுள் முதன்மையாகக் கூறப்படுவன எகிப்து நாட்டிலுள்ள மூன்று பிரமிடுகள் ஆகும்.



பிரமிடு கோபுரங்கள்

1. பிரமிடு கோபுரங்கள் மூன்று:- இவை எகிப்துத் தேசத்தில் நைல் நதியின் கரையில் உள்ளன. இவைகளில் கியாப்ஸ் பிரமிடு என்னும் கோபுரமே மிகப் பெரியதாகும். கியாப்ஸ் என்னும் அரசன் கட்டினமையாலேயே இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. இதன் உயரம் சுமார் எண்ணூறு அடியாகும். இதன் அடிப்பாகம் பல ஏக்கராப் பரப்புக்கொண்டது. இதன் அடி பரந்து மேலே செல்லச் செல்லக் குறுகி, உச்சி கூர்மையாகக் காணப்படுகின்றது. ஆதலின் இதனைக் கூர்நுனிக் கோபுரம் என்றும்

கூறுவர். இதில் கியாப்ஸ் அரசனின் சவப் பெட்டி புதைக்கப்-பட்டுள்ளது. நூறாயிரம் தொழிலாளர்கட்கு மேல் கூடி வேலை செய்து இதைக் கட்டி முடித்தார்களாம். முப்பத்தோரிலட்ச ரூபாய்கள் இத்தொழிலாளர்களின் உணவுக்காக மட்டும் செல-வாயினவாம். இக் கோபுரத்தின் வாயில் முன்பு அடைக்கப்-பட்டிருந்ததெனினும், இன்று திறக்கப்பட்டுள்ளது. இவ்வாயி-லின் வழியாக உள்ளே சென்றால், அங்கு அரசனுக்கும் அர-சிக்கும் எனத் தனித்தனி சிறுமண்டபங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றனவாம். உட்புறத்தின் உச்சி, சுமார், 500 அடி உயர-மிருக்கின்றதாம். இயற்கையாக அல்லது மக்களால் கட்டப்பட்ட செயற்கைக் கோபுரங்களில் இதுவே உலகத்திலுள்ள எவற்றினும் மிக்குயர்ந்திருப்பதால், இதனை உலக அதிசயங்களில் ஒன்றாகக் கூறுகின்றனர்.

இரண்டாங் கோபுரம்: இது 'கியாப்ஸ்' மன்னனின் தம்பி-யாகிய சிப்பிரினேஸ் என்பவனால் கட்டப்பட்டதாகும். இதன் உயரம் சுமார் 575 அடி; அடித்தளம் சுமார் எண்ணூறு சதுர அடி கொண்டதாகும்.

மூன்றாங் கோபுரம்: இது மற்ற இரண்டினும் அழகில் மிகுந்தது; சிறந்த வேலைப்பாடுகள் அமைந்தது. இதன் உயரம் சுமார் 880 அடியாகும்; அடிப்பரப்புச் சுமார் 350 சதுர அடி கொண்டதாகும். இதில் சாத்கோப் பாகலப் என்ற அரசனது சவம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது எனக் கூறுகின்றனர். இக்-கோபுரங்கள் மூன்றும் சுமார் 5000 ஆண்டுகளாக அழியாது நின்று நிலவி வருகின்றன.

2. உலகத்து இரண்டாவது அதிசயமாகக் கூறப்படுவது, எபேஸஸ் நகரத்திலுள்ள தையானா கோவில் ஆகும். இது கி. மு. 856-ஆம் ஆண்டிற்குமுன் கட்டப்பட்டதாகும். எபேஸஸ் நகரம் துருக்கி நாட்டையடுத்திருந்த அயோனியா என்ற நாட்டின்

தலைநகராய் முன்பு விளங்கியது. அங்கு வாழ்ந்திருந்த கிரேக்கர்கள், டையானா என்ற தேவ மகளைத் தங்கள் தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வந்தார்கள். அங்கு வாழ்ந்திருந்த மக்கள், பெரிய வணியர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் தெய்வமாகிய டையானாவிற்கு ஒரு கோவில் கட்ட எண்ணி, சிறந்த சிற்பிகளைக்கொண்டு நெடுநாள் வேலை செய்து, அழகிய சிற்ப வேலைப்பாடுகளமைந்த ஒரு கோவிலைக் கட்டி முடித்தார்கள். பல நாட்கள் இக்கோயில் நின்று மக்கள் மனத்திற்கு இன்பமளித்து வந்ததென்றாலும், இறுதியில் ஒரு களி மகன் இதற்குத் தீ வைத்துவிட்டான்! அந்தோ! இக்கோயில் அழிந்துபட்டது. இன்று இக்கோயிலிருந்தவிடம் வெறும் பாழ் நிலமாகக் கிடக்கின்றது.

3. பாபிலோன் நகர அரணும் வான் பொழிலும்: இவற்றை உலகத்து அதிசயங்களில் மூன்றும் அதிசயமாகக் கூறலாம். இன்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன் பாபிலோன் நாட்டை நேபுகத்நேசார் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். பாபிலோன் நாட்டின் தலைநகரும் பாபிலோன் என்றே வழங்கப்பட்டு வந்தது. இந்நாடு அன்று பல்வகை வளங்களும் நிரம்பியதாய் விளங்கியது. இந்நாட்டின் நடுவே யூப்பிரதீஸ் என்னும் ஆறு ஓடி, இதனை இரண்டாகப் பிரித்தது. இந்நதியின் ஒரு பக்கத்திலுள்ள நாட்டிற்குப் பழைய பாபிலோன் என்றும், மறு பக்கத்திலுள்ள நாட்டிற்குப் புதிய பாபிலோன் என்றும் பெயர் வழங்கும். நாம் மேலே கூறிய நெபுகத்நேசார் என்னும் அரசனே இந்நாட்டை அழகுற அமைத்தான். இந்நாடு 225 சதுர மைல் பரப்பைக் கொண்ட சம சதுர நாடாய் விளங்கியது. இந்நாட்டைச் சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் 350 அடி உயரமும், 87 அடி அகலமுமுள்ள பெரிய மதில்கள் அமைக்கப்பட்டிருந்தன. அம்மதில்களைச் சுற்றி ஆழ்ந்து அகன்ற கிடங்குகள் இருந்தன. இந்நான்கு மதிற்சுவர்களுள் ஒவ்வொன்றிலும் 25 கோட்டை

வாயில்கள் இருந்தன. கோட்டை வாயிலின் கதவுகள் வெண்கலத்தால் ஆக்கப்பெற்றிருந்தன. ஒவ்வொரு கோட்டை வாயிலுக்கும் நேரில் ஒவ்வொரு வீதியாகக் கீழ் மேலில் 25 வீதிகளும், தென் வடலில் 25 வீதிகளும் ஆக மொத்தம் 50 பெரிய வீதிகள் ஒழுங்காய் அமைக்கப்பட்டிருந்தன. இதனால், 576 சிறு சதுரங்கள் அந்நகரில் இருந்தன என்பதும், வீதி ஒவ்வொன்றும் 15 மைல் நீளமுள்ளதாயிருந்ததென்பதும் கூற வேண்டுவதில்லையல்லவா?

யூப்பிரதிஸ் நதியின் இரு கரைகளிலும் வேறு இரண்டு மதில்களும் கட்டியிருந்தனர். நகரத்தின் நடுவில் இவ்வாற்றின் குறுக்கே ஒரு பெரிய பாலம் கட்டியிருந்தனர். இப்பாலத்தின் இரண்டு முனைகளிலும், அதாவது பழைய நகரத்திலும் புதிய நகரத்திலுமாக, இரண்டு பெரிய அரண்மனைகள் கட்டப்பட்டிருந்தன.



பாபிலோன் வான் பொழில்.

இந்நாட்டு மன்னனாகிய நெபுகத்நெசார், அமிட்டிஸ் என்னும் அழகியை மணந்தான்; அவள் விருப்பிற்கிணங்கப் புதிய

நகரத்திலுள்ள அரண்மனையின் அருகே வான் பொழில் ஒன்றை நிருமித்தான்; அப்பூங்காவின் நடுவே ஓர் அழகிய மாளிகையைக் கட்டினான்; அம்மாளிகையின் மேற்றளத்தில் ஈயத் தகடுகளைப் பரப்பி, அவற்றின்மேல் மண்ணையும் எருவையும் இட்டு, அங்கு மலர்தரு மரங்களையும் செடிகளையும் நட்டு வளர்த்தான். மாளிகையின் உச்சியிலுள்ள செடிகளுக்குத் தண்ணீர் இயந்திரங்களின் மூலம் ஆற்றிலிருந்து இறைக்கப்பட்டது. அப்பொழிலினிடையே ஒரு வாவியையும் அமைத்தான். மிகவும் உயரமாயுள்ள இம்மாளிகையின் உச்சியிலமைந்த செடிகளின் பசுமையும், அவற்றினிடையே பூத்த நாநாவித நிறங்களையுடைய பூக்களும் கண்ணுக்கு எவ்வளவு குளிர்ச்சியைத் தரும்! இதன் அழகையும் அருமையையும் சொல்லவும் வேண்டுமா? இவ்வாறு வானில் காணப்பட்ட இப்பொழிலை வான் பொழில் என்று கூறுவதில் என்ன தவறிருக்கிறது.

பயிற்சி:

1. பிரமிடு கோபுரங்களில் முதன்மையானது எது? அதன் விசேஷ அமைப்பை விவரிக்க.

2. எபேஸஸ் நகரத்தின் இருப்பிடம் எது? அங்கு வசித்த மக்கள் யாவர்? அங்கிருந்த டையானா ஆலயத்தின் தற்கால நிலை யாது?

3. பாபிலோன் நாடும் நகரமும் எங்கிருந்தன? இந்நகரத்தை அழகுற அமைத்தவர் யார்?

4. பாபிலோனைச் சூழ்ந்திருந்த மதில்களைப் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?

5. வான் பொழிலை வருணித்து ஒரு பத்தி எழுதுக.

இலக்கணம்:

சொற்றொடர் (தொடர்ச்சி)

4. எழுவாய்த் தொடர்

வினை முற்று எழுவாயைத் தொடர்ந்து வந்தால், அஃது எழுவாய்த் தொடர் எனப்படும்.

உதாரணம் :—

மன்னன் கட்டினன்.
நகரம் அழிந்தது.

### 5. விளித் தொடர்

விளிச் சொற்களை வினைகள் தொடர்ந்து வந்தால், விளித் தொடர் எனப்படும்.

உதாரணம் :—

தம்பீ, வா.
கோவிந்தா, உட்காரு.

### 6. வேற்றுமைத் தொடர்

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையில் உள்ள வேற்றுமை உறுபுகள் மறைந்து நிற்காமல் வெளிப்பட்டு நிற்பது வேற்றுமைத் தொகா நிலைத்தொடர்.

உதாரணம் :—

| | | | |
|---|---|---|---|
| 1. | காட்டை ஆண்டான். | (ஐ) | 2-ஆம் வேற்றுமை விரி. |
| 2. | வேலால் குத்தினன். | (ஆல்) | 3-ஆம் ,, |
| 3. | காட்டுக்குப் போனன். | (கு) | 4-ஆம் ,, |
| 4. | சென்னையின் கிழக்கு | (இன்) | 5-ஆம் ,, |
| 5. | மன்னனது முடி | (அது) | 6-ஆம் ,, |
| 6. | நூலின் கண் உள்ளது | (கண்) | 7-ஆம் ,, |

### 7. இடைச்சொல் தொடர்

இடைச்சொல்லை வேறு சொற்கள் தொடர்ந்து வருவதற்கு இடைச்சொற்றொடர் என்பது பெயர்.

உதாரணம் :—

இனி வருக.
மற்றுப் பெரிது.

### 8. உரிச்சொல் தொடர்

உரிச்சொல்லை வேறு சொற்கள் தொடர்ந்து வந்தால் அவை உரிச்சொல் தொடர் எனப்படும்.

உதாரணம் :—

நனி உண்டான்.
சாலப் பேசினன்.

### 9. அடுக்குத் தொடர்

ஒரே சொல் அடுக்கி வந்தால், அதற்கு அடுக்குத் தொடர் என்பது பெயர்.

உதாரணம் :

நெருப்பு நெருப்பு
பாம்பு பாம்பு

---

## 17. உலக அதிசயங்கள் ஏழு—II

4. மசோலியம் என்னும் நினைவு மண்டபம் : இஃது உலகின் நான்காவது அதிசயமாகக் கருதப்படுகிறது. துருக்கி நாட்டை அடுத்துக் காரியா என்னும் நாடு ஒன்று இருந்தது. ஹலிக்கர்நாசஸ் என்னும் நகரம் அதன் தலைநகராயிருந்தது அந்நாட்டை மாசோலஸ் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஆர்ட்டிமிசியா என்னும் மனைவி ஒருத்தி இருந்தாள். இருவரும் அன்புடன் வாழ்ந்து வருகையில் திடீரென மாசோலஸ் இறந்துபட்டான். ஆர்ட்டிமிசியா, ஆறுத் துயரம் கொண்டாள்; தன் கணவன் நினைவுக்கு அறிகுறியாக ஒரு நினைவு மண்டபத்தை எழுப்பினள். அம்மண்டபம் 130 அடி உயரமுள்ளது மண்டபத்தைச் சுற்றிலும் மிக அகலமான பிராகாரம் இருந்தது.

அதில் ஏறப் பளிங்குக் கற்களாலான படிகள் அமைக்கப்பட்டிருந்தன. தூண்கள் அனைத்தும் பளிங்கினால் செய்யப்பட்டு, அருமையான சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் விளங்கியது. இது பல நூற்றாண்டுகள் வரை அழிவுறாது இருந்ததென்னினும், இடைக்காலத்தில் இந்நாட்டின்மீது படையெடுத்து வந்த துருக்கியர்களால் இஃது அழிக்கப்பட்டு விட்டது.

5. பேரஸ் என்னும் கலங்கரை விளக்கம்: இஃது உலக அதிசயங்களில் ஐந்தாவதாகக் கூறப்படுவது ஆகும். எகிப்து நாட்டில் அலக்சாண்டிரியா என்னும் பெரிய துறைமுகப்பட்டினம் ஒன்றுஉண்டு. அதனை அடுத்து, பேரஸ் என்னும் தீவு ஒன்று இருந்தது. கி. மு. 300 ஆண்டுகளுக்கு முன்னர் அத்தீவின் கீழ்க்கரையில் ஒரு பெரிய கலங்கரை விளக்கம் (Light House) கட்டப்பட்டது. இதன் உயரம் 500 அடிக்கு மேற்பட்டது. இதனைப் பல அடுக்குகள் கொண்ட சிறந்ததொரு மாளிகையாகக் கட்டி முடித்தனர். இரவில் இதன் உச்சியில் மிகப் பெரிய விளக்கு ஒன்று வைக்கப்பட்டு, அது சுடர்விட்டு எரிந்துகொண்டிருக்கும். அலக்சாண்டிரியாத் துறைமுகத்திற்கு வரும் மரக்கலங்கள் அவ்விளக்கின் உதவியாலேயே இரவில் சுலபமாக வந்து சேரும். இக்கலங்கரை விளக்கம் கி. பி. பதின்மூன்றாவது நூற்றாண்டில் ஏற்பட்ட நிலப் பெயர்வால் (பூகம்பம்) முற்றிலும் அழிந்துபட்டது.

6. ரோட்ஸ் நகரத் தாமிரச் சிலை: இதுவே உலகத்து ஆறாவது அதிசயமாகக் கூறப்படுவது. ரோட்ஸ் என்பது மத்திய தரைக் கடலிலுள்ள ஒரு தீவு ஆகும். ஒரு சமயம் கிரீஸ் தேசத்தை யாண்ட டேமிட்ரியஸ் என்னும் அரசன் இத்தீவின்மீது படையெடுத்து வந்தான். அதைக்கண்டு இத்தீவில் வாழ்ந்த மக்கள் தங்கள் வழிபடு கடவுளாகிய அப்போலோ (சூரியன்) இடம் சென்று, நாட்டைக் காக்கத் தங்களுக்கு

உதவி புரியுமாறு பெரிதும் வேண்டினார்கள். போரில் இவர்கள் வெற்றி கொண்டார்கள். டெமிட்ரியஸ் தோற்றோடினான். இது காரணமாக அப்போலோவைப்போல ஒரு சிலை செய்து நிறுத்த அத்தீவினர் முடிவு செய்தனர். அதன்படி சாரஸ் என்னும் ஒரு சிற்பியைக்கொண்டு, பல ஆண்டுகள் அரிதின் முயன்று, தாமிரத்தினால் இச்சிலையைச் செய்து முடித்தனர். இச்சிலையை அத்தீவின் துறைமுகத்திலுள்ள இரு பெரும்பாறைகளின்மீது கால்கள் அமையுமாறு நிறுத்தினர். அதன் பிறகு அத்துறைமுகத்திற்கு வரும் மரக்கலங்கள் அனைத்தும் இச்சிலையின் இரண்டு கால்களுக்கு இடையே நுழைந்துதான் வந்து சேரும். இச்சிலை கி. மு. 300-ஆம் ஆண்டிற்கு முன் இயற்றப்பட்டதாகும். இச் சிலையின் உயரம் 120 அடி. இதனைச் செய்து முடிக்க 12 ஆண்டுகளுக்கு மேலாயிற்றும். இச்சிலையின் விரல்களுள் ஒவ்வொன்றும் பலர் கூடி அணைக்க முடியாத் தூணைப் போன்றது என்றால், இதன் உருவ அமைப்பைப்பற்றி வேறு கூறவும் வேண்டுமா? இச்சிலை நீண்ட நாட்கள் உலகில் இல்லை. சுமார் 70, 80 யாண்டுகளே நிலைத்திருந்தது. கடைசியாகக் கி. மு. 224-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலப் பெயர்வால், இச்சிலை பெயர்ந்து கடலுள் வீழ்ந்துவிட்டது.



ரோட்ஸ் நகரத் தாமிரச் சிலை.

7. ஜுபிட்டர் சிலை: இதுவே ஏழாவதாகக் கூறப்படும் அதிசயமாகும். இது கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பியா எனுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

கிரேக்கர்களின் கடவுள் ஜூப்பிட்டர் ஆவார். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் பித்தியஸ் என்னும் சிறந்த சிற்பி ஒருவனிருந்தான். அவன் ஜூப்பிட்டர் தேவனுக்கு ஒரு சிலையமைக்க எண்ணிப் பெரிதும் யானைத் தந்தத்தினாலே இயன்ற ஒரு சிலையை செய்து முடித்தான். இச்சிலை அரியணையில் அத்தேவன் அமர்ந்திருக்கும் வண்ணம் அமைக்கப்பட்டது. அவ்வரியணையின் உயரம் சுமார் 60 அடி. அதிலுள்ள அத்தேவனின் சிலைமட்டும் சுமார் 40 அடி உயரம் இருந்தது. அரியணை கருங்காலி மரத்தால் செய்யப்பட்டது. அதில் தந்தத்தினாலும், பொன்னினாலும் பல சிற்பங்கள் செய்யப்பட்டு நவமணிகளும் வைத்து அழுத்தப் பெற்றிருந்தன. அத்தேவன் கையில் ஓர் அழகிய செங்கோல் கொடுக்கப்பட்டிருந்தது; முடியில் உயர்ந்த வைரங்கள் வைத்து இழைக்கப்பட்டிருந்தன. பொதுவாக இதன் சிற்ப வேலைப்பாடுகள் மிகச் சிறந்தன என்று கூறலாமே ஒழிய, தனித்தனியே வருணித்துக் கூறுதல் யார்க்கும் அரிதே. அவ்வளவு சிறந்த நிலையில் இச்சிலை விளங்கியது.

பயிற்சி :

1. உலகத்தின் நான்காவது அதிசயமாகக் கருதப்படுவது யாது? அஃது எங்குள்ளது? அஃது ஏன் கட்டப்பட்டது?

2. மஸோலியத்தை வருணித்துச் சுருக்கமாக ஒரு பத்தி எழுதுக.

3. பேரஸ் என்பது யாது? அதன் அமைப்பு எப்படி இருந்தது? அஃது எவ்வாறு அழிவுற்றது?

4. ரோட்ஸ் நகரத் தாமிரச்சிலை ஏன் நிறுத்தப்பட்டது? அது நிறுத்தப்பட்ட காலம் எது? அதன் முடிவு என்ன?

5. ஜூப்பிட்டர் சிலையைப்பற்றிச் சுருக்கமாக ஒரு பத்தியில் வருணனை எழுதுக.

## இலக்கணம் :

### புணர்ச்சி

இரண்டு சொற்கள் ஒன்றாய்க் கூடுவதே (புணருவதே) புணர்ச்சியாம். இவ்விரண்டு சொற்களில் முதலில் உள்ளது நிலைமொழி எனப்படும். நிலைமொழியோடு வந்து புணரும் சொல் வருமொழி எனப்படும்.

### வேற்றுமைப் புணர்ச்சி—அல்வழிப் புணர்ச்சி :

வேற்றுமை உருபுகள் மறைந்தேனும் அல்லது வெளிப்பட்டேனும் சொற்கள் புணருவதே வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.

இரு சொற்கள் வேற்றுமை அல்லாத வழியில் புணர்வது அல்வழிப் புணர்ச்சி எனப்படும்.

### (1) வேற்றுமைப் புணர்ச்சி

| வேற்றுமைத் தொகை | | வேற்றுமை விரி | | உருபு |
|---|---|---|---|---|
| பால் குடித்தான் | — | பாலைக் குடித்தான் | — | ஐ |
| கல் எறிந்தான் | — | கல்லால் எறிந்தான் | — | ஆல் |
| தசரதன் மகன் | — | தசரதனுக்கு மகன் | — | கு |
| மலைவீழ் அருவி | — | மலையின்வீழ் அருவி | — | இன் |
| பார்த்தன் தேர் | — | பார்த்தனது தேர் | — | அது |
| மணி ஒளி | — | மணியின் கண் ஒளி | — | கண் |

குறிப்பு :—வேற்றுமை உருபுகள் மறைந்து வருவதற்கு வேற்றுமைத் தொகை நிலைத் தொடர் என்பதும், வேற்றுமை உருபு வெளிப்பட்டு வருவதற்குத் தொகாநிலைத் தொடர் என்பதும் பெயர்.

---

1146.010
...600 008

# 18. புகழேந்திப்புலவரும்* ஒட்டக்கூத்தரும்

[கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையவர்கள்]

## காட்சி—1

இடம் : பாண்டியன் அரசவை.

உரியோர் : வீரபாண்டியன், அவன் மகள் செந்தமிழ்ச் செல்வி புகழேந்தியார், முருகனார், மாறனார், மருதனார், ஒட்டக்கூத்தர், ஏவலாளர்.

பாண்டியன்.—புலவர்காள், செந்தமிழன்னைக்கு இன்று எவையேனும் புதிய அணிகள் இயற்றியிருக்கின்றீர்களா ?

முருகனார்.—அரசே! நம் செந்தமிழ்ச் செல்வியார், தமிழ்த்தாயின் சிறப்பினைக் குறித்து ஒரு வெண்பா இயற்றி யுள்ளார்.

பாண்.—நன்று ! அம்மா ! அதனைக் கூறு, கேட்போம்.

செல்.—அப்பா ! எளியேன் இயற்றியதும் ஒரு பாட்டு ஆகுமா ! அதனையும் இப்புலவர் பெருமக்கள்முன் கூறுவதா ! அஃதிருக்கட்டும் ; இப்புலவர்களியற்றிய அரிய செய்யுட்களையும், பெரிய ஆராய்ச்சிகளையும் கேட்டு மகிழ்வோம்.

புகழேந்தி.—அன்னாய் ! வாழி ! உன் செய்யுளையே முதலில் கேட்கும் அவாவுடையேம். அன்பு கூர்ந்து கூறுவாயாக.

செல்.—தந்தாய் ! உங்கள் பணி இதுவாயின், ஏதோ அதனைக் கூறுகின்றேன் :

---

*இது, கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக் கல்லூரிச் சிறார் நடிப்பதற்குக் கால நிலையை ஒட்டி எழுதப்பெற்றதொரு சிறு நாடகம்.

வெண்பா

உதியன் வரையில் ஒழுகுசுவைத் தேனே!
பொதியி லிளங்காவின் பொற்போ!—மதுகரங்கள்
நண்ணு மலர்நாடு நல்கு திருமணமோ!
என்னே தமிழன் எழில்!

மரு.—ஓ! என்ன அழகிய வெண்பா! இவர் 'வெண்பாவிற் புகழேந்தி' என்பாரின் அன்பார்ந்த மாணவியரன்றே! சேர நாட்டுத் தேன், பாண்டி நாட்டுத் தென்றல், சோழநாட்டு மலர் இவற்றால் எய்தும் இன்பங்களைத் தருவது தமிழ் என்று பொருள் படுகின்றது. என்ன அழகிய வெண்பா! எங்கே அம்மா! இன்னொரு முறை அவ்வெண்பாவினைக் கூறு.

சேல்.—உதியன் வரையில்...............தமிழின் எழில்.

முரு.—இவ்வெண்பாவில் ஐம்புல இன்பங்களையும் அமைத்துப் பாடிய அழகு வியக்கத் தக்கது! 'தேன்' என்றதால் சுவையும், 'தென்றல்' என்றதால் மெய்யின்பமும், 'மதுகரங்கள் நண்ணும்' என்றதால் இனிய ஒலியும், 'மலர்' என்றதால் அழகிய காட்சியும், 'திருமணம்' என்றதால் நறிய மணமும் கூறியிருப்பது உற்று நோக்கத்தக்கது. (அவ்வெண்பாவினைக் கூறல்)

மாறனார்.—புலவர்காள்! இவ்வினிய வெண்பாவில் உள்ள உள்ளுறை ஒன்றை உற்று நோக்கினீர்களா? சோழ நாடு திருமணம் நல்குமாமே! இத்திருமணம் பூவின் நறுமணந்தானே, அன்றி மணமக்கள் திருமணமோ," "மதுகரங்கள் நண்ணும் மலர் நாடு நல்கு திருமணமோ," என்பதை உற்று நோக்குங்கள்.

சேல்.—இப்புலவர்க்கு இதுதான் வழக்கம். எதனிலும் உள்ளுறை ஒன்று இல்லுரைகள் பொருத்திக் கூறுவர்.

புக.—ஓகோ! மாறனார் கூறுவது, நமது செந்தமிழ்ச் செல்வி எண்ணிக் கூறியது ஆயினும், எண்ணாததாயினும், தமிழ்த் தாயினருளால் அவ்வெண்பாவில் அமைந்து, நம்மை ஒரு புதிய ஆராய்ச்சிக்குக் கொண்டுவந்து விட்டது. அரசே! நமது செல்-விக்கு மணப் பருவம் எய்தியது முதல் இது வரையில் எதிர் நோக்கியிருந்த திருமணப் பேச்சு இன்று நம் தமிழ்த்தாயின் அருளால் மாறனார் வழியாக வெளிவந்திருக்கின்றது. ஆகவே, அரசே! நாம் இன்று அதுபற்றி எண்ணி முடித்தல் வேண்டும்.

செல்.—ஐயன்மீர்! நான் போகின்றேன். நீங்கள் இயற்றி-வரும் செய்யுட்களைக் கேட்டு மகிழ வந்தேன். நீங்கள் ஏதேதோ பேசுகின்றீர்கள். நான் போகிறேன்.

புக.—அம்மா! சற்று இரு. நாங்கள் எடுத்த காரியத்தை ஒரு முடிவு செய்து கொண்டு பின்னர் உன் விருப்பின்படி நாங்கள் இயற்றியுள்ள செய்யுட்களைக் கூறுவோம்.

பாண்.—புலவீர்காள்! நமது செல்வியின் திருமணம்பற்றி உங்கள் ஒவ்வொருவருடைய எண்ணத்தையும் கூறுங்கள்.

முரு.—பண்டுதொட்டே பாண்டியரும் சோழரும் கொண்டு கொடுத்து வரும் உரிமைச் சுற்றத்தார்கள். நம் செல்வியின் பாட்டிலும் திருவருட் செயலால் அக்குறிப்புத் தோன்றி யுள்ளது.

மரு.—குலோத்துங்க மன்னனது கல்வி, அறிவு, வீரம், அருள், ஆட்சித் திறமைகளை நீங்கள் அறிவீர்கள்.

மாற.—குலோத்துங்க மன்னனும் நம் செல்வியும் ஒத்த-வுருவும், திருவும், அறிவும், மணத்திற்கேற்ற வயதும் உடைய-வர்கள்.

ஏவ.—ஆமாங்க மகாராசா! சோழ ராசா முடி சூட்டுக்கு நாமெல்லாம் போயிருந்தபோது, அங்கேயிருந்த பூங்கா வனத்-

தில் அந்த இளவரசும் நம் செல்வியம்மாளும் பேசிக்கொண்டிருந்தாங்க..........பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளை, மாப்பிள்ளைக்கேற்ற பெண்ணுங்க.

சேல்.—சீ! ஏண்டா பிதற்றுகிறாய்!

ஏவ.—மகாராசா! இந்த நாய் சொல்லுவது பொய்யா மெய்யா என்று இந்தப் பயல் நாகனைக் கேட்டால் தெரியும். நாங்களிரண்டு பேருந்தான் அம்மாளுக்குத் காவலாகப் போயிருந்தோம்.

நாகன்.—ஆமாங்க மகாராசா! போயிருந்தோம். பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளை, மாப்பிள்ளைக்கேற்ற பெண்ணுங்க.

வா. காவ.—மகாராசா! சோழ நாட்டிலிருந்து யாரோ ஒரு புலவர் வந்திருக்கிறார். அவர் பெயர் ஒட்டக்கூத்தராம்.

பாண்.—நன்று! அவரை இங்கு வரச்செய். (பின்னர்ப் புலவர்களை நோக்கி) புலவர்களே! சோழ நாட்டுப் புலவர் திலகராய ஒட்டக்கூத்தரின் அருமை பெருமைகள் யாவையோ?

முரு.—அரசே! அவரது இயற்பெயர் ஆனந்தக்கூத்தர் என்பது. அவர் முருகவேளின் அருள் பெற்றவர்; 'கன்னலே! பாகோ!' என்னக் கவித்தமிழ் மொழியும் மாண்பினர்.

மாற.—அரசே! அவர் செங்குந்த மரபினர். செங்குந்த மரபினரைக் கொல்லாமை, புலாலுண்ணாமை முதலிய சீலங்களினால் உயரச் செய்தவர். அவர்களுடைய வீரதீரத்தை உலகிற்குக் காட்ட வேண்டி "ஈட்டி எழுபது" என்றொரு நூலை இயற்றி, அதனை அம்மரபினர் ஆயிரவர் தலைமீதிருந்து அரங்கேற்றியவர்.

மரு.—அரசர் பெருமானே! பொய்ப் புலவர் யாரேனும் புலவரெனத் தம் முன் வருவாராயின், அவர் தம் செருக்குத் தலை வீட்டி ஒட்டுபவர்.

புக.—அப்புலவர் பெருமான் சோழ அரச பரம்பரையின் நன்மதிப்பை நெடுங்காலமாகப் பெற்றவர். இப்போதிருக்கும் குலோத்துங்க மன்னன் அவர்தம் மாணவனே. ஒரு சமயம் அப்புலவர் குலோத்துங்கனைப் பாடத் தொடங்கி,

"ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றறித்தபி ரான்"

என்று கூறவே, அது கேட்ட குலோத்துங்க மன்னனால்

"என்று நித்தநலம்
பாடுங் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென் றேஎன்னைச் சொல்லு
[வரே."

என்று பாடப்பெற்றவர். அம்மட்டோ! தாம் பாடிய அப்பாட்டின் உண்மையை உலகத்திற்கு மெய்ப்பிக்க வேண்டி, ஆண்டிற்கு ஒரு நாள் அச்சோழன், ஒட்டக்கூத்தப் புலவர் அடிக்கீழ் அமர்ந்து உலா வருகின்றான் என்றால், அப்புலவரின் பெருமையை என்னென்பது அரசே.

"எத்தனை புலவ ரோமுன் இறைவரை வசம்செய் துற்றார்;
அத்தனை பேருள் ஆரும் அருந்தமிழ் ஒட்டக் கூத்தன்
ஒத்தவர் முடிமேல் தன்தா ளுறவைத்த தில்லை யில்லை;
இத்தனை அதிட்ட மன்னோர்க்கு இசைந்தமை ஏற்றந் தானே."

ஏவ.—அரசே! சோழ நாட்டுப் புலவர் ஒட்டக்கூத்தர் இதோ வந்துவிட்டார்.

பாண்.—வருக! வருக! அமர்க! அமர்க! நீங்களும் அரசரும், பிறரும் நலந்தானே? உங்கள் ஆட்சியும் குடிகள் மாட்சியும் சிறந்து நிற்கின்றனவா?

ஒட்.—அரசே! வாழ்க! வாழ்க! அங்கு யாவரும் நலனே; அரசாட்சிக்கும் குடி மாட்சிக்கும் ஒரு குறையுமில்லை. இங்கு நீங்களும், அரசியும், செல்வியும், புலவர்களும், பிறரும் நலனுற்றிருக்கின்றீர்களா? நெல் வளம், குடி வளம் குறைவிலாது ஓங்குகின்றனவா?

பாண்.—உங்கள் அருளால் யாவரும் நலமே! ஒரு குறையுமில்லை. புலவர் ஏறே! சிறியேனைப் பொருள் செய்து இங்கு அருமையாக எழுந்தருளியது எனக்கும் இங்குள்ள புலவர்கட்கும் மிக்க பெருமையையும் மகிழ்ச்சியையும் தருவதாகும்.

ஒட்.—அரசே! அருமையாக வந்ததென்று கூறி, யான் அடிக்கடி வாராததோர் குறையினை எனக்குக் காட்டிய நுண்ணுரைபற்றி மகிழ்ந்து, அக்குறையினைப் பொறுத்திட வேண்டுகின்றேன். அரசே! நமது செந்தமிழ்த் தெய்வத்தின் அருளால் இனி எனக்கு அடிக்கடி இங்கு வந்து போகும் நற்பேறு கிடைக்குமென எண்ணுகின்றேன்.

பாண்.—புலவர் பெருமானே! அஃதென்ன! அங்ஙனம் நிகழின் எனது நற்பேறேயாகும். தாங்கள் குறித்தது என்னேயோ?

ஒட்.—அரசே! பாண்டிய மன்னர்க்கும், சோழ மன்னர்க்கும் பல தலைமுறையாய் இருந்துவரும் நட்பினையும் உறவினையும் நான் தங்கட்கு எடுத்துரைக்க வேண்டுவதில்லை. இறைவனது இரு விழிகள் எனத்தகும் சூரிய சந்திர மரபினர் என்று நீங்கள் கூறப்படுவதொன்றே உங்கள் பெருமையையும், உலகிற்கு நீங்கள் நட்புற்றுச் செய்துவரும் நன்மையையும் காட்டுமன்றோ? உங்கள் நட்பு என்றென்றும் நிலவுமாறு உங்களுக்குள் அவ்வப்போது எய்தும் சுற்றமுடைமை வளர்ந்து வருகின்றது. தமிழ்த்தாயின் அருளால் எங்கள் இளவரசருக்கும், உங்கள் இளவரசிக்கும் உரிமைச் சுற்றமும், உருவும், திருவும், மணப்பருவமும் அமைந்து விளங்குகின்றன. இதுபற்றிய வேண்டுகோளுக்கே யான் இங்கு வந்தவனாவேன்.

மாற.—அரசே! இன்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பாருங்கள்! எல்லாம் தமிழ்த்தாயின் தண்ணருளேயன்றோ?

பாண்.—புலவரேறே! இதுபற்றி நீங்கள் இவ்வளவு தூரம் வருவானேன்? உங்கள் பணியினை யான் மறுத்துரைப்பதும் உண்டோ? உங்கள் விருப்பின்படியே செய்வோம். யான் எங்கள் செல்வியைத் தர இசைவது உங்கள் பரந்த ஆட்சிக்கு அன்று, விரிந்த திருவிற்கு அன்று, சிறந்த வீரத்திற்கு அன்று, குலோத்துங்கன் உமது அரிய மாணவனென்ற அந்த ஒரு நலத்திற்கேயாகும்.

ஒட்.—அரசே! அங்ஙனமே உங்கள் செல்விக்கும் இயற்கையில் அமைந்துள்ள பல சீர்களினும் சிறந்ததொன்று அச்செல்வி இப்புலவர் பெருமானின் மாணவியாய் இருத்தலேயாம்.

பாண்.—புலவர் பெருமானே! ஆம்! ஆம்! அஃதுண்மையினும் உண்மையே.

செல்வி.—அப்பா! புலவர்கள் இயற்றிய அரிய செய்யுட்களைச் சொல்லச் செய்கின்றேனென்று சொன்னீர்களே! வேறு ஏதேதோ பேசிக்கொண்டிருக்கின்றீர்களே! புதியராக வந்த புலவர் பெருமானையாவது ஒரு செய்யுள் கூறச்சொல்லுங்களேன்?

மரு.—அம்மா! நன்று கூறினாய்! ஐயீர்! கூத்தரே! எங்கள் செல்வியை மணக்கும் தனிச்சீர் உங்கள் அரசனுக்கு உளது என்பதை இந்தச் செல்வி ஏற்கும்படி ஓர் அம்மானையில் வைத்துப் பாடுங்கள்.

ஒட்.—அம்மா! செல்வி! உங்கள் அத்தை மகன் பெருமையை எடுத்துப் பாடுகின்றேன், கேள்:

கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானை;
　　கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானை;
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானை;
　　ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானை;

வீரர்க்குள் வீரன்ஒரு மீனவனோ அம்மானே ;
வெற்றிப்புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே ;
ஊருக்கு உறைந்தைநிகர் கொற்கையோ அம்மானே ;
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானே.

புக.—புலவர் பெருமானே! யான் மறுமொழி கூறலாமோ ?

ஒட்.—தடையில்லை. தாங்கள் கருதியவாறே நன்று கூற-லாம்.

புக.—திருநெடுமா லவதாரம் சிறுபுலியோ அம்மானே ;
சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானே ;
ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்த தம்மானே ;
ஒப்பரிய திருவிளையாட்டு உறந்தையிலோ அம்மானே ;
கரையெதிரே டேறியதும் காவிரியோ அம்மானே ;
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே ;
பரவைபடிந் ததும்சோழன் பதந்தனிலோ அம்மானே ;
பாண்டியனார் பராக்கிரமம் பகரௌிதோ அம்மானே ;

ஒட்.—ஓ; நன்றாயுளது! இத்தகைய பெரும்புலவரின் மாணவியாகிய ஒரு மணியினை யாங்கள் அடைவது ஒரு பெரு நற்பேறேயாகும்.

ஏவ.—மகாராசா! வணக்கம்! நம் அரசியார் இங்குள்ள எல்லோரையும் உணவருந்த அழைக்கின்றனர்.

## காட்சி—2

இடம் : சோழன் அரண்மனை.

உரியோர் : குலோத்துங்கன், கூத்தர், போலிப் புலவர்கள் ஏவலாளர்.

ஒட்.—அரசே! வாழ்க! வாழ்க! இந்தக் கலைமகள் திரு-நாளில் புலவர்கட்குப் பரிசில் தந்து வரும் இத்திருவிழா, உங்கள் மரபில் நெடுங்காலமாக நடந்து வருவதாற்றான், நமது தாய் மொழிப் பயிற்சி இவ்வளவு மேன்மையுற்றிருக்-

கின்றது. எத்தனையோ புலவர்கள் இத்திருவிழாவிற்கு வந்து தங்கள் புலமைத் திறங்களைக் காட்டிப் பெரும்பெரும் பரிசில்களும் பட்டங்களும் பெற்றுச் சென்றுள்ளார்கள். அரசே! இத்திருவிழா உண்மைப் புலவர்களை ஊக்கப்படுத்துவதற்கென்றே தோன்றியதாயினும், அதனை உணராமல் பாவம்! போலிப் புலவர் சிலரும் வந்து, தம் பொழுதையும் நம் பொழுதையும் வீணாக்கி விடுகின்றனர். ஐயோ! பாவம்!

குலோ.—ஆம், ஆம் புலவரேறே! அங்ஙனம் உலகினை ஏமாற்றி வரும் போலிப் புலவர்களைச் சிறைப்படுத்த வேண்டும். பயிற்சிகள் செய்வித்து, அடுத்த கலைமகள் விழாவிற்குள் ஏதாவது கற்றுவரச் செய்திருக்கும் உங்கள் ஏற்பாடு மிகச் சிறந்ததாகி-விட்டது. போலிப் புலவர்கள் வருவது வர வரக் குறைந்து போயிற்று. சிறைப்பட்ட புலவர்களும் ஏதோ, ஒருவாறு கற்றுக்கொண்டு போகிறார்கள்.

ஏவ.—மகாராசா! ஒரு புலவர் கூட்டம் வருகின்றது.

குலோ.—வரச்சொல் (வருதல்)

ஒட்.—புலவர்களே! வருக! வருக! அமர்க! அமர்க! ஐயன்மீர்! நீங்கள் கலைமகள் விழாப் பரிசு பெற வந்திருக்கும் புலவர்கள் போலும்!

குயவர்—ஆம், ஆம். நாங்கள் வெகு தூரத்திலிருந்து வந்துள்ளோம்; தக்க பரிசுகள் தந்து அனுப்புவீர்களாக.

ஒட்.—ஐயீர்! நீங்கள் யாவர்! உங்கள் ஆராய்ச்சிகளைத் தெரிவியுங்கள்.

குய.—ஐயீர்! நான் கோட்டையூர்க் குண்டுச்சட்டிப் புலவர் மகன் கண்ணுக்குட்டிப் புலவர். எனக்கு 'இலக்கணக் கவிராயர்' என்றும் பெயருண்டு.

ஒட்.—அப்படியா! தொல்காப்பியத்தில் ஒரு சூத்திரம் கூறுங்கள்.

குய.—பாடுபட்டுத் தேடிப் பணத்தை அறஞ்செய்யும்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் ;—

ஒட்.—ஓ! ஓ! இதுதான் தொல்காப்பியச் சூத்திரமோ?

குய.—இன்னும் இருப்பதையும் கேட்டுப் பேசுங்கள்.

—கூடுவிட்டிச்
செட்டி கடையிலோ சேர்மரணப் பண்டிலோ
விட்டுச்செல் லுங்கள்ந்த விண்.

ஒட்.—ஐயிர்! போதும் போதும்! இருங்கள்.

குய.—ஐயா! நானும் போதும் போதும் என்னும்படி எனக்குப் பரிசு தருதல் வேண்டும்.

ஒட்.—இருக்கட்டும்; ஐயிர்! தாங்கள் யார்?

தச்சர்—பந்தநல்லூர் சந்தக்கவிச் சுந்தராசாரியார்.

ஒட்.—தங்கட்கு எத்துறையில் சிறந்த புலமையுண்டு?

தச்—'சந்த......... ஆசாரியார்' என்னும் இந்தப் பேரே அந்தக் கேள்விக்குத் தந்திட்டதோ விடை?

ஒட்.—நல்லது ஒரு சந்தக்கவி பாடுங்கள்.

கொக்குக் கொக்குக் கொக்குக் கொக்கென் றிருமாமுன்
திக்கித் திக்கித் திக்கிப் பேசித் திகையாமுன்
தக்குத் திக்கென் றூடுந் தாசியர் தமதில்லம்
புக்குப் புக்குப் புக்கே யமனடி புகுவீரே.

ஒட்.—ஓ! நல்ல பொருளமைதி! அமருங்கள். தாங்கள் யாவர்! தங்கள் புலமையினைச் சிறிது காட்டுங்கள்!

கொல்லர்—ஐயா! யான் வல்லம் செல்லப்ப ஆசாரி மகன் திருவேங்கடப் புலவன். விசுவப் பிராமணுள் சகத் குரு.

ஒட்.—அவையெல்லாம் இருக்கட்டும்; தங்கட்கு எத்துறையில் சிறந்த பயிற்சியுண்டு?

கொல்.—தல புராணங்கள் பாடுவதில் எங்கள் வமிசத்தினர் பேர் பெற்றவர். எலுமிச்சம்பழக் கவிஞர்; நார்த்தம்பழக்

கவிஞர் என்று கேள்விப்பட்டிருக்கலாம். எலுமிச்சம்பழக் கவிஞர் பேரர் இஞ்சிக் கவிராயர் என்று என்னைச் சொல்லுவதுண்டு. ஐம்பது தல புராணங்கள் பாடியிருக்கின்றேன்.

ஒட்.—இருக்கட்டும்; தல புராணங்கள் பாடுவதற்குரிய இலக்கணங்கணங்கள் யாவையோ?

கோல்.—அந்த இலக்கணங்களையெல்லாம் சுருக்கி எங்கள் பாட்டனார் ஒரு பாட்டிலடக்கி வைத்திருக்கிறார். அதனைக் கூறுகிறேன். கேளுங்கள்:—

கேளப்பா தலபுராணம் என்றொருத்தன்
கிட்டினால் அவன் ஊரும் அதனைச் சுற்றிக்
கிடக்கின்ற பலவூரும் கேட்டுக் கொள்ளு;
கிட்டியதோர் நதிகேளு; கோயில் கேளு;
பாழப்பா அவ்வூரொன் றாலும் அஃதைப்
பகருதிருத் தலமாக்கிப் பாடு; சுற்றிப்
படுமூர்கள் எவற்றினையும் பதிக ளாக்கு;
பாடிடுவாய் நாடுநகர்ப் படல மெல்லாம்;
ஆளப்பா பாழான ஆறொன் றாலும்
ஆகாச கங்கையென அதனை ஆக்கி—

ஒட்.—ஐயீர்! போதும்! தாங்கள் யார்? தங்கள் புலமை யாது?

வேளாளர்—மருதூர் கிழார் பேரர் மாணிக்கப் புலவர். எங்கள் பாட்டனார் வைத்திருந்த இலக்கணம் இன்னும் இருக்கின்றது.—அவர் திதியன்று ஐயர் அதனை எடுத்து அதன் மேலே எழுதியிருக்கும் பேரைச் சொல்லி அர்ப்பணம் செய்துவிடுவார்.

ஒட்.—அப்படியா? என்ன பேர் சொல்லுவார்?

வேளா.—ஏதோ 'தொல்காப்பியம் நாமலட்சண சாஸ்திரே அர்ப்பியாமே அர்ப்பியாமே' என்பர்.

ஒட்.—(தனக்குள்) ஓ! ஓ! புள்ளியில்லாதெழுதப்பட்டிருக்கின்றதைப் படிக்கும் முறை! ஐயீர்! தங்கள் புலமை யாதோ?

வேளா.—ஐயா! நாம் வர கவிதான்; படிப்புச் சுருக்கந்தான்; ஆயினும், பாட்டு நன்றாகப் பாடுவோம்.

ஒட்.—அப்படியா! எப்படியாவது ஒரு பாட்டுக் கூறுவீராக.

வேளா.—சொல்லாரும் அவ்வொட்டக் கூத்தப் புலவர்
[துணையிருந்தால்
செல்லார எய்தும்; பணம் தனம் எல்லாம் நிரம்பவரும்;
அல்லாது போனால் அடிமேலடியாய் அடித்துத்தள்ளிப்
பொல்லாத அந்தச் சிறைச்சாலையிற்கொண்டு போடு
[வரே.

ஒட்.—மிக அரிய பாடல்! ஐயீர்! தாங்கள் யாவரோ? பிறவிக் குருடரோ? தங்கள் புலமை யாதோ?

குருடர்—ஐயா! யாம்
மன்னவர்தம் சிண்டிலையும் மடக்கிப் பற்றி
மடித்தலத்தில் வைத்திடுமோர் சாதியாவோம்—

ஒட்.—நல்லது; தங்கள் புலமைத் திறத்தினைத் தெரிவியுங்கள்.

குருடர்.—நமது அரசர்மீது ஒரு பாட்டுப்பாடி வந்திருக்கின்றோம்.

ஒட்.—மிக்க மகிழ்ச்சி! இதுகாறும் இப்புலவர் ஒருவரும் எமது மன்னரைப் பாடினால்லர். எங்கே அதனைக் கூறுங்கள் பார்ப்போம்!

செக்கச் சிவந்த செந்தா மரைமலர்த் திருவினோடும்
ஒக்கப் பிறந்த ஒருபெரு மாதினை உற்றவனே!

ஒட்.—ஓய்! போதும் நிறுத்தும்! சேவகா! இவர்கள் எல்லோரையும் நமது சிறைச் சாலையிற் கொண்டுபோய்ச்

சேர்த்துவிடு. ஓ! போலிப் புலவர்களே! நீங்கள் ஓராண்டினில் அங்கு எம்மால் ஏற்படுத்தப்பெற்றுள்ள ஆசிரியரிடம் நன்கு கற்று வந்து தேற வேண்டும். தேறினால் உங்களுக்குப் பரிசில் தந்து விட்டுவிடுவோம். இன்றேல், மீண்டும் சிறைப்படுத்தி வைப்போம்—போமின்.

(ஏவலாளா! விரைவிற் கொண்டு போ.)

## காட்சி—3

இடம்: சோழன் அரண்மனை.

உரியோர்: சிறையிலிருந்து வெளிவரும் புலவர்கள், குலோத்துங்கன், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர், ஏவலாளர்.

குய.—புலவர்களே! செந்தமிழ்த்தாயின் திருமகனாகிய புகழேந்திப் புலவர் நமது தவப்பயனாலேயே சிறைச்சாலைக்கு வந்திருந்தார் எனல் வேண்டும். பாண்டி நாட்டிலிருந்து சோழ நாட்டிற்கு வந்துகொண்டிருந்த புகழேந்தியாரை, பாவி கூத்தன் வழி மறித்துச் சிறைக்கு அனுப்பினனுமே!

தச்.—ஆம், ஐயா! அவர் எவ்வளவு அன்புடன் நமக்கு நாடோறும் கல்வி பயிற்றி வந்தனர்! நீடு வாழ்வாராக என அவரை வாழ்த்துவதன்றி நாம் அவருக்குச் செய்யக் கிடக்கும் கைம்மாறு யாது?

குய.—ஐயா! அவர்தம் புலமைதான் என்ன புலமை! 'ஒட்டக்கூத்தர் ஒட்டக்கூத்தர்' என உலகம் புகழ்வதெல்லாம் புகழேந்தியாரின் புகழை அறியாததாலேயாகும். அரசர் பவனி வந்த போது இருவர் தகுதியும் வெளிப்பட்டு விட்டதன்றோ!

குரு.—ஐயா! நான் புலவர் பெருமானுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். புறக்கண் இலனேனும், அகக்கண்ணை எனக்குத் திறந்துவிட்ட தெய்வம் புகழேந்தியாரன்றோ! ஐயா! பவனியன்று நடந்த செயல்களை எனக்கு விளக்கமாகச் சொல்லுவீர்களா?

வேளா.—அரசர் பவனி, சிறைச்சாலை வாயிலில் வந்து நின்றது. புகழேந்திப் புலவர், சன்னலின் பக்கத்தில் நின்று-கொண்டிருந்தார். அரசர் பார்த்தார்; 'அங்கு நிற்பார் பாண்டி நாட்டுப் புலவர் தலைவரன்றோ?' என்று கேட்டார். அதற்குப் புலவர்............... நினைவில்லையே! ஒரு பாட்டுக் கூறினர்.

குய.—நான் சொல்லுகிறேன். அது,

மானிற்கு மோஅந்த வாளரி வேங்கைமுன்? வற்றிச்செத்த
கானிற்கு மோஅவ் வெரியுந் தழல்முன்? கனைகடலின்
மீனிற்கு மோஅந்த வெங்கட் சுறாமுனம்? வீசுபனி
தானிற்கு மோஅக் கதிரோ னுதயத்திற் றார்மன்னனே!

என்பதாகும்.

வேளா.—ஆம், ஆம்! நினைவு வந்துவிட்டது. அதுகேட்ட அரசர், புகழேந்தியாரை நோக்கினர். அக்குறிப்பறிந்த புகழேந்தியார், அரசரை நோக்கி, 'அதனை வெட்டிப் பாட-லாமா? அன்றி ஒட்டிப் பாடலாமா?' எனக் கேட்டனர். அவர், 'ஒட்டிப் பாடுக,' என, புகழேந்தியார்,

மானவன்; நான்அந்த வாளரி வேங்கையாம்; வற்றிச்செத்த
கானவன்; நான்அந்த எரியும் தழலாம்; கனைகடலின்
மீனவன்; நானந்த வெங்கட் சுறாவதாம்; வீசுபனி
தானவன்; நானந்தக் கதிரோ னுதயமும் தார்மன்னனே!

என்று பாடினர்.

தச்.—அது கேட்ட அரசர், கதவைத் திறக்கச்செய்து புகழேந்தியாரை வரவேற்று, ஒட்டக்கூத்தரோடு அருகே உட்கார வைத்துக்கொண்டு அரண்மனை ஏகினர். அவ்வளவுதான் அங்கு நடந்தது.

கோல்.—அப்புறம் அரண்மனையில் நடந்த செய்திகள் தெரியீரோ?

குரு.—அவை என்ன? கூறுங்கள்.

கோல்—அரண்மனை செல்வதற்குள் பாண்டி நாட்டிலிருந்து வந்த பணிப்பெண் ஒருத்தி, அரசியாருக்கு நடந்தவெல்லாம் கூறிவிட்டாளாம். அரசியாருக்குக் கோபம் உண்டாகத் தம் அரண்மனை வாயிலை அடைத்துவிடச் செய்தனராம். அதனை அறிந்த அரசர், கூத்தர் புகழேந்தியார் எனும் இருவரோடு சென்றாராம். முதலில் அரசியாரின் கோபத்தைத் தணிக்குமாறு அரசர் வேண்டியவாறு, ஒட்டக்கூத்தர் பாடினாராம். அரசியார் மிகச் சினங்கொண்டு, 'ஒட்டக்கூத்தர் பாட்டிற்கு இரட்டைத் தாழ்' என்றுகூறி, இன்னொரு தாழ் இட்டாராம். அதன்மேல் அரசர் புகழேந்தியாரை வேண்டிக்கொள்ள, அவர் ஒரு பாட்டுக் கூறினாராம். அது கேட்டு மகிழ்ந்த அரசியார் கதவைத் திறக்கச் செய்து எல்லோரையும் வரவேற்றுக்கொண்டனராம். ஒட்டக்கூத்தர், அரசியாரிடம் பொறுத்திட வேண்டிக்கொண்டனராம். புகழேந்தியார் அன்று தொட்டு, அரசவையில் குலோத்துங்கன் வலப்பக்கத்தில் அமர்ந்து விளங்குகின்றனராம்.

ஏவ.—ஐயன்மீர்! அரசரும் அரசியாரும் புலவர்களும் அவைக்கு வருகின்றனர். (வந்தமர்தல்)

அரசன்—புலவர்களே! நீங்கள் கடந்த ஓராண்டில் எக்குறைவுமின்றி இனிது பயின்று வந்தீர்களா?

புல.—ஆம்; ஆம். உமாமகேசரின் அருளால் எங்கட்கு எத்தகைய குறைவுமில்லை. நன்கு பயின்று வந்தோம்.

குயவர்—அரசே! யாம் இப்போது ஒட்டக்கூத்தரை எதிர்த்து முன் நிற்கச் சித்தமாயுளோம்.

ஒட்.—அப்படியா!

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவ னாடா?

குய.—கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
பானை யும்வனை யங்குசப் பையல்யான்.

அரசன்—என்னமிடுக்கான விடை செல்வி! அங்குசப் பையல் என்ற நுண்ணுரையினை நோக்குவாய்!

அரசி—ஆம், ஆம்! குசப்பையல், யானை என்பதற்கேற்ப அங்குசப்பையல், மிக அழகிது!

ஒட்.—ஐயீர்! மாணிக்கப் புலவரே! நீரும் எதிர்த்து முன் நிற்க வந்தவர்தாமோ! அன்றி முன்போலப் பாடி ஓடி ஒளிய வந்தவரோ?

வேளா.—கோக்கண்டு மன்னர் குறைகடற்
புக்கிலர்; கோகநகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா
தொழிந்தில; பூமுழுதும்
காக்கின்ற மன்னன் கவிஒட்டக்
கூத்தநின் கட்டுரையாம்
பார்க்கண் டொளிர்ப்பர்க ளோதமிழ்
பாடிய பாவலரே?

அரசன்—'மன்னன் கவியொட்டக் கூத்த!' என்கின்றார் இப்புலவர். மன்னனது புலவன் என்று பொருள் கூறுவதினும், மன்னனாகிய புலவன் என்று பொருள் கூறிற் சிறந்ததாகும்.

புக.—அரசே! புலவரைப் போற்றும் உமது மாண்பு வியக்கத்தக்கது.

ஒட்.—ஓ, பொட்டையரோ! உமது செய்தி என்ன?
விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலவிலத்துப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குநின் றாய்பொட்டை
யாய்புகல்வாய்!

குரு.—கண்பொட்டை யாயினு மம்பட்ட னன்; கவி
வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயும் திடுக்கிடப் பாடுவனே.

அரசன்.—ஓ, ஓ! இவர் விடை கூத்தரையன்றி யாவரையும் திடுக்கிடச் செய்கின்றதே!

அரசி.—ஆம்; அதனை அவர், 'நீயும் திடுக்கிட' என்றதில் உள்ள உம்மையாற் சொல்லுகின்றாரே!

அரசன்.—ஓ, ஓ! 'நீயும் திடுக்கிட' என்று கூறுகின்றாரே!

ஒட்.—ஐயீர்! திருவேங்கடப் புலவரே! உமது செய்தி என்னையோ?

கோல்.—செல்லன் புதல்வன் திருவேங்
கடவன் செகத்குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொல்லு
வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட
மாட்டிப் பகைவர்முன்னே
அல்லும் பகலும் அடிப்பேன்
கவியிருப் பாணிகொண்டே

ஒட்.—ஐயீர்! போதும் போதும்! உமது கவியைக் குறை கூறுவார் இங்கு யாருமிரார். ஐயீர்! சந்தக் கவிராயரே! உமது செய்தி என்னவோ?

தச்.—சொன்னசந் தக்கவி யாவரும் சொல்லுவர்
சொற்சுவைசேர்
இன்னசந் தக்கவி யேதென்ற போதி
லெதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக் கிழித்திந்த
வாய்ச்சியினல்
கன்னசந் தங்களி னிற்கவி யாப்பைக்
கடாவுவனே,

அரசி.—'கவியாப்பு' என்ற சொல் நயம் வியக்கத்தக்கது.

அரச.—ஆம், ஆம்! இப்புலவர் எல்லோரும் நன்ருகச் செய்யுட்கள் பாடுவதினால், இவர்கள் நன்கு பயின்றுளார்களென்பது தெரிகின்றது.

குய.—எல்லாம் இந்தப் புகழேந்தியார் திருவருளே. இவர் நீடு வாழ்வாராக!

அரச.—அப்படியா? புலவரே! எமது சிறைச்சாலை உமது திருவடியைத் தீண்ட என்ன தவஞ் செய்ததோ! அன்றி, இப்புலவர்கள் தாம் என்ன தவஞ் செய்தனரோ!

அரசி.—அவரைச் சிறைப்படுத்தி இப்புலவர்கள் பாட்டுகளைப் பெற உங்கள் புலவர், ஏன்? நமது புலவர், ஒட்டக் கூத்தர் என்ன தவஞ் செய்தனரோ?

ஒட்.—அரசியீர்! செல்வியாரே! யான் முன்னமே பிழை பொறுத்திட வேண்டினேனே? அன்றியும், அதன் பயனையும் நீங்கள் கூறியது போல இன்று பெற்றுவிட்டேன்! இனி என்னை நாணிடச் செய்தல் வேண்டாவன்றோ?

அரச.—(கூத்தரைப் பார்த்து) நல்லது புலவரே! இப்புலவர்கட்கெல்லாம் தக்க பரிசுகள் தந்தனுப்புங்கள்.

[திரை]

பயிற்சி:

I. விடை எழுதுக:—

1. புகழேந்தியார் யார்? அவர் எந்நாட்டு மன்னரால் ஆதரிக்கப்பட்டு வந்தார்? அவர் எவ்வகைப் பாடல்களை நன்கு பாட வல்லவர்?

2. ஒட்டக்கூத்தர் யார்? அவர் எம்மன்னருடைய சபையில் இருந்தார்? அவருடைய குணங்கள் யாவை?

3. புகழேந்தியாருக்கும் ஒட்டக்கூத்தருக்கும் பகை ஏற்பட்ட காரணம் யாது? அப்பகையைக் கூத்தர் எவ்வாறு தீர்த்துக்கொண்டார்?

4. புகழேந்தியார் சிறைச்சாலையிற் செய்த வேலைகள் யாவை?

II. 1. முதற் காட்சியில் அடங்கியுள்ள கதையை உங்கள் சொந்தச் சொற்களால் எழுதுக.

2. இரண்டாங் காட்சியில் நீங்கள் விரும்பும் விஷயங்கள் எவை? ஏன்?

## இலக்கணம் :

## (2) அல்வழிப்புணர்ச்சி

### தொகை நிலைத்தொடர் (5)

1. விடுசரம் — வினைத்தொகை நிலைத்தொடர்
2. பசும்புல் — பண்புத் ,, ,,
3. கிளிமொழி — உவமத் ,, ,,
4. இராப்பகல் — உம்மைத் ,, ,,
5. பொற்றொடி (வந்தாள்). அன்மொழித் தொகை ,,

### அல்வழிப்புணர்ச்சி—தொகாநிலைத் தொடர் (8)

1. இராமன் உண்டான். — எழுவாய்த் தொடர்
2. சென்றான் வீரன். — வினைமுற்றுத் தொடர்
3. வந்த குதிரை — பெயரெச்சத் தொடர்
4. நடந்து வந்தாள். — வினையெச்சத் தொடர்
5. அண்ணா, வா! — விளித் தொடர்
6. மற்று அவர் — இடைச்சொல் தொடர்
7. நனி பேதை — உரிச்சொல் தொடர்
8. வந்தேன் வந்தேன் — அடுக்குத் தொடர்

அல்வழிப்புணர்ச்சியில் ஐந்து தொகை நிலைத்தொடர்களும் எட்டுத் தொகா நிலைத்தொடர்களும் உண்டு.

# 19. ஆகாய விமானத்தின் வரலாறு

1. பண்டைக்காலத்தில் நமது நாட்டில் புஷ்பக விமானங்கள் இருந்தனவென்று நாம் சங்க நூல்களின் வாயிலாகவும், புராணங்களின் மூலமாகவும் அறிகிறோம். ஆனால், சமீப காலம் வரையில் அதன் உண்மையை எவரும் நம்பவில்லை; எல்லாம் வெறும் பொய்க்கதை என்றே புகன்று வந்தனர். இக்காலத்தில் மனிதன் விமானங்களின் மூலம் ஆகாயத்தில் சஞ்சரிப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இவ்விமானங்கள் இரசாயன விஞ்ஞானக் கலைகளில் வல்லுநரான மேல் நாட்டவரின் ஆராய்ச்சியின் பயன்களேயாம்.

2. கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரோஜர் பேகன் என்பவர், மெல்லிய உலோகத் தகட்டினாற் செய்யப்பட்ட பந்தினுள் அக்கினியாவியை நிரப்பினால் அதன் சக்தி அப்பந்தை மேலே கொண்டு செல்லும் இயல்புடையது என்னும் உண்மையை ஆராய்ந்தறிந்தார். ஆனால் அவர் இச்சக்தியின் மூலம் மனிதன் ஆகாயத்தில் பறந்து செல்லக்கூடும் என்று கூறிய போது அவரை எல்லோரும் ஒரு பித்தன் என்று மதித்துப்பரிகசித்தனர். ஆகவே, அவருடைய முயற்சி பயனற்றதாயிற்று.

3. அதன் பிறகு ஜோஸப் பிளாக்கு என்னும் ஒரு கலாசாலை மாணவர், தாம் இரசாயன சாலையில் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது ஜலவாயுவை ஒரு காகிதக் கூண்டில் அடைத்துவிட, அக்கூண்டு மேலே கிளம்பி அவ்வறையின் கூரையிற் சென்று முட்டியது. அவரும் அதோடு அதை மறந்தார்.

4. 1766ல் ஹென்றி கவென்டிஷ் என்பவர், வாயுக்களைப் பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றைப் பிரசுரித்தார். அந்

நூலின் பிரதியொன்று பிரான்ஸ் தேசத்தவரான ஸ்டீபன், ஜோஸப்பு என்னும் சகோதரர்களுக்கு கிடைத்தது. அவர்கள் அதை ஆழ்ந்து படித்துப் பல புதிய உண்மைகளை அறிந்தார்கள்.



ஒரு நாள் தற்செயலாக அவர்கள் புகை காற்றைவிட இலேசானது என்பதை அறிந்தார்கள். அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்து, 1873ல் புகை நிறைந்த கூண்டொன்றைப் பறக்க விட்டார்கள். அது மேலே கிளம்பிச் சென்றதெனினும், புகை குறைந்த போது கூண்டு கீழே விழுந்துவிடும் தன்மையதாய் இருந்தது. இக்கஷ்டத்தை யகற்ற அவர்கள் கூண்டின் கீழே அனல் தொட்டி யொன்றைக் கட்டிப் பரிசோதனை பார்த்தனர். நெருப்பு அணைந்தவுடனே புகை குறைந்து, கூண்டு கீழே வர நேர்ந்தது.

5. இவர்கட்குப் பிறகு ரோஸியர்ஸ் ஆர்லண்ட்ஸ் என்னும் இருவர் ஒருகூண்டைச் செய்து, அதில் அனல் வாயுவை நிரப்பிக் கூண்டின் கீழே அனல் தொட்டியொன்றையும் அமைத்து, அதற்குக் கீழே தாங்கள் அமர்ந்து செல்வதற்கான ஒரு தொட்டியையும் தொங்கவிட்டுக்கொண்டு, அதில் தாமும் இருந்து கொண்டு, கூண்டைப் பறக்கச் செய்தனர். அவர்கள் ஏறிச் சென்ற கூண்டு மூவாயிரம் அடி உயரம் சென்ற போது தீப்பற்றியதால் கீழே இறங்கிவிட்டது. ஆனால், நற்காலமாக அவர்கள் மரணம் அடையவில்லை. இவ்வாறு பலர் பலவாறு முயன்று சிலர் ஒரு சிறிது வெற்றி பெற்றனர். சிலர் உயிரையே தம்

முயற்சியில் இழந்தனர். மேலே பறந்து செல்லும் கூண்டின் போக்கைத் தங்கள் இஷ்டம்போலத் திருப்பிச் செல்வதற்கான முயற்சியும், கடைசியில் அனல் வாயு ஜல வாயு முதலியவைகள் பயன் அற்றவையாதலின், கூண்டைச் செலுத்த வேறு வகையான சக்தியைக் கண்டு பிடிக்கும் முயற்சியும் நடை பெற்றன.



6. ஸாண்டாஸ்-டுமோண்டு என்பவர் மோட்டார் இயந்திரங்களோடு கூடிய ஒருசிறு விமானத்தை அமைத்தார். அதை அவரே ஏறிச் செலுத்தி உலகம் வியக்குமாறு செய்தார். இதன் பிறகு மேனாட்டார் இந்த இயந்திரத்தைத் திருத்தமான முறையில் அமைப்பதற்கான பல முயற்சிகள் செய்தனர். காற்றாடியும் பறவைகளும் இவர்களுக்கு அநுமானங்களாய் விளங்கின. மாந்தரின் ஆராய்ச்சியின் வன்மையாலும், உற்று நோக்கும் வழக்கத்தாலும், அளவு கடந்த பொறுமையினாலும் ஆகாய விமானங்கள் இறக்கைகளோடு செய்யப்பட்டன.

7. ஆகாய விமானத்தைச் சிறந்த முறையில் அமைத்த பெருமை வில்பர் ரைட்டு, வில்லி ரைட்டு என்ற இரு சகோதரர்கட்கே உரியதென்னலாம். அவர்கள் ஆகாய விமானத்தைப் பற்றி வெளிப்போந்த நூல்கள் யாவையும் நன்கு பயின்று, பொழுதுபோக்குக்காக விமானம் ஒன்றைச் செய்தார்கள்; பரிசோதனைகளின் மூலம் தாங்கள் செய்து வந்த விமானத்திற்

காணப்பட்ட குறைகளை எளிதில் நீக்கி, 1903-ஆம் ஆண்டில் தாங்கள் இயற்றிய இயந்திரத்திலேறிப் பறந்து குதூகலித்தார்கள். மேலும், அவர்கள் அப்போதைக்கப்போது தங்கள் இயந்திரத்தில் கண்ட குறைபாடுகளை நீக்கிக்கொண்டே வந்ததால், அவர்கள் அம்முயற்சியில் வெற்றி பெற்றார்கள்.

8. ஆகாய விமானத்தின் தோற்றத்தையும் அமைப்பையும் சிறிது கவனிப்போம்: ஆகாய விமானம் மிகவும் உயரத்திற் பறந்து செல்லும்போது அது பறவையைப் போலவே காணப்-



படுகிறதல்லவா? அது காற்றில் மிதந்து செல்லவேண்டியதாதலின் அதை இலேசான பொருள்களைக் கொண்டே செய்வது வழக்கம். அதன் இறக்கைகள் சுமார் 15 அடி நீளமும் 7 அடி அகலமும் உடையவையாயிருக்கும். ஆகாய விமானத்தின் நீளம் சுமார் 25 அடிகள் இருக்கலாம். ஒற்றை இறக்கையை உடைய விமானம் ஒற்றைச் சிறகு விமானம் எனப்படும். இரண்டு சிறகுகள் உள்ளது இரட்டைச் சிறகு விமானம் எனப்படும். விமானத்தின் முன்புறம் கைகள் போலக் காணப்படும் பாகத்திற்குச் சுழற்கைகள் என்பது பெயர். அக்கைகளோடு சேர்ந்துதான் விமானத்தை இயக்கும் இயந்திரம் வைக்கப்பட்டிருக்கும். விமானத்தின் கீழ்ப்பாகத்தில் இரண்டு சிறிய சக்கரங்கள் உண்டு.

9. விமான ஓட்டி இயந்திரத்தை இயக்கிய உடனே. விமானத்தின் சுழற்கைகள் வேகமாய்ச் சுழலும். அப்போது விமானம் மேலே கிளம்பும். ஆயினும், அது கிளம்புவதற்கு முன் சிறிது தூரம் அதன்கீழ் அமைந்துள்ள சிறு சக்கரங்களின் உதவியால் வேகமாக ஓடிய பிறகுதான் படிப்படியாக விமானம் மேலே கிளம்பும். விமானம் மேலே கிளம்பியபின் சிறகுகளின் உதவியால் விண்ணில் நிலைபெறும். அதன் பிறகுதான் விமானி இயந்திரத்தை இயக்க ஆரம்பித்து விமானத்தை வேகமாக ஓட்ட ஆரம்பிப்பான். விமானத்தை மேலே செலுத்தவும், கீழே செலுத்தவும் வேண்டியபடியெல்லாம் திருப்பவும் கருவிகள் சில உண்டு. அவையாவும் விமானி அமர்ந்துள்ள இடத்திலேயே வைக்கப்பட்டிருக்கும்.

10. ஆகாய விமானம் சாதாரணமாக மணிக்கு 100 மைல்களுக்குமேல் செல்லும். இக்காலத்தில் மணிக்கு 200 மைல்கள் செல்லக்கூடிய விமானங்கள் உண்டென்று பத்திரிகைகளால் நாம் அறிகிறோம். ஆகாய விமானம் விண்ணில் எவ்வளவு உயரம் வேண்டுமானாலும் செல்லும். ஆனல், விமானிகள் அதை 15000 அடிகளுக்குமேல் உயரத்தில் செலுத்துவதில்லை. இவ்வாறு விமானத்தை மேலே செலுத்திதான் ஹிமாலயத்தின் உன்னத சிகரமான எவரெஷ்டின் தன்மைகள் அறியப்பட்டனவென்பதும், ஆயினும் சிகரத்தின் உச்சிக்குச் செல்ல முடியவில்லை என்பதும் நாம் அறிந்தவைகளே.

11. விமானங்கள் பல வகைப்பட்டவை. சில விமானங்கள் மிகச் சிறியவைகளாகவே இருக்கும். அவற்றில் இரண்டு மூன்று பேர்களுக்குமேல் உட்கார முடியாது. சில விமானங்கள் பெரியவைகளாய் இருக்கும். தரையின்மீதிருந்து ஆகாயத்திற் செல்லும் விமானங்கள் ஒரு வகை. நீரிலிருந்து விண்ணிற் செல்லும் விமானங்கள் ஒரு வகை.

12. இரசாயன விஞ்ஞானக் கலைகளின் பயனாகத் தோன்றி-யுள்ள ஆகாய விமானங்களின் பயன்களைச் சிறிது ஆராய்வோம்: இக்காலத்தில் விமானங்கள் உலகத்தின் பல பாகங்களிலும் சாதாரணமாக உபயோகப்படுகின்றன. இவ்விமானங்கள் தோன்றிய பிறகுகாலத்தின் நீட்சி குறுகிவிட்டதென்னலாம். இங்கிலாந்திலிருந்து நமது நாட்டுக்கு மூன்று தினங்களில் எளிதில் வந்து சேரலாம் என்றும், இக்காலத்தில் தபால் போக்குவரவு இதன் மூலமாகவே நடை பெறுகின்றன என்றும் நீங்கள் அறிவீர்கள் அல்லவா? இது மட்டுமன்றிக் கடலைக் கடக்கவும், மலைகளின் மீது



சென்றுதேசபரிசோதனை செய்யவும், இன்னும் எத்தனையோ நற்காரியங்களுக்கும் ஆகாய விமானங்கள் உதவுகின்றன. ஆயினும், இக்காலத்தில் நாகரிகத்தில் சிறந்து விளங்கும் மாந்தர், ஆகாய விமானத்தை ஆக்க வேலைகளைவிட அழிக்கும் தொழிலுக்கே பெரிதும் பயன்படுத்துவதால், அது மனித சமூகத்திற்கு ஒப்புயர்வற்ற நல்வரமாய் இருத்தற்குப் பதில் தீய சாபப் பிணியாய் இருந்து வருகிறது என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. புகைக்கூண்டே ஆகாய விமானத்தின் தோற்றத்துக்குக் காரணமாய் இருந்தது எப்படி ?

2. முதலில் ஆகாயத்தில் பறந்து சென்றவர் யார் ? எப்படி?

3. ஆகாய விமானத்தின் நன்மை தீமைகள் யாவை ?

II. 1. பொய்க் கதை, விஞ்ஞானக்கலை, பயனற்றது, தற்செயலாக, வெற்றியுற—வாக்கியங்களில் அமைத்தெழுதுக.

2. 11-ஆம் பத்தியில் உள்ள முதல் மூன்று வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாகச் சேர்த்தெழுதுக.

3. கலப்பு வாக்கியத்துக்கு இப்பாடத்திலிருந்து இரண்டு உதாரணங்கள் தருக.

## இலக்கணம் :

### இயல்புப் புணர்ச்சி—விகாரப் புணர்ச்சி

இரண்டு சொற்கள் புணரும்போது எவ்வித மாறுதலுமின்றிப் புணருவது இயல்புப் புணர்ச்சி எனப்படும்.

உதாரணம் :—

அலை பெரிது.
பொன் மலை.

சொற்கள் புணரும்போது இல்லாத எழுத்துத் தோன்றுவதும், நிலைமொழி ஈற்றிலாவது வருமொழி முதலிலாவது உள்ள எழுத்துக்கள் திரிவதும், கெடுவதும் உண்டு. இவ்வித விகாரங்கள் (மாறுதல்கள்) அடைவது விகாரப் புணர்ச்சி எனப்படும்.

உதாரணம் :—

1. மா + காய் = மாங்காய் - (ங்) தோன்றியது.
2. பொன் + குடம் = பொற்குடம் - (ன்) திரிந்தது.
3. மரம் + வேர் = மரவேர் - (ம்) கெட்டது.

பயிற்சி :

கற்பலகை, மடல் பெரிது, பூஞ்சோலை, புறநகர், புட்கொடி, நல்ல வெல்லம், வேலை தந்தார்—இவற்றுள் ஒவ்வொன்றும் இன்ன புணர்ச்சி என்பதைக் கூறுக.

---

## 20. இராவணனும் அனுமானும்

[இராகம்—செஞ்சுருட்டி ; தாளம்—ஆதி]

பல்லவி

இராவணன் :—

ஆரடா குரங்கே! இங்கே வந்தநீ ஆரடா குரங்கே!

அநுபல்லவி

ஆரடா குரங்கே! அறிவாயோ லங்கை
வார சிங்காசனம்போல் வால்இட் டென்னிலும்
மேலிட்டிருக்கிறாய்!

சரணங்கள்

1. அச்சம்இல்லாமல் அடங்கிச்சொல்லாமல்
நிச்சயவனகிங்கரர் நிறுத்தநில்லாமல்
நிசாசரர்களும் அசோகவனமும்
திசாதிசையில்விழ வீசியெறிந்தநீ—ஆரடா!

2. கம்பத்தின்மேலே காலனைப்போலே
சம்புமாலியையும்சேனாதிபதியையும் கொன்றொருக்காலே
சிட்சை செய்வேனென்று கட்சி உடனே தந்த
அட்சதனைக்கூடப் பட்சணம்செய்தநீ—ஆரடா!

3. நிந்தனைசிச்சி நீஒரு பூச்சி
இந்திரசித்தன் உன்னோடே எதிர்த்ததென்கண்காட்சி
இடிக்கவோ, கட்டி அடிக்கவோ, பல்லால்
கடிக்கவோ, ரத்தம் குடிக்கவோ, நீ—ஆரடா!
4. மறைந்தொருகர்மம் வருத்தஉன்மர்மம்
அறிந்தல்லோகொல்ல வேணும் அதற்குமுன்கொல்லதர்மம்
அல்லடாநெஞ்சு கல்லடாநிசம்
சொல்லடாஅடே சொல்லடாநீ—ஆரடா!

அனுமான் :—

விருத்தம்

அடல்இரா வணன் இந்த வார்த்தை சொல்ல,
'அரன் அயன்மால் விடுக்க வந்தேன் அல்ல கண்டாய்;
மடமயில்சீ தையைத்தேடி வந்தேன் கண்டாய்;
வந்திடத்தில் உனைக்காண வேண்டி உன்ஊர்
இடமுடைய அசோகவனம் அழித்தேன் கண்டாய்;
இராகவன்தூ துவன்நானே; நீபி ழைக்கக்
கெடல்அரிய புத்திகேள் கண்டா' என்றே
கிளம்புவான் அனுமன்எதிர் விளம்பு வானே.

[இராகம்—மோகனம்; தாளம்—சாப்பு]

பல்லவி

இராமசாமி தூதன் நான் அடா அடடா ராவணா!
நானடா என்பேர் அனுமான் அடா

அநுபல்லவி

மாமலர்த் தலவாசனும் கயிலாசனும் ரிஷிகேசனும்
மறைந்து நின்று தந்தான் அல்லடா!
புறம்பே நின்று வந்தான் அல்லடா!

சரணங்கள்

1. கொடுத்த வரமும் தனமும் கனமும்
வீணி லேஏன் போக்கிறாய்!
குடிக்கும் பாலை ஐயை யோகமர்
வெடிக்கு ளேஏன் வார்க்கிறாய்!
துடுக்கு டன்பர ஸ்திரீஜ னங்களைத்
தொடர்ந் தேன்பழி ஏற்கிறாய்!
தூக்கி எறவிட் டேணியை வாங்கும்
தூர்த்தர் வார்த்தையைக் கேட்கிறாய்!
தடைப டாமல்என் ஐயன்கால் மீதே
சரண்என் றுல்தலைப் பாய்இப் போதே;
அடக்க உன்தரம் அல்லடா சீதை
அவள்இ வண்விட வந்தேன்என் றோதே— (ராம)

* * *

2. கீதத் திருத்தும் வேதத் தெரித்தும்
பாத கங்களைச் சூழ்கிறாய்!
கெடுமதி கண்ணுக்குத் தோன்றாமல்
படுநரகத்தில் மூழ்கிறாய்!
மாதர் மோகத் தாலே துவண்டு
தாழா தவரைத் தாழ்கிறாய்!
மயக்கமோ கைக்குள் விளக்கைப் பிடித்துக்
கிணற்றில் ஏன் வீழ்கிறாய்!
ஆதி மூர்த்தி தானே உத்தண்ட
மாக வந்தான் அரக்க ரைமண்ட
சீதையை விட்டுப் பிழைஅ டாகண்ட
சேதியைச் சொன்னேன் வீர கோதண்ட—(ராம)

பயிற்சி:

1. இராவணன் கூறிய பாடலில் அடங்கி உள்ள விஷயத்தை உங்கள் சொந்த வார்த்தைகளால் எழுதுக.

2. இப்பாட்டின் முதல் சரணத்தை ஒரே வாக்கியமாகவும் பல வாக்கியங்களாகவும் அமைத்து எழுதுக.

3. இராவணனுக்கு அனுமார் கூறிய விடை யாது?

---

## 21. டேவிட் லிவிங்ஸ்டன்

1. பூமியின்மீதுள்ள நிலப் பகுதிகளில் மிகப் பெரியது ஆசியா. அதற்கு அடுத்தபடியாக உள்ளது ஆப்பிரிக்காக் கண்டம். இக்கண்டம் பழைய உலகத்தில் உள்ளது. ஆயினும், இதைச் சமீப காலம் வரையில் முற்றிலும் அறிந்துகொள்வது மனிதர்க்கு அசாத்தியமாய் இருந்தது. ஆனால் இக்கண்டத்தின் உள் நாட்டின் தன்மை இத்தன்மைத்து என்று கண்டறிந்து உலகத்திற்குத் தெரிவித்த பெருமை, சில தேசப் பரிசோதகர்கட்கு உரியது. அவர்கள் தங்கள் முயற்சியில் அடைந்த துன்பங்களை அளவிட முடியாது. டேவிட் லிவிங்ஸ்டன் என்பவர் அவர்களில் ஒருவர். இவர் இக்கண்டத்தின் உள்நாட்டிற் பல பாகங்களைப் பரிசோதித்தறிந்தவர். இவர் தாம் கண்ட விஷயங்களையும், தாம் அனுபவித்த இடுக்கண்களையும் தாமே எழுதி வைத்துள்ளார், அவற்றில் ஒரு சிறு நிகழ்ச்சியைப் பற்றிப் படிப்போம்:

2. நாங்கள் சோபு (Chobe) என்னும் நதியின் அருகில் வசித்து வந்த சுதேசிகளின் தலைவனுடைய விருந்தாட்களாகச் சில நாட்கள் இருந்த பின்னர், 1853-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் நாள் சோபு நதியில் தோணியிற் புறப்பட்டோம். இந்நதி ஜாம்பஸி நதியின் உபநதிகளில் ஒன்று. நாங்கள் புறப்-

படுத் தருணத்தில் எல்லாம் ஒழுங்காய் இருக்கின்றனவா என்று அறியத் தலைவன் அங்கு வந்தான். அவன் தன்னுடைய சிறு படகையும் எனக்குத் தந்தான். அது நான் இதற்கு முன் உபயோகித்தவைகளைவிடச் சற்றுப் பெரியதாய் இருந்தது.

3. சோபு நதியில் ஹிப்போ என்னும் நீர் யானைகள் நூற்றுக்கணக்கில் கூட்டம் கூட்டமாய் வசிக்கும். அவற்றிற்குப் பிறரால் தொந்தரவு நேராதிருந்தால், அவை ஒன்றும் செய்வ-தில்லை. ஆயினும், நீர் யானைகளால் தங்கள் கூட்டத்தினின்-றும் அகற்றப்பட்ட சில ஆண் நீர் யானைகள் மட்டும் அபாயம் விளைக்கும் தன்மை உடையவை. அவை நதியிற் செல்வோர் எவ்விதத் துன்பமும் தாராத காலத்தும் அவர்களுடைய படகைத்



தாக்கிக் கவிழ்த்து இன்புறும் இயல்புடையவை. பொதுவாக நீர் யானையின் கூட்டம் பகலில் நதியின் இடையிலும், இரவில் கரையோரத்திலும் இருக்கும் வழக்கமுடையவையாதலால், நதியின் மூலம் பிரயாணம் செய்பவர்கள் தங்கள் படகைப் பகலில் கரையோரத்திலும் இரவில் ஆற்றின் மத்தியிலும் செலுத்தி அவைகளிடமிருந்து தப்புவார்கள்.

4. என்னுடன் இருந்த சுதேசிகள் ஒருக்கால் எங்கள் படகை நீர் யானை தாக்க நேர்ந்தால், படகு உடைந்த உடனே எல்லோரும் தண்ணீருக்குள் முழுகி அங்கேயே சிறிது நேரம் மூச்சை அடக்கிக்கொண்டு இருந்து பிறகு மேலே வருவதுதான் உசிதமென்று கூறினர்கள். நீர் யானை படகை உடைத்துக் கவிழ்த்த பின்னர் நீர் மட்டத்திற்கு மேல் காணப்படும் மனிதர்களைத் தாக்கச் சில நிமிஷங்கள் தேடிவிட்டு ஒருவரும் கிடைக்காவிடில் அவ்விடத்தை விட்டு அகன்றுவிடும் குணம் உடையவைகளாதலின், நீர் யானையால் தாக்கப்பட்ட மனிதர்கள் நீர்க்குள் முழுக வேண்டுமென்றார்கள் அச்சுதேசிகள்.

5. சாதாரணமாக நீர் யானைகள் நீரில் "மூழ்கியுள்ளபோது" அவற்றின் தொகை என்னவென்று கண்டு சொல்ல இயலாது. அவை மூச்சுவிட வெளியே வரும்போதுதான் அவற்றை அறிந்துகொள்ள முடியும். நீர் யானையின் குட்டிகள் சிறியவைகளாய் இருக்கும்போது தங்கள் தாய் யானைகளின் முதுகுகளில் அமர்ந்திருக்கும். இக்குட்டிகள் நீண்ட நேரம் நீர்க்குள் இருக்க முடியாதாதலின், இவற்றைத் தாங்கி நிற்கும் தாய் யானைகள் மூச்சு விடுவதற்கு அடிக்கடி வெளியே வரும்.

6. நீர் யானைகளைத் தவிர இந்நதியில் முதலைகளும் அதிகம். அவை ஹிப்போக்களைவிட அதிக அபாயகரமானவையுமாம். ஆண்டுதோறும் பல சிறுவர்களும், அனேக கன்றுக்குட்டிகளும் இந்த ஆற்றிற் காணமற் போவது வழக்கமாம். சிறுவர்கள் தண்ணீரில் குளிக்கச் செல்லும்போதும், கன்றுகள் நீர் குடிக்கச் செல்லும்போதும் முதலைகள் கரையில் தங்கியிருந்து அவர்களை இழுத்துச் சென்றுவிடுமாம். முதலை முதலில் தன் வாலால் மனிதனையோ அல்லது மாட்டையோ பலமாகத் தாக்கித் தண்ணீரில் மூழ்கச் செய்து பின் இழுத்துச் செல்லும் வழக்கம் உடையதாம்.

7. ஒரு நாள் ஒரு சுதேசி ஒரு முதலையால் பிடிக்கப்பட்ட-போது அவன் அதனிடம் தப்பிவந்த விதத்தைக் காண மிகவும் ஆச்சரியமாய் இருந்தது. முதலை அவனுடைய தொடையைப் பற்றி இழுத்துச் சென்றபோது தரைமட்டம் செல்லும்வரையில் அவன் வாளா இருந்து, பிறகு தன் கையில் இருந்த கூரிய 'பிச்சுவா' என்னும் கத்தியால் அதன் கழுத்தின் அருகில் பல-மாகக் குத்தியபோது, அம்முதலை நோய் தாள முடியாமல் அவனை விட, அவன் தொடையில் பலத்த காயத்தோடு மேலே கிளம்பி வந்து உயிர் தப்பினான் என்பது கேட்க நீங்கள் ஆச்சரிய முறுகின்றீர்கள். அல்லவா?

பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. டேவிட் லிவிங்ஸ்டன் என்பவர் யார்? அவர் செய்த அரிய காரியங்கள் யாவை?

2. சோபு நதி எங்குள்ளது? அதிற் காணப்படும் மிரு-கங்கள் யாவை?

3. ஹிப்போ என்னும் மிருகத்தின் குணங்களைப்பற்றி ஒரு பத்தி எழுதுக.

4. முதலைகளிடம் சுதேசிகள் அகப்பட்டுக்கொண்டால், அவர்கள் எவ்வாறு உயிர் தப்புவார்கள்?

II. 1. நிலப்பகுதி, சமீபகாலம், கண்டறிந்து, சோதித்தறிந்-தார், விருந்தாட்கள்—இவைகளைப் பிரித்தெழுதுக.

2. புறப்படும் + தருணம் =
நூறு + கணக்கு =
இயல்பு + உடையவை =
வேண்டும் + என்றனர் =
ஆறு + மணல் =

இவற்றைச் சேர்த்து எழுதுக.

3. முதற்பத்தியில் உள்ள முதல் மூன்று வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.

## இலக்கணம் :

### புணர்ச்சி

### உயிர் முன் உயிர்

I. இ, ஈ, ஐ ஆகிய மூன்று உயிர்களுக்குப் பின் வருமொழி முதலில் உயிர் வந்தால், நடுவில் யகர மெய் தோன்றும்.

உதாரணம் :—

1. கனி + உதிர்ந்தது = கனி + ய் + உதிர்ந்தது— கனியுதிர்ந்தது—ய்
2. தீ + அவிந்தது = தீ + ய் + அவிந்தது— தீயவிந்தது—ய்
3. பனை + ஓலை = பனை + ய் + ஓலை — பனையோலை—ய்

II. அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஏழு உயிர்களுக்கு முன் வருமொழி முதலில் உயிர் வந்தால் நடுவில் வகரமெய் தோன்றும்.

உதாரணம் :—

1. பல + அணி = பல + வ் + அணி = பலவணி—வ்
2. பூ + அழகு = பூ + வ் + அழகு = பூவழகு—வ்
3. கோ + இளையன் = கோ + வ் + இளையன் = கோவிளையன்—வ்

III. 'ஏ' என்னும் உயிர் எழுத்துக்குப் பின் வருமொழி முதலில் உயிர் வந்தால், நடுவில் யகரமும், வகரமும் தோன்றும்.

உதாரணம் : —

1. ஒரே + அடி = ஒரேயடி
2. தே + ஆரம் = தேவாரம்

## 22. சீவகன்

1. ஆதி காலத்தில் நமது இந்தியாவில் ஏமாங்கதம் என்-றொரு நாடிருந்தது. அதன் தலைநகரம் இராசமாபுரம் ஆகும். குரு குலத்தில் வந்த சச்சந்தன் என்னும் அரசன் அந்நாட்டை ஆண்டு வந்தான். அவன் தன் மாமன் சீதத்தன் மகளாகிய அழகிலும் குணத்திலும் மிக்க விசயை என்பவளை மணந்து, அவளுடன் இனிது வாழ்ந்து வந்தான். விசயை பேரெழில் வாய்ந்திருந்தமையால், அவளோடு சதா இருப்பதையே சச்சந்-தன் பெரிதும் விரும்பினன். எனவே, சச்சந்தன் கட்டியங்காரன் என்ற மந்திரி ஒருவனை அழைத்து அரசை அவனிடம் தந்தான்; சில காலம் தனக்குப் பதிலாக நாட்டை ஆண்டு வருமாறு அவனுக்குக் கட்டளை இட்டான். இதனை மற்ற அமைச்சர்கள் தடுத்தார்கள்; இதனல், பின்னல் அரசனுக்கு ஏதம் விளையும் என எடுத்துக் கூறினர்கள். ஆனல், இம்மொழிகளுள் ஒன்றும் சச்சந்தன் காதில் ஏறவில்லை.

2. சச்சந்தன் விசயையுடன் அந்தப்புரத்திலேயே வசித்து வந்தான். கொஞ்ச நாளில் விசயை வயிறு வாய்த்தாள். இந்-நிலையில் அரசியலை நடத்தி வந்த கட்டியங்காரன், சச்சந்தனைக் கொன்று தான் அரசனுக விரும்பினன்; படைகளையெல்லாம் தன் பக்கம் திருப்பிக்கொண்டான்; பின்னர் ஒரு நாள் பெரிய சேனை-யுடன் சென்று சச்சந்தனிருந்த அந்தப்புரத்தைச் சூழ்ந்து வளைத்துக்கொண்டான். கட்டியங்காரன் தன்னைத் தாக்க-வெண்ணி வந்திருப்பதனை வாயில் காப்போன் வாயிலாகச் சச்-சந்தன் அறிந்து கவலை கொண்டான். அவனுக்குச் செய்வதின்ன தென்று தெரியவில்லை; கருப்பமுற்றுள்ள தன் மனைவியாவது தப்பிச் சென்று கருவுயிர்த்து இனிது வாழட்டும் என்று கருதி-

ஞன்; எனவே, தான் முன்னரே செய்து வைத்திருந்த விண்ணூடு பறந்து செல்லக் கூடிய ஒரு மயிற்பொறியில் விசயையை இருத்தினுன்; அவளுக்குப் பல தேறுதல் மொழிகள் இயம்பினுன்; தப்பிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டான். விசயை முதலில் மறுத்தாளாயினும், பின்னர்ச் சச்சந்தன் வேண்டுகோளுக்கிணங்கி மயிற்பொறியை முடுக்கி, ஆகாயத்தின் ஊடே செல்லலானுள்.

3. பின்னர், சச்சந்தன், போர்க்கோலம் பூண்டு கையிற்படை ஏந்தி, வெளி வந்தான்; கட்டியங்காரனுடன் வீரமுடன் பொருதான்; ஆயினும், முடிவில் கட்டியங்காரனுல் கொல்லப்பட்டான். உடனே கட்டியங்காரன் வெற்றி முரசு கொட்டலானுன். இம்முரசொலியை மயிற்பொறியிற் சென்று கொண்டிருந்த விசயை கேட்டாள்; தன் கணவன் இறந்தான் என்பதறிந்து மயங்கி அப்பொறியை முடுக்கி மேலே செலுத்தமாட்டாதவளாயினுள். எனவே, அம்மயிற்பொறி மெதுவாகப் பூமியில் வந்திறங்கியது. அப்பொறி இறங்கிய இடம் ஒரு சுடுகாடாகும். விசயை அவ்விடத்திலேயே ஓர் ஆண் மகவை ஈன்ருள். அம்மகவு மிகவும் அழகு வாய்ந்ததாயிருந்தது. அம்மகவை நோக்கிய விசயை வருத்த முற்று, "அரசே, நின் தந்தை பல சிறப்புக்கள் செய்யப் பிறக்க வேண்டிய நீ, இவ்விடத்திலா பிறக்க வேண்டும்! நீ கிடக்கின்ற இடமோ, பகைவனுடைய இடமாகும். நினது பாயலோ, சுடுகாடாகும். யானே, நின்னையன்றி வேறு துணையின்றித் தமியளாயிருக்கின்றேன். நின்னை எங்காவது கொண்டு போகலாமென்ருலோ, மிக்க இருளாயிருக்கின்றது. இனி உன்னை யான் எவ்வாறு வளர்ப்பது என்பது தெரியவில்லை. நான் ஏன் உயிரோடிருந்தேன்! நின் தந்தையுடனேயே மாண்டிருக்கலாகாதா!" என்று கூறி விம்மி அழுதாள்; பின்னர் மேலும் மகனை நோக்கி, "சிந்தாமணியே, நான் எவ்வளவு கேட்டும் ஒன்றும் உரையாதிருக்கின்ருயே! யான் செய்த தவறென்ன?" என்று கூறிப் பின்னும் அரற்றி அழுதாள்.

4. இந்நிலையில் விசயை நிலையைக் கண்டு இரங்கி இடுகாட்டில் வாழும் தெய்வதம் ஒன்று. விசயையின் தோழியான சண்பகமாலை என்ற கூனியின் வடிவங்கொண்டு விசயை முன் தோன்றி, அவளைத் தேற்றியது, தேற்றி, "அம்மா, இவன் உலகத்தை ஆளுவான்; கட்டியங்காரனைக் கொல்லுவான்; எனவே, இவனை ஒருவன் வந்து எடுத்துச் செல்லுவான்; நாம் சற்றுவிலகி நிற்போம்," என்றுகூறியது. விசயையும் அதற்கு ஒருப்பட்டாள். பிறகு அக்கூனி விசயை கையிலிருந்த அரசன் பெயர் பொறித்த கணையாழியை வாங்கி அம்மகவிற்கு அணிந்து, அம்மகவை ஓரிடத்திலே கிடத்திவிட்டு, விசயையை அழைத்துச் சென்று, ஒரு மறைவிடத்தே ஒதுங்கி நின்றாள்.

5. அச்சமயத்தில் கந்துக்கடன் என்பானொருவணிகன், இறந்த தனது ஓரே ஆண் மகவை இடுகாட்டிற் புதைப்பான் வேண்டி எடுத்துக்கொண்டு இவர்களிருந்த நன்காட்டை வந்தடைந்தான். வந்தவன் அங்கோர் அழகிய குழந்தை கிடப்பதைப் பார்த்தான்; அதன் கையில் அரச முத்திரையிட்ட ஆழி இருப்பதையும் கண்டான்; களிப்பு மிகக்கொண்டான்; தன் கையிலிருந்த பிள்ளையை அங்கே ஓரிடத்தில் புதைத்தான்: நாநா பக்கங்களிலும் சுற்றிப்பார்த்தான்; தன்னை யாரும் பார்க்கவில்லை என்று நினைத்துக்கொண்டான்; அக்குழந்தை கையிலிருந்த மோதிரத்தை எடுத்துத் தனது இடுப்பில் செருகிக்கொண்டான்; குழந்தையைக் கையில் தூக்கினான். அப்பொழுது குழந்தை தும்மிற்று. உடனே 'சீவ' என்ற ஒரு தெய்வ ஒலி கேட்டது. கந்துக்கடன் குழந்தையை யாருக்கும் தெரியாது மறைத்து எடுத்துக்கொண்டு, நேரே தனது மனைக்குச் சென்றான்; தன் மனையாளாகிய சுநந்தையிடம், தம்முடைய குழந்தை இறக்கவில்லை என்றும், பிழைத்துக்கொண்டது என்றும் கூறி அக்குழந்தையைக் கொடுத்தான். அவளும், கண்ணை இழந்தவன் மீண்டும் பெற்றதேபோல ஆர்வத்துடன் வாங்கி மார்போடணைத்-

துப் பாலூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வரலானாள். பிறகு சுநந்தை நந்தட்டன் என்றொரு மகனையும் பெற்றாள். கண்டெடுத்த குழந்தைக்கு வயது ஐந்தாயது. இடுகாட்டில் இவனைத் தூக்கும்போது ஒரு தெய்வம் 'சீவ' என்று வாழ்த்தியதால், சீவகன் என்றபெயரையே கந்துக்கடன் குழைந்தைக்கு இட்டான்.

6. இனி, மயானத்திலிருந்த விசயை தோழியாய் வந்த தெய்வத்துடன் தண்டகாரணியம் என்னும் இடத்திற்குச் சென்று, தவவேடம் பூண்டாள்; தன் மகன் ஆக்கம்பெறவேண்டி நோன்பியற்றி வந்தாள். இஃதிங்ஙனமாக, சீவகன் தன் தம்பியாகிய நந்தட்டனோடும், தோழர்களோடும் கூடி வளர்ந்து, தக்க வயதில் கல்வி கற்றான். அச்சணந்தி என்ற ஆசிரியர், சீவகனுக்கு வில்வித்தை முதலியவைகளைக் கற்றுக்கொடுக்க, சீவகனும் அக்கலைகளில் வல்லவனாகித் தக்க பருவமடைந்தான். இவனது புத்தி நுட்பத்தைக் கண்ட ஆசிரியரும் இவனுக்கு வேண்டிய மற்றக் கல்விகளையும் கற்பித்தார்; பின்னர், சீவகனைத் தனியே அழைத்துச் சென்று, அவன் பிறந்த வரலாற்றையும், அவன் தந்தை கட்டியங்காரனால் கொல்லப்பட்டதையும் கூறினார். உடனே சீற்றமுற்ற சீவகன், "நான் இப்பொழுதே சென்று கட்டியங்காரனைக் கொன்று வருகின்றேன்," என்று புறப்பட்டான். ஆனால், ஆசிரியர் சீவகனைத் தடுத்து, "பதற வேண்டா; காலம் வரும்; இன்னும் ஓராண்டு பொறுத்திருப்பாய்; பின்னர் உன் எண்ணம் நிறைவேறும்; அதற்கு முன் நீ யாரென்பதை வெளியே காட்டிக்கொள்ளாதே!" என்று கூறி, அறிவு புகட்டிவிட்டுச் சீவகனிடம் விடை பெற்றுச் சென்றுவிட்டார்.

7. சில நாட்கள் செல்ல, அரசனுடைய பசுக்களைச் சில வேடர் கவர்ந்து சென்றனர். இடையர்களால் நிரையை வேடர்களிடமிருந்து மீட்டுவர முடியவில்லை. உடனே ஆயர்கோன், "நிரையை மீட்டு வருபவர்க்கு என் அழகிய மகளாகிய

கோவிந்தையைமணம் புரிவிப்பேன்," என்று பறை சாற்றினான். பலர் முயன்றும்நிரையை மீட்க இயலவில்லை. இதையறிந்த சீவகன், தான்மீட்டு வருவதாக வஞ்சினம் கூறிச் சென்று, வேடர்களை வென்று,நிரையை மீட்டு வந்தான்; ஆயினும் கோவிந்தையைத் தான்மணக்காது, தன் தோழனாகிய பதுமுகனுக்கு மணம் செய்வித்தான்.

8. பின்னர்ச் சீவகன் பல வீரச் செயல்கள் புரிந்து, காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்னும் எட்டு மங்கையரை மணந்தான்; பின்னர்த் தன் மாமனை கோவிந்தன் உதவிகொண்டு கட்டியங்காரன்மேற் படையெடுத்துச் சென்றான்; போரில் கட்டியங்காரனை வெட்டி வீழ்த்தி வாகை மாலை சூடினான்; பின்னர் முடி சூட்டிக்கொண்டு நாட்டை ஆண்டான்; இளமையில் தன்னை வளர்த்த கந்துக்கடனுக்கு அரசுரிமையும் சுநந்தைக்குத் தேவி பட்டமும் அளித்தான்; மற்றவர்கட்கும் பல பரிசுகள் வழங்கினான்.

9. நாட்கள் பல செல்ல, சீவகன் மனைவியர் எண்மரும் எட்டுக் குழந்தைகளைப் பெற்றனர். சீவகன் முதற் குழந்தைக்குத் தன் தந்தை பெயராகிய சச்சந்தன் என்ற பெயரையிட்டு வளர்த்து, அவனுக்கே இளவரசு பட்டத்தையும் நல்கினான். ஒரு நாள் சீவகன் பூங்காவில் தன் மனைவிகளுடன் உலாவிக்கொண்டிருந்தான். அக்காலையில் ஒரு கடுவன் தனது காதல் மந்தியை மகிழ்விக்கக் கருதி ஒரு பலாப்பழத்தைப் பறித்துச் சுளையை எடுத்து மந்திக்கு ஊட்டியது. இதைப்பார்த்த சோலை காப்பானொருவன் ஓடிவந்து கடுவனை விரட்டிவிட்டு, அதன் கையிலிருந்த பலாப்பழத்தை எடுத்துச் சென்றான். இவையனைத்தையும் வேறொரு பக்கத்தே தன் மனைவியருடன் உலவிக்கொண்டிருந்த சீவகன் பார்த்து, உடனே வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டான். "கைப்பழம் இழந்த கடுவன் அரசை இழந்த கட்டியங்காரனை ஒத்தது; அச்சோலைக் காவலனே, கட்டியங்-

காரனைக் கொன்று அரசைக் கைப்பற்றிய என்னையொத்தான்; எனவே, வலியான் கையிலே செல்வம் இருக்கிறது. இச்செல்வத்தால் என்பயன்"? என எண்ணினன்.

10. மறு நாளே சீவகன் தன் முதல் மைந்தனாகிய சச்சந்தனுக்கு முடி சூட்டினன்; தன்னைப் பிரிய மறுத்த தேவியர் எண்மரையும் மகளிர் தவப்பள்ளியிலே சேர்த்தான்; தான் துறவு பூண்டு கானகம் சென்று கடுந்தவமியற்றினன்; கடைசியில் வீடடைந்து இன்புற்றான்?

## பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. ஏமாங்கத நாட்டையாண்ட மன்னன் யார்? அவன் என் தன் இராச்சிய காரியங்களைக் கட்டியங்காரனிடம் ஒப்படைத்தான்?

2. சச்சந்தன் விசயையை மயிற்பொறியின் மீது ஏற்றியனுப்ப நேர்ந்த காரணம் என்ன?

3. விசயை எவ்விடத்தில் மகவை ஈன்றாள்? அவள் முன் தோன்றி அவளைத் தேற்றியவள் யார்?

4. அக்குழந்தையை எடுத்துச் சென்றவன் யார்?

5. சீவகன் தன் பிறப்பை எவ்வாறு அறிந்துகொண்டான்?

6. கோவிந்தையைப் பதுமுகன் எவ்வாறு மணந்தான்?

7. சீவகனால் மணக்கப்பெற்றவர் யாவர்?

8. சீவகன் வாழ்க்கையில் வெறுப்புற்ற காரணம் யாது?

II. 1. ஏதம், வயிறு வாய்த்தாள், ஆகாயத்தினூடே, முரசொலி-இவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுதுக.

2. கொட்டல் + ஆனன் =
அ + பொறி =
பகைவன் + உடைய =
வடிவம் + கொண்டு =

இவற்றைச் சேர்த்தெழுதுக.

3. முதற்பத்தியில் உள்ள முதல் மூன்று வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக எழுதுக.

## இலக்கணம் :

### புணர்ச்சி

குற்றியலுகரத்துக்குப் பின் உயிர் வந்தால், அவ்வுகரம் தான் ஏறிய மெய் விட்டு ஓடும்; யகரம் வந்தால், அஃது இகரமாகத் திரியும்.

உதாரணம் :—

(1) வரகு + அறுத்தான் = வர(க்) + அறுத்தான் = வரகறுத்தான். (வரகு என்ற சொல்லின் ஈற்றில் உள்ள 'கு' என்னும் எழுத்திலிருந்த உகரம் கெட 'க்' நின்றது.)

(2) காகு + யாது = காகியாது ?

25 OCT 1944
MADRAS

## 23. எவரெஷ்டு சிகரம் அடைய முயற்சி

"உலகி லெங்கணும் உயரிய வரைகளின் ஓங்கி
அலகி லாவளம் உடையதாய், அழகியதாய், அற்வோர்
நிலவ நின்றதாய், நீடிய நெறியதாய், நிலையாய்
இலகு பற்பல வளத்ததாய் எழிலுறும் இமயம்."
"வெய்ய வன்கதிர் வீசினும் விலகிடா ஒன்றும்
துய்ய தண்பனிப் படைகொடு துலங்குற விளங்கும்
செய்ய வானளாஞ் சிகரிகள் பலப்பல சிறப்ப
ஸ்மய ளாவிய வுடலது மால்வரை இமயம்."

என்று இமய மலைகளையும் அவற்றின் சிகரங்களையும் ஆன்றோர் புகழ்ந்து கூறியுள்ளதற்குக் காரணம் என்னை? உலகில் உயர்ந்தவை இமய மலைகளே. எவரேஷ்டு என்பதும் அவற்றின் சிகரங்களில் மிகவும் உன்னதமானது. அதன் உயரம் சுமார் 29,000 அடிகள் என்பர். ஹிமாலயம் அதன் பெயருக்கேற்பப் பனிப்படலங்கள் படிந்து காணப்படும். அதன் உயர்ந்த பாகங்களை அடைவது எளிதன்று.

2. ஆயினும், எவரெஷ்டு சிகரத்தின்மீது ஏறப் பலர் பல முறை முயற்சி செய்து முடியாமற் போயிற்றென்பதும், இம்முயற்சியில் பலர் உயிரிழந்தனர் என்பதும் நாம் பத்திரிகைகளின் வாயிலாக அறிந்துள்ளோமன்றோ! ஏன் அவர்கள் உபயோகம் அற்ற இம்முயற்சியில் ஈடுபடவேண்டும்? உயிரையும் இழக்க வேண்டும்? இதற்குக் காரணங்கள் பல: சிலர் மலையேறுவதனால் ஏற்படும் அபாயங்களில் ஆசை கொண்டவர்களாதலாலும், சிலர் எவரும் கண்டறியாத புதிய இடங்களைக் கண்டு அவற்றின் தேசபடங்களைத் தயாரிக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்தாலும், சிலர் எவரும் செய்யாத அரிய காரியத்தைச் செய்து முடிப்பதால் தோன்றும் புகழை விரும்பியும் இம்முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

வட துருவமும் தென் துருவமும் மக்களால் பரிசோதிக்கப்பட்டு-விட்டன. மக்கள் நுழையமுடியாத அடர்ந்த அடவிகள் நிறைந்த ஆப்பிரிக்காவின் ஒவ்வொரு பாகமும் பரிசோதிக்கப் பட்டு-விட்டது. உலகத்தில் எவரெஷ்டு சிகரத்தின் உன்னத பாகம் தவிர, மற்ற மூலை முடுக்குகள்கூட மக்கள் நடமாட்டமுள்ளவை களாகி விட்டன. ஆனால், எவரெஷ்டு ஒன்று மட்டுமே மனித-னுடைய முயற்சியைப் பயனற்றதாக்கி வருகிறது. தன்னால்



எவரெஷ்டு சிகரம்

எதையும்சாதிக்கக் கூடும் என்ற எண்ணம் வேர் ஊன்றிய மனத்தினனாகியமனிதன் இம்முயற்சியிலும் வெற்றி பெறும் வரையில் அமைவுறுனன்றோ ?

3. இம்மலைகளின் மீது ஏற முயலுவோர், வழிகாட்டிகளுட-னும் மூட்டைகளைச் சுமந்து செல்லக் கோவேறு கழுதைகளுட-னும், கூலியாட்களுடனும் புறப்படுவது வழக்கம். மலையின்மீது ஏறிச்செல்லும்போது இவர்கள் பலவகையான இடுக்கண்களுக்கு உள்ளாவார்கள். இதனால் சிலர் இறப்பதும் உண்டு. முதன்-முதலாக 1923ல் ஒரு கூட்டத்தார் எவரெஷ்டை ஏறி அடையும் முயற்சியை மேற்கொண்டனர். அவர்கள் முயற்சி பயனற்ற-தாயிற்று.

4. மற்றொரு கூட்டத்தார் 1924ல் எவரெஸ்டின் சிகரத்தைக் காணும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்கள் தங்கள் மூட்டைகளோடும் ஆட்களோடும் வெகு தூரம் வரையில் மேலே சென்றார்கள். அங்கு இவர்கள் அடைந்த துன்பங்களை அளவிட்டுக் கூற முடியாது. சிலருக்குத் தாங்க முடியாத குளிரினால் உடலின் உறுப்புக்கள் வெடித்துப் போயின. அடிக்கடி பனிப்படலங்கள் சரிந்து வந்து இவர்களுடைய கூடாரங்கள் முதலிய-



வற்றை அழித்தன. இவர்கள் தங்கள் வசம் இருந்த கோடரிகளால் பனிப்படலங்களை அடிக்கடி தகர்த்துக்கொண்டே செல்ல வேண்டியதாயிற்று. இத்தனை இடுக்கண்களையும் பொருட்படுத்தாமல் இவர்கள் மேலும் சென்றார்கள். ஆயினும், முடிவென்ன? எவரெஸ்டின் சிகரத்தையே அணுகிவிட்டார்கள் என்று கூறலாம். அந்தோ! சிகரத்தை மட்டும் அடையவில்லை. கடைசி வரையில் சென்றவர் அறுவர். அவர்களில் நால்வர் மேலும் செல்வது முடியாத காரியம் என்று முடிவு கட்டிக்கொண்டு திரும்பிவிடத் தீர்மானித்தனர். ஆனால், மேலோரி என்பவரும், இர்வின் என்பவரும் இதற்கு இசையவில்லை. அவர்கள் எவ்வகையிலும் சிகரத்தை அடையத் தீர்மானித்தார்கள்; உடன் வந்தவர்களை நிறுத்திவிட்டு அரும்பாடுபட்டு மேலே சென்றார்கள்.

கீழ் இருந்தவர்கள் அவர்கள் செல்வதைப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அவ்விருவரும் மிகச் சிறு புள்ளிகள் போல இவர்களுடைய கண்ணுக்குப் புலப்பட்டார்கள். மெலோரியும் இர்வினும் வெற்றி பெற்றுவிட்டதாகவே நினைக்க வேண்டியிருந்தது. ஆனால் முடிவென்ன? அந்தோ! பரிதாபம்! போனவர்கள் திரும்பவே இல்லை.

5. அதன் பின்னர் 1933ல் எவரெஷ்டின் சிகரத்தை அடைய ஒரு நூதன முறை கையாளப்பட்டது. ஆகாய விமானத்தில் ஏறிச் சென்று கண்டு பிடிப்பதெனத் தீர்மானமாயிற்று. அதன்படி சென்றவர்கள், சிகரத்தின் உச்சியை அடைய முடியாமல், சிறிது தூரத்திலிருந்தே தாங்கள் சென்றடையக்கூடாத பாகங்களைப் புகைப்படங்கள் பிடித்து வந்தார்கள்; திரைப்படக்காட்சியின் மூலம் தாங்கள் பிடித்த புகைப்படங்களை உலகத்தார் காணுமாறு செய்தார்கள். ஆயினும் எவரெஷ்டு இந்நாள் வரையில் கண்டறியக்கூடாத இரகசிய நிலையிலேயே இருந்து வருகிறது. இஃது இயற்கையின் வன்மையன்றோ?

பயிற்சி:

I. விடை எழுதுக:—

1. எவரெஷ்டு மலையின்மீது ஏற ஏன் மக்கள் முயற்சி செய்தார்கள்?

2. மலையின்மீது ஏறுவோர் கொண்டு செல்லவேண்டிய பொருள்கள் யாவை?

3. அவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் யாவை?

4. எவரெஷ்டு சிகரத்தை அடைவதற்குச் செய்த முயற்சிகளின் முடிவு என்ன?

II. 1. இப்பாடத்திலிருந்து பெயர் உரிச்சொல்லுக்கு இரண்டு உதாரணங்களும், வினை உரிச்சொல்லுக்கு இரண்டு உதாரணங்களும் தருக.

2. இமய மலையை வருணிக்கும் பாட்டுகளின் கருத்தைச் சுருக்கமாக எழுதுக.

---

# 24. முருகன் சிறு விளையாடல்

[தமிழ்ப் போசிரியர் L உலகநாதப் பிள்ளையவர்கள், தஞ்சை]

முட்டையெனப் பெயர் கட்டுரைத்த ஆடல்

'பொதியி லகத்தியனும் பொய்யா மொழியாய்
சிதைவில் புலவர் சிறப்பாய்த்—துதிசெய்யச்
செங்காட்டங் கோட்டத் துரையூ ரெனுந்தலத்துத்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்.'

என ஆன்றோர் எடுத்துரைக்கும் தொண்டை நன்னாட்டுச் செங்காட்டங் கோட்டத்துத் துறையூரிற் பிறந்து, கல்வி பயிலும் இளம்பருவத்தில் காளியின் திருவருளாற் கவிபாடுந் திறம் பெற்றுச் சிறந்திருந்த புலவர் பொய்யா மொழியார் என்பவர். இவரது பிள்ளைத் திருநாமம் தெரிந்திலது. இவர், அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயக்கும் நிறை மொழியினராதலின், பொய்யா மொழி எனப் பெயர் பெற்றனர் போலும்! இப்புலவர் பெருமான் கல்வியின் மேம்படுவதற்குக் காளியின் அருளன்றோ காரணமாய் இருந்தது? அதனால், அவளையன்றி மற்றைக் கடவுளரைப் பாடுவதில்லை என மனம் வலித்திருந்தனர். இவரது கொள்கை இதுவாக, திருப்புகழ் கேட்கும் விருப்பனாகிய முருகப் பெருமான் ஒருநாள் பொய்யா மொழியார்க்கெதிர் தோன்றி, 'புலவீர், நம்மீது ஒரு கவி பாடுக,' என்று கேட்டருள, பெட்டையையும் பாடி முட்டையையும் பாடுவனோ?

என மறுத்தனர் புலவர். அதாவது, 'தாயைப் பாடும் நான் பிள்ளையைப் பாடேன்,' என்றார் என்பது. அதைக் கேட்ட பெருமான், இவரது மனக் கொட்டத்தினையொழிக்கத் திருவுளங் கொண்டருளினர். அதன் பின்னர் சின்னாட்கள் சென்றன. அக்காலத்தில் தென்னாட்டின் தஞ்சாக்கூரில் பாண்டியர்க்கு அமைச்சனும் தானைத் தலைவனுமாயிருந்த சந்திரவாணன் என்பவன் பாவுக்கிசைந்த புகழ் உடையவனாய்ச் சிறந்திருப்பக் கேட்ட நம் புலவர், நாவுக்கிசைந்த கோவை ஒன்று அவன்மீது பாடிச்சென்று அரங்கேற்றிப் பரிசு பெற்று, மீண்டு காட்டின் வழியே தனித்து வருவாராயினர்.

அப்பொழுது எந்தையாகிய கந்தவேள் தலையிற் பீலி செருகி, மார்பில் அக்கு வடம் மின்ன, இடையிற் கச்சணிந்து, கையில் விற்பிடித்து, காலில் கழல் பூண்டு, காளைப் பருவத்து வேட்டிளங்குமரனாய்ப் புலவரை எதிர்ப்பட்டு, 'அடே, எங்குப் போகின்றாய்? நில் நில்! உன்னிடத்துள்ளவற்றை இங்கு வைத்து அப்பாற் செல்,' என்றுரைத்து உரப்பினர். என் செய வல்லார் புலவர்! ஒன்றும் தோன்றாது திகைத்தனர்; 'இன்று கள்வன் கையிற் சிக்கினேம்! இனி யாது செய்வேம்!' எனச் சிந்தித்தனர்; அஞ்சித் திகைத்து, நெஞ்சு துண்ணெனை நாவெழாது நின்றனர்; பின்னர் வாய் குழற, 'அப்பா, நான் பணக்காரன் அல்லன்; ஓர் எளிய புலவன்,' என்றனர்.

'ஓகோ! நீ புலவனோ? அப்படியாயின், உனக்குக் கவி பாடத் தெரியுமா?' என வினவினன் வேடன்.

'இவன் கல்வி மனமுடையவன் போலும்! ஆகவே, நமக்குத் தீமை புரியான்,' எனத் துணிந்த புலவர், 'தெரியும்,' என விடை தந்தனர்.

உடனே வேட்டுவக் குமரன், 'சுரம் போக்காக என்மீது ஒரு பாட்டுப் பாடுக,' என்றனன்.

'பாடுகிறேன்; உன் பெயர் யாது?' என்றனர் புலவர். அவனும் முன்னர் 'என்மீது பாடுக', என்றபொழுது, 'முட்டை-யையும் பாடுவனோ!' என இவர் கட்டுரைத்தமைக்கேற்பத் தன் பெயர் 'முட்டை' என்று மொழிந்தனன்.

அதைக் கேட்ட புலவர்,

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே!—மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேல் முட்டைக்குங் காடு."

எனப் பாடி முடித்தனர்.

அவ்வளவில், 'இச்செய்யுள் சொற்குற்றமிலதெனினும், பொருட்குற்றமுடைத்து. 'அஃது என்?' என்பையேல். கூறுவேன்: கேள்: வெட்டி உலரவிடினும் காட்பட்டுக் காயும் இயல்பினையுடைய கள்ளி வெந்து பொறியாகப் பறக்கும் பாலை நிலத்தில், பச்சையினும் தீப்பட்டு வேகும் தன்மையுள்ள வேல முள் வேகாதிருந்து காலிற்றைக்கும் என்றது எங்ஙனம் பொருந்தும்? இத்தகைய வழுவமைந்த பாட்டினைப் புலவர் பாடுவரோ? இனி நான் பாடுவேன்; கேட்பாய்,' என்றிசைத்து,

"விழுந்ததுளி யந்தரத்தே வேமென்னும், வீழின்
எழுந்த சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்திற் பெய்வளையுஞ் சென்றனளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்!',

என்று பாடுவாராயினர்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்னும் கடப்பாடுடையார், காய்தலும் உவத்தலுமின்றி

எப்பொருளையும் ஆராயும் இயல்பினராதலின், இச்செய்யுளைக் கேட்டபொழுதே செருக்கழிந்து, "எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ! யாரறிவார்! உருவு கண்டு எள்ளுதல் இழுக்கென்பது விளங்கிற்று. இவனை வேட்டுவனென்று எளிதாக நினைந்தேன். இவனது கல்வியறிவு இருந்ததனை என்னென்பேன்! அறிவென்பது யாரிடை அடங்கிற்று!" எனப்புலவர் பலபட நினைந்து வியந்து நிற்கையில், முன்னர் முருகன் போந்துதம்மைப் பாடக் கேட்டபோது முட்டையைப் பாடேனெனத் தாம் மறுத்துரையாடினதும், பின்னர் வந்த வேட்டுவக் குமரன் தன் பெயரை முட்டையெனக் சுட்டியதும் தம் கருத்திற்றோன்றவே, சிந்திப்பார்: 'நான் கூறிய முட்டையென்றதனையே தன்பெயராக உரைத்த இவன், வேட்டுவனல்லன்; முருகனேயாதல் வேண்டும். உலகின்கண், தாய் தந்தையர் தம் சொற்கடங்காத மக்களைத் தண்டம் புரிந்து தம் வழிப்படுத்துவது இயற்கை. அவ்வாறு அவர் செய்வதன் காரணம், அம்மக்கள்மேல்வைத்த காதலேயன்றி வேறுமோ? அது போலவே முருகவேளும் தன் அறக் கருணையைப் பொருட்படுத்தாத என்பால் எளிதாக எழுந்தருளி இம்மறக் கருணையைக் காட்டியதும் அடியனேனை உய்வித்தற் பொருட்டன்றே! இதனை முன்னமே ஆராயாமற் கெட்டேன். என்னே என் பேதமை இருந்தவாறு!' என முருகப் பிரானது அருட்டிறத்தினையும் தமது அறிவின்மையையும் நினைந்து நினைந்து உள்ளமுருகி வருந்திய அளவில், முருகன் வேட்டுவக் கோலம் நீங்கித் தொல்லுருக் காட்டியருள, அடியற்ற மாம்போலப் படிமிசை விழுந்து பன்முறையும் வணங்கி எழுந்துநின்று 'எந்தையே! என் குற்றம் பொறுத்தருள்க,' என வேண்ட, ஆறிரு தடந்தோளண்ணல், 'புலவ, அஞ்சற்க. நாம் இவ்வாறு நின்னைச் செய்ததெல்லாம் நின் பாடலைக் கேட்பதற்கேயாம்!' எனப் புன்னகை புரிந்து தன்னுருக் கரந்தனன். -தமிழ்ப் பொழில்

## பயிற்சி :

I. விடை எழுதுக :—

1. பொய்யா மொழிப் புலவர் என்னும் பெயர்க் காரணம் கூறுக.

2. பொய்யா மொழியார் யார்மீது கோவை செய்தார் ?

3. முருகன் தன்மீது ஒரு பாட்டைப் பாடவேண்டுமென்றபோது பொய்யா மொழியார் கூறியது யாது ?

4. முருகன் வேடனாய் வந்த காட்சியை வருணிக்க.

5. பொய்யா மொழியார் கூறிய பாடலின் கருத்து யாது ?

6. முருகன் கூறிய பாட்டின் கருத்து யாது ?

II. இந்நிகழ்ச்சியை நாடகமாக அமைத்து எழுதுக.

## இலக்கணம் :

### புணர்ச்சி

### மெய்ம்முன் மெய்

மகர ஈற்று மொழிகளிற் சில வருமொழியோடு புணரும்போது ஈற்றில் உள்ள மெய் கெட்டுப் புணருவதும், சிலமொழிகளின் ஈற்றில் உள்ள மகரமெய் வருமொழியின் முதலில் உள்ள வல்லினத்துக்கு இனமாக மாறுவதும் உண்டு.

உதாரணம் :—

1. மரம் + அடி = மர + வ் + அடி = மரவடி — ம் கெட்டு, உயிர் ஈற்றைப் போல நின்று உடம்படுமெய் பெற்றது.

2. மரம் + கால் = மர + க் + கால் = மரக்கால்—ம் கெட்டு, வலி மிகுந்தது.

3. மரம் + கொடு = மர + ங் + கொடு = மரங்கொடு—ம் வருமொழி முதலில் உள்ள ககரத்துக்கு இனமான 'ங்' ஆக மாறியது.

## மெய்ம்முன் உயிர்

I. நிலைமொழி ஈற்றில் மெய்யெழுத்து நின்று, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால், அவ்வுயிரானது மெய்யெழுத்தின்மீது ஏறும்.

உதாரணம் :—

1. தோன்றல் + அழகன் = தோன்றலழகன்.
2. வேல் + எறிந்தான் = வேலெறிந்தான்.

II. தனிக் குற்றெழுத்தை அடுத்த மெய்யெழுத்தின் முன் உயிர் வந்தால், அம்மெய் இரட்டும்.

உதாரணம் :—

1. மண் + அரிது = மண்ணரிது.
2. பொன் + ஒளி = பொன்னொளி.

## அணி

நாம் நம் உடலை அழகு செய்துகொள்வதற்கு ஆடைகளையும் நகைகளையும் அணிகிறோம். அவை அழகு செய்வதால், 'ஆடையணிகள்' என்று அவற்றைக் கூறுகிறோம். அது போல ஒரு பாட்டிலுள்ள சொல்லோ, பொருளோ அப்பாட்டிற்கு அழகு தருமானால், அதற்கு அணி என்பது பெயர்.

இப்பொழுது ஒன்றுக்கும் பயனின்றி மூடனாய் இருக்கும் ஒருவனைப் பார்த்து, "உன் தாய்தான்—பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாளே!" என்பது படிப்பதற்கும், கேட்பதற்கும், அழகாயிருக்கின்றதன்றோ?

அணி பல வகைப்படுமாயினும், இரண்டொன்றை மட்டும் இங்குக் கற்போம் :

### உவமையணி

ஒருவன் என்ன சொன்னாலும் கேட்காமல் மிகவும் அசைந்தசைந்து பையப்பைய நடப்பானானால், அவனைப்

பார்த்து, 'ஐயோ! யானைப்போல நடக்கிறாயே!' என்று கூறுவோமல்லவா?

இதில், அவன் அசைந்து மெல்ல நடக்கிறான் என்று சொல்ல நினைக்கிறோம். அதை அப்படியே சொல்லாமல், அம்மாதிரி நடக்கும் இன்னொரு பொருளை நினைவுக்குக் கொண்டு வந்து, நன்கு விளங்குவதற்காக, 'யானைபோல நடக்கிறாய்' என்று கூறுகிறோம். அதைப் பாட்டில், "ஆனை நடைபோல அசைந்து நடந்தானே" என்றால் இனிமை தருகின்றதன்றோ? எனவே ஒரு பொருளை உள்ளபடியே கூறாமல், நன்கு விளங்குவதற்காக, அது போன்ற வேறொரு பொருளை அதற்கு உவமித்துக் கூறுவது உவமையணி எனப்படும்.

உபமானம் உபமேயம் என்பவற்றை நீங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லவா? அற்றை இந்த உவமையணியுடன் ஒப்பிட்டுப் படித்தால், நன்கு விளங்கிக்கொள்ளுவீர்கள்.

## ஐயவணி

ஐயம் என்பது சந்தேகம். ஒரு பொருளைப்பற்றிப் பலவாறு நமக்கு ஐயம் நிகழ்வதை நாம் நாடோறும் உணர்கிறோம். கிடைக்காத ஒரு பொருள் கிடைத்து ஒருவன் உடனே அதனை இழந்துவிட்டால் அவன், "அதை நான் பெற்றது நனவோ கனவோ! அறியேன்," என்று ஐயுறுவதைக் காண்கிறோம். அதுபோல் இருட்டில் வழிப்போகும் ஒருவன் ஒரு மரத்தைப் பார்த்து, 'இது பேயா! மரமா! கள்வனா!' என்று பலவாறு ஐயப்படுவது இயற்கையல்லவா? அதனை, "பேயோ மரமோ பெருங்கல்லோ கள்வனோ!" எனப் பாடினால், அஃது அழகாயிருப்பதையும் அறிகிறோம். ஆகவே, 'ஐயவணி' என்பது ஒரு பொருளைப்பற்றிப் பலகருத்துக்களையும் தெளிவில்லாமல் உரைப்பதாம்.

பயிற்சி :

1. உபமானம், உபமேயம் என்பனவற்றை விளக்குக. உவமையணியை அவற்றுடன் பொருத்திக் காட்டுக.

2. உவமையணி, ஐயவணி—இந்த இரண்டணிகளுக்கும் இலக்கணம் கூறுக.

3. 'கண்ட சர்க்கரையோ தேனோ கனியொடு கலந்த பாகோ!'; 'மையோ, மழையோ, மரகதமோ!'; 'பால்போலும் இன்சொல்'; 'மலைபோலும் மாடம்'; 'தாய்போலும் அன்பினன்!' இவை இன்னின்ன அணி என்று எழுதுக.

---

## 25. ஆஸ்திரேலியாவின் அதிசயங்கள்

சாதாரண நிகழ்ச்சிகளையும் தோற்றங்களையும்விட இவ்வுலகத்தில் அதிசயங்களும் அற்புதங்களுமே நமது கவனத்தைக் கவர்கின்றன. வழக்கத்திற்கு மாறாக நடைபெறும் சம்பவங்களையே மனிதர் ஆர்வத்தோடு நோக்குவதை நாம் பார்த்திருக்கிறோம். இது மாந்தரின் இயல்பாகும். உலகத்தில் நிகழக்கூடிய அல்லது காணக்கூடிய அதிசயங்கள் இருவகைப்படும். இயற்கையிலேயே தோற்றுவன சில; மனிதன் தனது அறிவின் ஆற்றலால் செய்வன சில. உலகத்தின் பற்பல பாகங்களிலும் கணக்கில்லாத அதிசயங்கள் காணக்கிடக்கின்றன. அவற்றில் சில திடீரெனத்தோன்றி மறையக் கூடியவை: சில நிரந்தரமாய் இருக்கும் தன்மையன.

ஆஸ்திரேலியாவில் காணக் கூடிய அதிசயங்களைப்பற்றி ஈண்டுச் சிறிது கூறுவோம்: ஆஸ்திரேலியா உலகத்திலுள்ள கண்டங்களில் மிகச் சிறியது; தீவுகளில் மிகப் பெரியது; இஃது ஒன்றே பிரபஞ்சத்திலுள்ள கண்டங்களுள் முற்றிலும் தென் கோளார்த்தத்திலேயே அமைந்துள்ளது. இது காரணம் பற்றியே இதற்கு ஆஸ்திரேலியா என்னும் பெயர் கொடுக்கப்

பட்டுள்ளது. இப்பெயருக்குத் தேன் கண்டம் என்பது பொருள். நமது நாடு வடகோளார்த்தத்தில் இருப்பதால் ஆஸ்திரேலியா-வில் பருவ காலங்கள் நமக்கு இருப்பதினின்றும் நேர் மாருய் இருக்கும். இக்கண்டத்தின் வடபாதிபாகம் வெப்பமண்டலத்தின் தென்பாதியிலும், தென் பாகம் தென் மித வெப்ப மண்டலத்தி-லும் இருப்பதால், மழையும் தட்ப வெப்ப நிலையும் இக்கண்டத்-தின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு விதமாய் அமைந்திருக்-கும். இஃது ஆங்கில சாம்ராச்சியத்திற் குட்பட்ட நாடு. இங்கே மக்கள் சுய ஆட்சி உரிமை பெற்று வாழ்கிருர்கள். இந்நாட்டின் அரசியல் அமைப்பைச் சமஷ்டி அமைப்பெனக் கொள்ளலாம்.

இந்நாட்டில் நாம் காணக் கிடக்கும் அதிசயங்களில் செயற்கை அதிசயங்கள் வெகு சிலவே இருக்கின்றன. சிட்னி நகரத்தின் துறைமுகவாயில் கட்டப்பட்டுள்ள ஒரே வளைவு கொண்ட பாலமும், வாலேவனப் பிரதேசத்தில் குடிநீர் கிடைக்காத நிலைமையால் நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள நீர் நிலைகளிலிருந்து குழாய்களின் மூலமாய்க் குடிநீர் கொண்டு வரப்-படுவதும் செயற்கை அதிசயங்களில் குறிப்பிடத் தக்கவைகளாம். இயற்கை அதிசயங்களை இயற்கைத் தோற்றங்கள், பிராணிகள் சம்பந்தமானவை, தாவர சம்பந்தமானவை என மூவகையாகக் கொள்ளலாம்.

### இயற்கைத் தோற்றங்கள் :

ஆர்ட்டீஷியன் ஊற்றுக் கிணறுகள் :—ஆஸ்திரேலியாவின் பல பாகங்களில் மழையில்லாக் குறையினுல் பிராணிகள் உயிர் வாழ்வதே அரிதாகிவிடுகிறது. ஆனல், கருணைக் கடலாகிய கடவுள், பூமியிலிருந்து நீர் சுரந்து பொங்கி வெளியே வரும் நீரூற்றுக்களைக் கொடுத்து மழையின்மையின் கொடுமையை நீக்கி இருக்கிருர். இவ்வூற்றுக்களுக்கு ஆர்ட்டீஷியன் ஊற்றுக் கிணறுகள் என்பது பெயர்.

உப்புப் புல் :—இக்கண்டத்தில் ஒரு வித அதிசயப் புல் வளர்கிறது. பல ஆண்டுகள் மழை பெய்யாவிடினும், இது தீய்ந்து போகாமலிருக்கும் தன்மையது. இஃது உப்புக்கரிக்கும். இதை ஆடுகள் தின்று பிழைக்கும். இது சிறிது மழை பெய்தாலும் கன்றுகப் புதர்கள்போல வளர்ந்துவிடும். இவ்விதப் புல்லை மற்ற நாடுகளில் காண்பது அரிது.

பவளப் பாறைகள் :—இக்கண்டத்தின் கிழக்குக் கரைக்குச் சமீபத்தில் 'கோரல் ரீப்' என்னும் பவளப் பாறைகள் ஓராயிரம் மைல் வரை அமைந்துள்ளன. இவைகளின்மீது செடி கொடிகளும் முளைப்பதுண்டு. வெப்ப மண்டலத்திலுள்ள கடல் நீரில் வாழும் பவளப் பூச்சி என்னும் சிறிய பிராணிகளுடைய தேகம் அவை மரித்த பின்பு சுண்ணும்புக் காறைகளாகி, நாளடைவில் இறுகிப் பவளப் பாறைகளாகின்றன. இவை பல வர்ணமுள்ளவை ஆயினும், வெண்மை, சிவப்பு நிறப் பாறைகளே அதிகம். ஒரு பாறை அமைவதற்கு எத்தனை கோடிக்கணக்கான பூச்சிகள் தங்கள் உடலை அர்ப்பணம் செய்திருக்க வேண்டுமென்பதை யோசித்துப் பாருங்கள்.

நெருப்பு மலர் :—ஆஸ்திரேலியாவில் வட பாகத்தில் பருவக் காற்று மழையும், கிழக்குக் கரை நாடுகளில் நிரந்தர மழையும் பெய்வதால் அங்கே மரஞ்செடி கொடிகள் செழித்து ஓங்கி வளரும். அவைகளில் புஷ்பச் செடிகளே மிகுதியாம்; பழந் கொடுக்கும் மரங்கள் வெகு சொற்பமே. மலர்கள் நிறைந்த மரங்கள் பார்ப்போர் மனத்தைக் கவரக்கூடிய வனப்பை உடையவை. இம்மலர்களில் பெரும்பான்மை சிவப்பு, மஞ்சள் நிறங்களைக் கொண்டிருக்கும். வெகு தூரத்திலிருந்து பார்ப்போருக்கு இவ்விரண்டு நிறங்களும் சேர்ந்து நெருப்புப்பற்றி எரிவதுபோலக் காணப்படும். எனவே, இம்மரங்களுக்கு எரிமரம் என்றும்,

இம்மலர்களுக்கு நெருப்பு மலர் அல்லது எரி மலர் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

விலங்கினங்கள் :

இதுவரை இயற்கைப் பொருள்களைப்பற்றிப் படித்தோம். இனி அசையும் பிராணிகளைப் பற்றிப் படிப்போம்: உலகத்தில் மற்ற இடங்களில் காணாத சில விலங்குகள் இக்கண்டத்தில் காணப்படுகின்றன.



டக் பில்

கடப்பன, பறப்பன, நீர் வாழ்வனவற்றிற்குள்ள குணங்கள் ஒருங்கே அமையப் பெற்ற 'டக் பில்' என்னும் பிராணிவெகு அதிசயமானது. இதற்கு வாத்தின் அலகைப்போன்ற அலகும், முன்னங்கால்களும் அமைந்திருக்கின்றன. பின்னங்கால்கள் வளைதோண்டும் பிராணிகளுக்கிருப்பது போல அமைந்திருக்கின்றன.

எச்சிட்னு என்பது மற்றொரு பிராணி. இது முள்ளம்பன்றியைப் போல முட்களையும், மூஞ்சூற்றைப் போன்ற



ஆஸ்திரேலியக் கரடி

முகத்தையும் உடையது. 'கங்காரு' என்னும் பிராணி தனது வயிற்றிலுள்ள பையில் தன் குட்டிகளைத் தாங்கிச் செல்லும். குட்டிகள் வளர வளர இப்பையும் வளரும். ஆஸ்திரேலியாவில் ஒரு வகைக் கரடி உண்டு அவை மற்ற நாட்டுக் கரடிகளைவிடச் சிறியவையாய் இருக்கும். அவை பெரும்பாலும் மரத்தின்மீது வசிக்கும்.

## பறவைகள் :

ஈமு என்னும் பறவையைத் தென் ஆப்பிரிக்காவிலுள்ள நெருப்புக் கோழியோடு ஒப்பிடலாம். இதற்குச் சிறிய இறகுகள்



கங்காரு



லயர்

உள்ள காரணத்தால் இதைப் பறவையென்று கொள்ளலாம். ஆயினும், பறவை என்னும் சொல் பறக்கும் தன்மையுடைய பிராணிகளையே குறிக்கும். இப்பொருளைக் கொண்டு பார்க்கு-

மிடத்து ஈமுவைப் பறவையாகக் கொள்வது நேர்மையாகா-தென்று சொல்ல வேண்டும். இஃது ஆறடி உயரமிருக்கும். இது வன்மை பொருந்திய கால்களை உடையது; தனது முதுகில் இரண்டு மனிதரை சுமந்துகொண்டு வெகு வேகமாக ஓடக்-கூடியது.

இக்காட்டில் நமது நாட்டிலுள்ள மயிலைப் போன்ற ஒரு வகைப் பறவையும் உண்டு. அதற்கு லயர் என்பது பெயர். அஃது இனிமையாகப் பாடுமாம்.

நீர்வாழ்வன:

நீரில் வாழும் பிராணிகளில் கடற்பசு முக்கியமானது. இது திமிங்கிலத்தைப் போன்ற நீர் வாழும் பிராணி. ஆனால், இது கடற்கரை புல்லைப் புசித்து உயிர் வாழ்வதால், இதற்குக் கடற்பசு என்னும் பெயர் வழங்குகிறது.

மக்கள்:

மனித வாழ்க்கையிலும் ஆஸ்திரேலியாவில் அதிசயங்கள் இராமலில்லை. இக்கண்டத்தில் பண்டைக் காலத்திலிருந்து வாழ்ந்து வரும் மக்களில் ஒரு சிலரே இக்காலத்தில் இருந்து வரு-கின்றனர். அவர்களுடைய வர்க்கம் குறைந்து வருகிறது. அவர்கள் கையாளும் ஆயுதங்கள் விசித்திரமானவை; வியக்கத் தக்கவை. பூமராங் என்னும் அவர்களுடைய ஆயுதம் குறிப்பிடத்தக்கது. அதை அவர்கள் குறி நோக்கி எய்ததும், அவ்வாயுதம் நோக்கப்-பட்ட இடத்திற்குச் சென்று மறுபடியும் அதை எய்தவரிடமே வந்து சேரும் தன்மையுடையது. நாகரிகத்தில் பின்னடைக்-திருப்பினும், அவர்களுடைய திறமை வியக்கத் தக்கதல்லவா?

பயிற்சி:

1. ஆஸ்திரேலியாவின் பெயர்க் காரணம் யாது?

2. ஆஸ்திரேலியாவில் காணப்படும் இயற்கை அற்புதங்கள் யாவை?

3. இக்கண்டத்தில் வசிக்கும் விசேஷத் தன்மையுடைய விலங்கினங்கள் யாவை? ஒவ்வொன்றையும்பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

4. பறவையினங்களில் குறிப்பிடத் தக்கவை யாவை? எக்காரணத்தால்?

## இலக்கணம்:

### சீர்கள்

ஒருவன் நன்கு பாடினால் அவன் மிகச் 'சீராய் பாடுகிறான்' என்கிறோம். அதாவது பாட்டை நிறுத்த வேண்டிய இடங்களில் அறுத்து நிறுத்திப் பாடுகிறான் என்பது பொருள்.

பாட்டில் இரண்டடி, மூன்றடி, நான்கடி முதல் பல அடிகள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஒவ்வோரடியிலும் பல சீர்கள் இருக்கும். "வாடி யிருக்குமாம் கொக்கு" என்பது ஒரு பாட்டின் அடி. இதனை 'வாடி' என்றும், 'இருக்குமாம்' என்றும், 'கொக்கு' என்றும் பிரித்து எழுதுகிறோம்; இது-போலப் படித்து வருகிறோம் அல்லவா? இவைதாம் சீர் என்று சொல்லப்படுவன.

பாட்டின் அடியை உண்டுபண்ணும் உறுப்புகளுக்குச் சீர்கள் என்பது பெயர். அவை, ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என்று நான்கு வகைப்படும்.

### பயிற்சி:

1. சீர் என்பது என்ன?
2. பாட்டின் அடிகள் எவற்றால் உண்டாகின்றன?
3. சீர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

4. கீழ்வரும் பாட்டில் ஒவ்வோரடியிலும் உள்ள சீர்களைக் கணக்கிடுக :—

“திறக்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.”

5. உங்கள் செய்யுட்பகுதியில் எவையேனும் இரண்டு பாட்டின் சீர்களை எண்ணிக் காட்டுக.

# செய்யுட்பகுதி

## i. கடவுள் வணக்கம்

1. வானே! அவ் வானுலவுங் காற்றே! காற்றின்
வருநெருப்பே! நெருப்புறும்நீர் வடிவே! நீரிற்
றானேயும் புவியே! அப் புவியிற் றங்கும்
தாவரமே! சங்கமமே! சாற்று கின்ற
ஊனே! நல் லுயிரே! உள் ளொளியே! உள்ளத்து
உணர்வே! அவ் வுணர்வுகலந் தூறு கின்ற
தேனே! முக் கனியே! செங் கரும்பே! பாகின்
தீஞ்சுவையே! அவையனைத்துந் திரண்ட தேவே!

2. கல்லா நாயே னெனினுமெனைக் காக்குந் தாய்நீ என்றுலகம்
எல்லா மறியு மாதலினா லெந்தாய்! அருளா திருத்தியெனில்
பொல்லாப் பழிவந் தடையுமுனக் கரசே! இனியான் புகல்வதென்னே!
செல்லார் பொழில்சூழ் திருத்தணிகைத் தேவே! ஞானச் செழுஞ்சுடரே!

திருவருட்பா] [இராமலிங்க அடிகள்

3. நாத விந்துக லாதீ! நமோநம:
வேத மந்த்ரசொ ரூபா! நமோநம:
ஞான பண்டித சாமீ! நமோநம: வெகுகோடி
நாம சம்புகு மாரா! நமோநம:
போக அந்தரி பாலா! நமோநம:
நாக பந்தம யூரா! நமோநம. பரசூரர்

சேத தண்டவி நோதா! நமோநம:
　　கீத கிண்கிணி பாதா; நமோநம:
　　தீர சம்ப்ரம வீரா! நமோநம: 　　　　கிரிராச!

தீப மங்கள சோதீ! நமோநம:
　　தூய அம்பல லீலா! நமோநம:
　　தேவ குஞ்சரி பாகா! நமோநம: 　　　　அருள்தாராய்:

ஈத லும்பல கோலால பூசையும்
　　ஓத லுங்குண ஆசார நீதியும்
　　ஈர முங்குரு சீர்பாத சேவையும் 　　　　மறவாத

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
　　சோழ மண்டல மீதேம னோகர
　　ராச கெம்பீர நாடாளு நாயக? 　　　　வயலூரா!

ஆத ரம்பயி லாரூரர் தோழமை
　　சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
　　ஆடல் வெம்பரி மீதேறி மாகயி 　　　　லையிலேகி

ஆதி அந்தவு லாவாசு பாடிய
　　சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
　　ஆவினன் குடி வாழ்வான தேவர்கள் 　　　　பெருமாளே

திருப்புகழ்] 　　　　[அருணகிரிநாதர்

## II. தமிழ் மொழி வாழ்த்து.

'மாற்றறியாத' என்னும் வண்ணம்

1. தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னோடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகண்ணா வயங்குநன் மொழியே!
தானியல் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!

கா. நமச்சிவாய முதலியாரவர்கள்

2. திருவளரும் செந்தமிழாம் தேமலர்தா னெப்பொழுதும்!
முருகு விரித்தொளிரும் மூவுலகும் அம்மானை!
முருகு விரித்தொளிரும் மூவுலகும் ஆமாயின்,
அருமைமிக வானவரும் அணிவரோ? அம்மானை!
அங்கொன்றைத் தாரனுமுன் அன்புவைத்தான் அம்மானை!

3. தேங்குசுவை யில்கவினில் திகழ்பழமை யின்மிகுந்த
பாங்கி னுயர்மொழிநம் பைந்தமிழ்காண் அம்மானை!
பாங்கி னுயர்மொழிநம் பைந்தமிழ்தான் ஆமாயின்,
ஆங்கிலத்திற் பொருள்மிகவே அளித்திடுமோ? அம்மானை!
அகத்தும் புறத்தும் அளித்திடுங்காண் அம்மானை!

ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்

# III. சங்கச் செய்யுட்கள்

## வண்மை

ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ :
அணிபூண் அணிந்த யானை இயல்தேர்
அதியமான் பரிசில் பெறூஉம் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் தது அது பொய்யா காதே ;
அருந்(து)ஏ மாந்த நெஞ்சம் !
வருந்த வேண்டா ; வாழ்க அவன் தாளே ! 1

புறநானூறு] [ஔவையார்

## பாரியின் வீரம்

கடந்தடு தானை மூவிரும் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்புகொளற் கரிதே !
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு ;
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர் ;
யாமும் பாரியும் உளமே ;
குன்றும் உண்டு பாடினிர் செலினே. 2

புறநானூறு] [கபிலர்

## அம்மானை

புறவுநிறை புக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானை !
குறைவி லுடம்பரிந்த கொற்றவன் முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை !
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை ! 3

### பந்து

துன்னி வந்து கைத்தலத் திருந்த தில்லை நீணிலம்
தன்னி னின்று மந்தரத் தெழுந்த தில்லை தானெனத்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்று பந்த டித்துமே!
தேவ ரார மார்பன் வாழ்கஎன்று பந்த டித்துமே! 4

### ஊசல்

ஓரைவ ரீரைம் பதின்மரு டன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்!
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்! 5

சிலப்பதிகாரம்] [இளங்கோவடிகள்

### சோழனுடைய யானை

கச்சி யொருகால் மிதியா ஒருகாலால்
தத்துநீர்த் தண்ணுஞ்சை தான்வதியாப்—பிற்றையும்
ஈழ மொருகால் மிதியா வருமேகங்
கோழியர்கோன் கிள்ளி களிறு. 6

### சோழனுடைய போர்க்களம்

முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி—எடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம் 7

### பாண்டி நாடும் பாண்டியனும்

பார்படுப செம்பொன்; பதிபடுப முத்தமிழ்நூல்;
நீர்படுப வெண்சங்கும் நித்திலமும்;—சாரல்
மலைபடுப யானை; வயமாறன் கூர்வேல்
தலைபடுப தார்வேந்தர் மார்பு. 8

வெற்றியை விரும்பும் அரசன்

ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றஞ் சூழ்ந்து பெருக்கலும் சூதரோ
கொற்றம் கொள்குறிக் கொற்றவர் கென்பவே. 9

[திருத்தக்க தேவர் சிந்தாமணி]

பட்டினம்

பானல்வாய்த் தேன்விரிந்தன ;
கானல்வாய்க் கழிமணந்தன ;
ஞாழலோடு நறும்புன்னை
தாழையோடு முருகுயிர்ப்ப,
வண்டல்வாய் நறுநெய்தல்
கண்டலோடு கடல்உடுத்துத்
தவளமுத்தம் சங்கீன்று
பவளமோடு ஞெமிர்ந்துராய்
இன்னதோர்.
கடிமண முன்றிலு முடைத்தே
படுமீன் பரதவர் பட்டினந் தானே. 10

—யாப்பருங்கல. விருத்தி உரை மேற்கோள்

## IV. தனிப்பாடல்கள்

'அருங்கிரியே ! கற்பகமே ! காளையே !
அனந்தனே ! அரியே !' என்ன
ஒருங்குகமை யேபுகழ்ந்து பொருள்கேட்ட
ஒருவனையாம் உற்று நோக்கி,
' இருங்கல்லே ! மரமே ! மாடே ! பாம்பே !
மிருகமே !' என்றேம் ; காய்ந்தான் ;
மருங்கவன்வார்த் தையைத்திருப்பி நாஞ்சொன்னால்
அவனுக்கேன் வருத்த மம்மா ! 1

—வேதநாயகம் பிள்ளை

## சோலை முதலியார்மேற் பாடியது

அலையான்; கவடுபடான், ஆரிடத்தும் சாயான்;
இலையென்ப தோர்நாளு மில்லை:—கலைதேர்ந்த
சாலைமுத்துக் கிருஷ்ணனருள் சற்குணசிந் தாமணியைச்
சோலையென்று சொன்னவரார் சொல்? 2

—சவ்வாதுப் புலவர்

## பறவைகள்

மாரியன்ன மஞ்சனத்தி வாவலுள்ளான் வண்டுகவு
தாரிகரு டன்குருகு தாராபோய்—நாரையுறும்
தூக்கணத்தான் கொண்டலைத்தான் சூழ்வானம் பாடிமயில்
காக்கைவண்ட லெம்முதுங்கா கா. 3

—பழனி பாம்பழக் கவிராயர்

தாயோ டறுசுவைபோம்; தந்தையொடு கல்விபோம்;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்;—மாயவாழ்வு
உற்றா ருடன்போம்; உடன்பிறப்பாற் றோள்வலிபோம்;
பொற்றாலி யோடெவையும் போம். 4

—ஔவையார்

தந்தை பிறந்திறவாத் தன்மையினால், தன்மாமன்
வந்து பிறந்திருக்கும் வன்மையினால்—முந்தொருநாள்
வீணிக்கு வேளை எரித்தான் மகன்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண். 5

—காளமேகப் புலவர்

மறந்தா கிலுமரைக் காசுங் கொடாமட மாந்தர்மண்மேல்
இறந்தாவ தென்ன? இருந்தாவ தென்ன? இறந்துவிண்போ
சிறந்தாளும் காயற் றுறைசீதக் காதி திரும்பிவந்து [ய்ச்
பிறந்தா லொழியப் புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே! 6

பொல்லாத மூர்க்கருக் கெத்தனை தான்புத்தி போதிக்கினும்
நல்லார்க்குண் டான குணம்வரு மோ ! நடு ராத்திரியிற்
சல்லாப் புடைவை குளிர்தாங்கு மோ ! நடுச் சந்தையினிற்
செல்லாப் பணஞ்செல்லு மோதில்லை வாழும் சிதம்பரனே ! 7

—படிக்காசுத் தம்பிரான்

## அடைமொழியில்லாப் பாடல்

நாய்நரி சிங்கம்மா டானைமுளா பன்றிகடு
வாய்குதி ரைக வரிமான்புல்—வாயொட்
டகங்கழுதை யாட்டுக்க டாபுலிகாண் டாமி
ருகங்க ரடியெரு மை. 8

—அழகிய சொக்கநாதப் பிள்ளை

ஆன்பாலும் தேனு மரம்பைமுதன் முக்கனியும்
தேன்பாய வுண்டு தெவிட்டுமனந்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணை வருசடையா ! கம்பன்
இறக்கும்போ தேனு மினி? 9

—கம்பர்

---

# V. சதகத் திரட்டு

## வேளாளர் சிறப்பு

அந்தணர்கள் கருமமும் சகராசர் புசபலமும்
அவனிவர்த் தகலாபமும்
அனைவர்க்கு மேன்மையும் தருமமும் தானமும்
அன்புமங் கையரின்பமும்
புந்திதெளி நியமமும் சாத்திரமும் ஆகம
புராணமொடு சகலகலையும்
பொய்யாத உண்மையும் கீர்த்திப்ர தாபமும்
புகழ்கின்ற தேவர்நிலையும்

விந்தைபுரி மானமும் குலமரபு நீதியும்
விதரண முதற்சகலமும்
வேளாளர் குவளைபுனை காராளர் தங்களுடை
மேழியின் பெருமையன்றோ !
மந்தரமெ னும்புய சவுந்தர முகுந்தனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே !
வரதவேங் கடராயனே ! 1

## வேண்டுவன

அதிவீரன் என்னிலும் தந்திரவு பாயமுடன்
அடையலரை வெல்லல்வேண்டும் ;
ஆயிரம் வித்தைகற் றாலுமுல கந்தனில்
அடக்கம திருத்தல்வேண்டும் ;
நதிகோடி நீந்திவந் தாலுமோ டந்தனை
நயந்துகரை சேரல்வேண்டும் ;
ஞானதத் துவமுணர்ந் தாலுமுல கத்தினில்
நடக்கைதனை அறிதல்வேண்டும் ;
துதிசேர்கு பேரனென் றாலுமொரு லாபமுறு
தொழிலுடன் இருத்தல்வேண்டும் ;
துய்யவல் லமையுடையன் எனினுமொரு சார்பினால்
துரைகளைக் காணல்வேண்டும் ;
மதியூகி என்னினும் பெரியர்சொல் கொளல்வேண்டும் ;
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே !
வரதவேங் கடராயனே ! 2

## ஆகா உணவு

கைவிலைக் குக்கொளும் பால்அசப் பால்வரும்
காராக் கறந்தவெண்பால்
காளான் முருங்கைசுரை கொம்மடி பழஞ்சோறு
காந்திக் கரிந்தசோறு
செவ்வையில் சிறுகீரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னைவெல் லம்லவங்கம்
சீரிலா வெள்ளுள்ளி ஈருள்ளி இங்குவொடு
சிறப்பில்வெண் கத்தரிக்காய்
எவ்வமில் சிவன்கோயில் நிர்மாலி யங்கிரணம்
இலகுசுட ரில்லாதவூண்
இவையெலாம் சீலமுடை யோர்களுக் காகா
எனப்பழைய நூலுரைசெயும்;
ஐவகைப் புலன்வென்ற முனிவர்விண் ணவர்போற்றும்
அமலனே ! அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீச் சுரதேவனே ! 3

## சினத்தின் தீமை

கோபமே பாவங்க ளுக்கெலாம் தாய்தந்தை;
கோபமே குடிகெடுக்கும்;
கோபமே ஒன்றையும் கூடிவர வொட்டாது;
கோபமே துயர்கொடுக்கும்;
கோபமே பொல்லாது; கோபமே சீர்கேடு;
கோபமே உறவறுக்கும்;
கோபமே பழிசெயும்; கோபமே பகையாளி;
கோபமே கருணைபோக்கும்;

கோபமே ஈனமாம்; கோபமே எவரையும்
கூடாமலொருவராக்கும்;
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னில்தள்ளுமால்;
ஆபத்தெ லாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளும்
அண்ணலே! அருமைமதவேள்
அனுதினமு மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீச் சுரதேவனே!

அறப்பளீச்சுர சதகம்] [அம்பலவாணக் கவிராயர்

## கேண்மையின் பான்மை

கதிரவன் உதிப்பதெங் கே?நளினம் எங்கே?
களித்துள மலர்ந்ததென்ன?
கார்மேகம் எங்கே? பசுந்தோகை எங்கே?
கருத்தில்நட் பானதென்ன?
மதியமெங் கே?பெருங் குமுதமெங் கே?முக
மலர்ந்துமகிழ் கொண்டதென்ன?
வல்இரவு விடிவதெங் கே?கோழி எங்கே?
மகிழ்ந்துகூ விடுதல் என்ன?
நிதியரசர் எங்கே இருந்தாலும் அவர்களொடு
நேசமொன் றாயிருக்கும்;
நீதிமிகு நல்லோர்கள் எங்கிருந் தாலுமவர்
நிறைபட்சம் மறவார்கள்காண்!
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணாட்டதிபனே!
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மேலைமேவு குமரேசனே! 5

குமரேச சதகம்] [குருபாத தாசர்

## VI. பிள்ளைத் தமிழ்த்திரட்டு

துப்பள வுங்கட லைச்சுடு தொன்மை
யறிந்தழு தக்கடலும்
சூழ விழுந்து தொழுந்தொழில் போல
எழுந்தம திச்சுடரே!
வெப்பள வுங்கை மழுப்படை யாள
ரழைத்தன ரன்னவர்சேய்
மெய்ப்பதி சேரின் வராதன வந்தது
போலவி திப்பெயரோன்
தப்பள வில்லை விடுத்தி எனத்தன
தன்னமி னத்தொடுபோய்த்
தால மறைப்ப விரித்த சிறைக்கொடு
தாழ்வது போலவருத்
துப்பள மெங்கு நிரப்புசெ யூரா!
உருட்டுக சிறுதேரே;
உலகை வலம்புரி கலபம யூரா!
உருட்டுக சிறுதேரே. 1

சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ்] [அந்தகக்கவி வீரராகவ முதலியார்

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கைஅகழ்ந்
தெடுக்கும் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்

உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக, வருகவே! 2

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்] [குமர குருபரர்

புண்ணிய முதலே! பொங்கொளி மணியே!
பொய்யாப் பெருவாழ்வே!
பொள்ளலில் முத்தே! கள்ளமில் வித்தே!
புரையில் சுவைப்பாகே!
தண்ணிய அமுதே! மண்ணியல் மதியே!
தமிழ்நா வலரேறே!
சத்துவ நிதியே! பொத்திய மலரோய்!
சாடு பெரும்பகையே!
எண்ணிய அன்ப ருளத்தமு தூற
இனிக்கும் நறுந்தேனே!
என்றும் பத்தி ரசங்கனி கனியே!
எந்நா ளினுமெங்கட்கு
அண்ணிய பொருளே! ஆய்பவர் தெருளே!
ஆடுக செங்கீரை;
ஆரரு ளாகர! சேவையர் காவல!
ஆடுக செங்கீரை. 3

பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப்
பாடிய கவிவலவ !
பயனில தாகும் சிந்தா மணிவழி
படர்த லெனப்போதித்து
உத்திச் சுமையொரு தோள்வைத் திடுபுல்
உயர்த்தோன் மனமடியார்
உறுசெயல் நாடப் புரிமதி வலவ !
ஓலாவரு கந்தர்திறம்
முத்தித் திறமல என்றள விலர்பான்
முற்றிச் சிவமடைய
முயல்செயல் வலவ ! வயற்கண் மடைச்செறி
முத்த மணித்திரளையும்
தத்திப் புனல்பாய் குன்றைத் திருமுனி !
தாலோ தாலேலோ ;
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல் !
தாலோ தாலேலோ. 4

சேக்கிழார் பிள்ளைத் தமிழ்] [திரிசிரபுரம் வித்துவான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை

## VII. சீட்டுக் கவி

எவ்வன மனோன்மணி புதப்பணிகொள் சேதுபதி
இறைவன்மணி வாசன்மணியாய்
இலகுமணி சைவமணி சோமசுந் தரகுருவென்
ஐயன்மகிழ் சிந்தாமணி
செவ்வசன மொழிதமிழ்ச் சரவணப் பெருமாள்
சிரோமணி அனுப்புமோலை
செய்யதிரு மலைராயன் பட்டினத் தவரெலாம்
சிரசுமேற் கொண்டுகொண்க ;

இவ்வூரில் வந்துதிரு மலைராய னைப்போற்றி
இலகுகவி காளமேகம்
எமகண்ட மொருதினுசு பாடினல் நாமுமிங்கு
ஈரெட்டு வகைபாடுவோம்;
ஓவ்விதை அறிந்துகன தனவரிசை உதவினல்
உமதுகுடி வாழிவாழி!
உதவா திருப்பிரெனில் உமதுபட் டினமின்னம்
ஒருமிக்க மண்மாரியே! 1

—சரவணப் பெருமாள் கவிராயர்

விருதுகவி ராசன் கவிச்சக்ர வர்த்திவாய்
வீண்பேசு வார்கள்மிண்டன்
விஞ்சையர்கள் தம்பிரான் களங்கைப் படிக்காசு
விவரமுட னெழுதுமோலை
பொருதுபிர பந்தமதி லதிகவிறல் சேகரன்
புகழ்செய்தள வாய்குமாரன்
பூச்சக்ர மன்னர்பணி ரகுநாத சேதுபதி
பூரித் தெழுந்துகாண்க:
பரிதிமதி உள்ளளவு நிற்கும்ப்ர பந்தகவி
பாடிநின் கீர்த்திகேட்டுப்
பஞ்சலட் சணதமிழ்க் காணிக்கை யுங்கொண்டு
பரிவாக உனைநாடியே
இருபதின் காதவழி கடலேறி வந்தனன்
இருந்தமிழ் கொள்ளவேண்டி
இந்நேர மேநம்மை இருகாத வழியளவும்
எதிர்காண வரல்வேண்டுமே. 2

—படிக்காசுப் புலவர்

## VIII. பள்ளு

### குறிஞ்சி

பாரப் பதலை அருவி பெருகிப்
பதறிக் கதறிக் கொதித்துநம்
பாய்ந்து சிலையி லோய்ந்து திகழும்
பகட்டு மருதம் பொருப்பொடே
சேரப் புரளத் தரளத் திரளைச்
சிதறிக் கதறிச் சிந்துரம்
தியங்கு புனலில் மயங்கித் தியங்கிச்
செயங்கெட் டொடுங்கி நடுங்கவே
ஆரத் தருவை அலைத்துக் குலைத்து
அகிலைப் பறித்து முறித்துநீள்
ஆம்பி ரத்தொடு காம்பு மிக்குயர்
தேம்பு னத்திடை மோதியே
வாரைப் பொருது குயத்தி குறத்தி
வள்ளி கணவன் மலர்ப்பதம்
வழுத்திக் குறிஞ்சி நிலத்தைக் கடந்து
வந்து பாலை அடைந்ததே. 1

### பள்ளன் கூற்று

முன்னுபுகழ்த் தென்கதிரை வேலர்மகிழ் கின்ற—தூய
மாவிலி கங்கைவயல் தன்னில்விளைந்த
செந்நெலறுத் தேனவைகள் சேரமலை போலச்
செப்பமுட னயிரம்போர் கட்டிமிதித்தேன்
கொன்னுலவு நாகமெனத் தூற்றிக்குவித்தேன்—அதில்
கோவில்விதைக் கைந்நூறுகோட் டைகட்டிவைத்தேன்
இன்னதள மென்றுகண்டு கண்களிக்க—இப்போ
நீருமங்கெழுந் தருளவேணும் பண்ணையாண்டே! 2

—கதிரைமலைப்பள்ளு

## IX. குறவஞ்சி

### திரிகூட மலைச்சிறப்பு

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்;
　　முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண் டோடும்;
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்;
　　கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்;
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்;
　　தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்;
வழங்குகொடை மகராசர் குறும்பலவி லீசர்
　　வளம்பெருகுந் திரிகூட மலைஎங்கள் மலையே. 1

ஆடுமர வீனுமணி கோடிவெயி லெறிக்கும்;
　　அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்;
வேடுவர்கள் தினைவிதைக்கச் சாடுபுனந் தோறும்
　　விந்தையகில் குங்குமமும் சந்தனமும் நாறும்;
காடுதொறும் ஓடிவரை ஆடுகுதி பாயும்;
　　காகமணு காமலையில் மேகநிரை சாயும்;
நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
　　நிலைதங்குந் திரிகூட மலைஎங்கள் மலையே. 2

கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே!
　　கொழுநனுக்குக் காணிமலை பழனிமலை அம்மே!
எல்லுலவும் விந்தமலை எந்தம்மலை அம்மே!
　　இமயமலை என்னுடைய தமயன்மலை அம்மே!
சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே!
　　தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே!
செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்க ளாகவும்
　　திரிகூட மலைஎங்கள் செல்வமலை அம்மே! 3

ஒருகுலத்திற் பெண்கள்கொடோம்; ஒருகுலத்திற் கொள்ளோம்:
உறவுபிடித் தாலும்விடோம்; குறவர்குலம் நாங்கள்;
வெருவிவரும் தினைப்புனத்திற் பெருமிருகம் விலக்கி
வேங்கையாய் வெயில்மறைத்த பாங்குதனைக் குறித்தே
அருளிலஞ்சி வேலர்தமக் கொருபெண்ணைக் கொடுத்தோம்;
ஆதினத்து மலைகளெல்லாம் சீதனமாக் கொடுத்தோம்;
பரிதிமலை சூழ்மலையைத் துருவனுக்குக் கொடுத்தோம்
பரமர்திரி கூடமலை பழையமலை அம்மே!

திருக்குற்றாலக் குறவஞ்சி] [திரிகூடராசப்பக் கவிராயர்

---

# X. நீதி நூல்கள்

## 1. ஆசாரக்கோவை

நன்றி அறிதல், பொறையுடைமை, இன்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியோ
டொப்புர வாற்ற அறிதல், அறிவுடைமை,
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து. 1

அரசன், உவாத்தியான், தாய்தந்தை, தம்முன்,
நிகரில் குரவர் இவர்; இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே
யாவரும் கண்ட நெறி. 2

விரைந்துரையார்; மேன்மே லுரையார்; பொய் யாய
பரிந்துரையார்; பாரித் துரையார்;—ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து. 3

—பெருவாயின் முள்ளியார்

## 2. பழமொழி

கற்றதொன்(று) இன்றி விடினும் குடிப்பிறந்தார்
மற்றொன்(று) அறிவாரின் மாண மிகநல்லார்;
பொற்ப உரைப்பான் புகவேண்டா; கொற்சேரித்
துன்னூசி விற்பவர் இல். 1

நிரந்து வழிவந்த நீசருள் எல்லாம்
பரந்தொருவர் நாடுங்கால் பண்புடையார் தோன்றார்;
மரம்பயில் சோலை மலைநாட! என்றும்
குரங்கினுள் நன்முகத்த இல். 2

பெரியோர்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர! அதுவன்றே
நாய்மேல் தவிசிடும் ஆறு. 3

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்;—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும்தன் வாயார் கெடும். 4

பெருமலை நாட! பிறரறிய லாகா
அருமறையை ஆன்றோரே காப்பர்;—அருமறையை
நெஞ்சில் சிறியார்க்(கு) உரைத்தல் பனையின்மேல்
பஞ்சிவைத்(து) எஃகிவிட் டற்று. 5

எனைப்பலவே ஆயினும் சேய்த்தாப் பெறலின்
தினைத்துணையே யானும் அணிக்கோடல் நன்றே;
இனக்கலை தேன்கிழிக்கும் ஏகல்சூழ் வெற்ப!
பனைப்பதித்(து) உண்ணார் பழம். 6

புன்சொல்லும் நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ ?
புன்சொல் இடர்ப்படுப்ப(து) அல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப(து) இல். 7

நெறியால் உணராது நீர்மையும் இன்றிச்
சிறியார் எளியாரால் என்று—பெரியாரைத்
தங்கள்நேர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று. 8

கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்க(து)ஓர்
பொல்லாத(து) இல்லை ஒருவற்கு ;—நல்லாய் !
இழுக்கத்தின் மிக்க இழி(வு)இல்லை ; இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு. 9

உணற்(கு)இனிய இன்னீர் பிறிதுழியில் என்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்—கணக்கினை
முற்றப் பகலும் முனியாது இனி(து)ஓதிக்
கற்றலின் கேட்டலே நன்று. 10

—முன்றுறை அரையனார்

## 3. நாலடியார்

இம்மை பயக்குமால் ; ஈயக் குறைவின்றால் ;
தம்மை விளக்குமால் ; தாமுளராக் கேடின்றால் ;
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. 1

கல்வி கரையில ; கற்பவர் நாள்சில ;
மெல்ல நினைக்கின் பிணிபல ;—தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. 2

கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர் ;—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு. 3

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே ;—குருத்திற்(கு)
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுரம்இ லாளர் தொடர்பு. 4

யானை அனையவர் நண்(பு) ஒரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் ;—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் ; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய். 5

தான்கெடினும் தக்கார்கே(டு) எண்ணற்க ; தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத்(து) உண்ணற்க ;—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ(டு) இடைமிடைந்த சொல். 6

கல்லாது போகிய நாளும் பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும்—ஒல்வது
கொடா அ(து) ஒழிந்த பகலும் உரைப்பின்
படா அவாம் பண்புடையார் கண். 7

புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை ;—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள் அலறச்
சென்றான் எனப்படுத லால். 8

அங்கண் விசும்பின் அகல்நிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் ;—திங்கள்
மறுவாற்றும் சான்றோர் அஃதாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா(சு) உறின். 9

கடையாயார் நட்பிற் கமுகனையார் ; ஏனை
இடையாயார் தெங்கி னனையார் ;—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு. 10

ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர் ;—கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்
எழுநூறுந் தீதாய் விடும். 11

பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம் ;—தேரின்
சிறியார் சிறுமையும் தோன்றாதாம் நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து. 12

நெடுங்கால மோடினும் நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கும் ;—சுடுங்கனலை
நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம். 13

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் ;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. 14

—சமண முனிவர்கள்

## 4. திருக்குறள்

அறத்தினூஉங்(கு) ஆக்கமும் இல்லை ; அதனை
மறத்தலின் ஊங்(கு)இல்லை கேடு. 1

தந்தை மகற்(கு) ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். 2

ஈன்ற பொழுதின் பெரி(து)உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 3

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 4

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 5

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும். 6

உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 7

அருள்இலார்க் கவ்வுலகம் இல்லை; பொருள்இலார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. 8

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். 9

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 10

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 11

எப்பொருள் எத்தன்மைத்(து) ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு. 12

இருவே(று) உலகத்(து) இயற்கை; திருவேறு;
தெள்ளியர் ஆதலும் வேறு. 13

ஊழின் பெருவலி யாஉள? மற்றொன்று
சூழினும் தான்முந்(து) உறும். 14

கண்உடையர் என்பவர் கற்றோர்; முகத்(து)இரண்டு
புண்உடையர் கல்லா தவர். 15

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 16

தொட்டனைத்(து) ஊறும் மணற்கேணி; மாந்தர்க்குத்
கற்றனைத்(து) ஊறும் அறிவு. 17

யாதானும் நாடாமால்; ஊராமால்; என்னொருவன்
சாந்துணையும் கல்லாத ஆறு? 18

விலங்கொடு மக்கள் அனையர்; இலங்குநூல்
கற்றாரோ(டு) ஏனை யவர். 19

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 20

தெய்வத்தால் ஆகா(து) எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 21

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலை(வு)இன்றித்
தாழா(து) உஞற்று பவர். 22

நகுதல் பொருட்(டு)அன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்(று) இடித்தல் பொருட்டு. 23

முகம்நக நட்பது நட்(பு)அன்று; நெஞ்சத்(து)
அகம்நக நட்பது நட்பு. 24

—திருவள்ளுவர்

14600
சென்னை-600 008.

Printed at the Rathnam Press, 11, Badrian Street, G. T., Madras.